
# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No.4 of 2007**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Mt. Wellington, Auckland 1641
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

பத்திரிகையை வாசித்துப் பயனடைந்து வரும் நல்ல உள்ளங்கள் அனைத்திற்கும் என்னுடைய வாழ்த்துக்கள். உங்களுடைய அன்பாலும், ஜெபத்தாலும் தொடர்ந்து பத்திரிகையைத் தடையில்லாமல் வெளியிட்டு வரமுடிகிறது. கடிதங்களின் மூலம் நீங்கள் அடைந்து வரும் பயன்களை விளக்கும்போது எங்கள் தலைமேல் சுமத்தப்பட்டிருக்கும் பெரிய பொறுப்பை நாம் உணர்கிறோம். பரந்து விரிந்திரிக்கும் சமுத்திரத்தில் விழும் சிறு துளி போல் இந்தக் காலத்தில் சீர்திருத்தப் பணியை தமிழர்கள் மத்தியில் செய்யப் புறப்பட்டுக் குழந்தைபோல் தவழ்ந்துகொண்டிருக்கிறது திருமறைத்தீபம். திருமறைத் தீபம இதழ்களை வாசித்துக் கண்திறக்கப்பட்டதாக எழுதும் வாசகர்களை நினைத்துப் பெற்ற தாய் அடையும் மகிழ்ச்சியை அடைகிறார்கள் பத்திரிகைக் குழுவினரும் அவர்களைச் சார்ந்தவர்களும்.

பத்திரிகை பிறந்து பல வருடங்களாகியும் தமிழ் கிறிஸ்தவம் இருக்கும் நிலையில் நாம் பெரு மாற்றத்தைப் பார்க்கவில்லை. கிறிஸ்தவர்கள் மத்தியில் நிச்சயம் இன்று ஓர் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. நம் மத்தியில் இருக்கும் போலித்தனம் எந்தளவுக்கு வேரூன்றிப் பரவியிருக்கிறது என்ற நிதர்சனமான உண்மையையும் கிறிஸ்தவர்களில் பலர் இன்று உணர்ந்திருக்கிறார்கள். போக வேண்டிய பாதை நீண்டது என்பதை நாம் ஆரம்பத்திலேயே அறிந்திருந்தோம். நடக்கும்போது கல்லும், முள்ளும் காலில் பதிந்து இரத்தம் சொட்டும் என்பதும் தெரிந்திருந்தது. கால் தவறிச் சாணத்தில் பதிந்து அசிங்கப்பட்டுவிடும் என்பதும் நமக்குத் தெரியாமலிருக்கவில்லை. பாதையென்றொன்றிருந்து நடக்கத்தான் வேண்டும் என்ற நிலையேற்பட்டுவிட்டால் இதெல்லாம் சகஜம்தான் என்பதும் நமக்குப் புரியாமலிருக்கவில்லை. இருக்கின்ற போலித்தனத்தை எதிர்த்துப் போராடி, இருக்கவேண்டிய சீர்திருத்தத்தை நிலைநிறுத்தப் பாடுபட்டால் காலில் பட்டுவிடும் அசிங்கத்தையெல்லாம் பொறுட்படுத்த முடியுமா? பயணத்தில் ஏற்பட்டுவருகின்ற சங்கடங்களையெல்லாம் மறந்து இதயத்தைக் களிப்படையச் செய்கிறது தொடர்ந்து நம்மோடு இணைந்து நடக்கத் தொடங்கியிருப்பவர்களின் நிலையான நட்பும், நீங்காத அன்பும். பாதை நீளமானதுதான்; பயணமும் தூரமானதுதான்; தொல்லைகளும் இனித் தொடருந்தான். முடிவைப் பற்றி மட்டும் எங்களுக்கு எப்போதும் எந்த சந்தேகமும் இருந்ததில்லை. - ஆசிரியர்.

# அவதூறு சொல்லாதே!

சமீப காலமாக அவதூறு சொல்லுவதைக் (புறங்கூறுதல் அல்லது பழித்துரைத்தல்) குறித்து நான் அதிகம் சிந்திக்க நேர்ந்தது. அதற்கான காரணத்தை நான் இங்கே விளக்காமல் இருக்க முடியாது. கடந்த சில வருடங்களாக எனக்கு அறிமுகமான சில போதகர்களைக் குறித்து போதக ஊழியத்தில் இருப்பவர்களே அவதூறாக எழுதியும், பேசியும் வந்திருக்கிறார்கள். அதுபற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும், கிறிஸ்தவ நண்பர்களுக்கும் நான் பல தடவைகள் ஆலோசனை தர நேர்ந்தது. அத்தோடு வேறுசிலர் 'நியூஸ் லெட்டர்' அனுப்புகிறோம் என்ற பெயரில் சபை சகோதரர்களைப் பற்றியும் ஏனைய போதகர்களைப் பற்றியும் அவதூறாக எழுதி சபைகளுக்கும், நண்பர்களுக்கும் அனுப்பி வருகிறார்கள். சில போதகர்கள் தங்களுக்குப் பிடிக்காதவர்கள் அல்லது தங்களோடு முரண்படுகிறவர்கள் சபையில் இருந்தால் அவர்களை அடக்குவதற்காக அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி (Private life) ஏறுக்குமாறாக அநியாயமான பழிகளை அவர்கள் மேல் சுமத்தி பகிரங்கப்படுத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். வேறுசிலர் சபையில் தங்களுக்குப் பிடிக்காதவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டோ, குறிப்பிடாமலோ பிரசங்க மேடையில் இருந்து அடிக்கடி அவர்களைத் தாக்கிப் பேசி வருவதை வழமையாகக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் சக சகோதரர்கள் மீது குற்றஞ்சாட்டி அவதூறான செய்திகளைப் பரப்பி வரும் செயல் கிறிஸ்தவர்கள் மத்தியில் வெகு சாதாரணமாகவே இன்று நடந்து வருகிறதை நான் காண்கிறேன். தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் இது ஒரு கலாச்சாரமாக உருவெடுத்திருப்பது என்னை அதிகம் சிந்திக்க வைத்தது. அதுமட்டுமல்லாமல் கிறிஸ்தவர்களுக்குப் பயன்படும்படியாக இது பற்றி விபரமாக எழுத வேண்டும் என்றும் நான் தீர்மானித்தேன்.

## நியாமான விமர்சனமும், அவதூறும்

முதலில் அவதூறு சொல்லுவதற்கும் நியாயமான முறையில் எதையும் வேத அடிப்படையில் விமர்சனம் செய்வதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளங்கிக்கொள்ள வேண்டும். ஒருவர் எழுத்தில் வடித்திருக்கும் வேதக் கருத்துகளையும், இறையியல் போதனைகளையும் வேத சான்றுகளோடு நாம் விமர்சனம் செய்யலாம். ஒரு இயக்கத்தின் அல்லது தனிமனிதருடைய ஊழியத்தை, அது கிறிஸ்தவ திருச்சபை ஊழியத்துக்கும், கிறிஸ்தவர்களுக்கும் பெரும் ஆபத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்து மானால் அதன் குறைகளை வேத அடிப்படையில் விமர்சனம் செய்யலாம். அதிலும் அந்த இயக்கத்தினதும், இயக்கத்தைச் சார்ந்தவர்களினதும் பெயரைக் குறிப்பிட நேர்ந்தாலும் அவர்களுடைய போதனைகளையும், ஊழியநடவடிக்கை

களையும் மட்டும் வேத அடிப்படையில் விமர்சனம் செய்யலாம். ஆனால், தனிப்பட்ட முறையில் அவர்களுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி இல்லாதது பொல்லாததை எழுதியும், அல்லது அவர்களைப்பற்றிக் காதால் கேள்விப்பட்ட எதையும் பகிரங்கப்படுத்தி பேசியும் எழுதியும், அவர்களு டைய குடும்பத்தைப் பாதிக்கும் முறையில் அவற்றைப் பரப்பியும் வருவது பிசாசுத்தனத்தைத்தவிர வேறில்லை. வேத அடிப்படையில் நியாயமான முறையில் விமர்சனம் செய்வதற்கும் அவதூறு சொல்லுவதற்கும் இடையில் பெரும் வேறுபாடு இருக்கிறது. ஒரு தனி மனிதனின் மனதைப் புண்படுத்தி அவனுடைய மரியாதையைக் (Reputation) குறைவுபடுத்தும் வகையில் அவனுடைய வாழ்க்கையைப் பற்றி அவதூறாகப் பேசுவதும், எழுதுவதற்கும் பெயர் விமர்சனம் அல்ல. இதே பத்திரிகையில் சில தடவைகள் பெனி ஹின், தினகரன், சாம் ஜெபத்துரை போன்ற கெரிஸ்மெடிக் ஊழியர்களின் போதனைகளைப்பற்றி பொதுவாக நாம் விமர்சித்திருக்கிறோம். அந்த விமர் சனங்கள் வேதத்திற்கு முரணான அவர்களுடைய போதனைகள், ஊழிய நடைமுறைகள் பற்றியவை மட்டுமே. அவர்களுடைய தனிப்பட்ட சொந்த வாழ்க்கையைத் தொட்டு நாம் ஒருபோதும் அவர்களைப் பத்திரிகையில் எழுதியதில்லை. அப்படிச் செய்வதற்குப் பெயர்தான் அவதூறு செய்வது. வேதம் அதற்கு அனுமதி தரவில்லை. சிலர் தங்களுடைய பத்திரிகையை தனிப்பட்ட மனிதர்களுடைய வாழ்க்கை பற்றிய செய்திகளைத் தரவும், அவர்களுடைய குடும்பத்தைப் பற்றி எழுதவுமே பயன்படுத்தி வருகிறார்கள். இது தமிழ் நாட்டில் அதிகம். இது அநாகரீகமான செயல். சமுதாய இங்கிதம் (Social Etiquette) அறியாதவர்கள் செய்கிற அறிவீனமான செயல்.

'அவதூறு சொல்லுவது' பற்றி கர்த்தரின் வேதம் பொதுவாக என்ன சொல்கிறது என்பதை பார்ப்பதவசியம். இதைப் பற்றி வேதம் அளவற்ற போதனைகளைத் தந்து நம்மை எச்சரிக்கிறது. நீதி. 6:16-19ன்படி கர்த்தர் வெறுக்கின்றதும், அருவருக்கின்றதுமான ஆறுகாரியங்களின் பட்டியலில் இதைப் 'பொய்நாவு' என்றும், 'அபத்தம் பேசும் பொய்சாட்சி' என்றும் விளக்குகின்றது. 'பொய் சாட்சி சொல்லாதே' என்று யாத். 23:1 அதைத் தடைசெய்கிறது. புதிய ஏற்பாட்டிலும் அதற்கெதிரான கடுமையான கட்டளைகள் இருக்கின்றன. 1 தீமோ. 3:11ல் போதகர்களினதும், உதவிக்காரர் களினதும் மனைவிமார் 'அவதூறு பண்ணாதவர்களாக' இருக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். அதாவது அடுத்தவர்களைப்பற்றி வீண் வம்புப் பேச்சு பேசாதவர்களாகவும், புறங்கூறாதவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும். பவுல் எபேசி. 4ல் எப்போதும் நாம் சத்தியத்தை (உண்மையை) மட்டுமே பேச வேண்டும் என்கிறார். 4:25ல் "பொய்களைக் களைந்து அவனவன் பிறனுடன் மெய்யைப் பேச வேண்டும்" என்கிறார். 4:29ல் "கெட்ட வார்த்தை (Corrupt speech) ஒன்றும் உங்கள் வாயில் இருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தையையே கேட்கிறவர் களுக்கு பிரயோஜனப்படும்படிப் பேசுங்கள்" என்கிறார். சங்கீதம் 50:20, "நீ எப்போதும் உன் சகோதரனுக்கு எதிராகப் பேசி உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்" என்கிறது (இந்திய வேதாகம இலக்கிய மொழிபெயர்ப்பு). அதாவது, சகோதரனுக்கு எதிராக அவதூறாகப் பேசுவது

நம் கூடப்பிறந்தவனுக்கு எதிராகக் குழிபறிப்பது போலாகும் என்கிறார் சங்கீதக்காரன். நீதி. 10:18, "புறங்கூறுகிறவன் மதிகேடன்" என்கிறது. இங்கே நீதிமொழிகள் அவதூறு என்ற சொல்லுக்கு 'புறங்கூறுதல்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பதைக் காண்கிறோம். இந்தளவுக்கு மோசமான அவதூறு சொல்லுதலைப் பற்றிக் கர்த்தர் சங்கீதம் 101:5ல், "அயலானை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனை அழிப்பேன்" என்கிறார். எனவே, அவதூறு சொல்லுவதைக் கர்த்தர் நிச்சயமாக விரும்பவில்லை; அவதூறு சொல்லுகிறவனையும் அவர் மதிக்கவில்லை என்பதை வேதத்தில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இன்றும் நாம் தொடர்ந்து பின்பற்றிவர வேண்டிய கர்த்தரின் பத்துக் கட்டளைகளில் இரண்டு கட்டளைகள் அவதூறு சொல்லுவதைத் தடைசெய்கின்றன.

## அவதூறு சொல்லுவது என்றால் என்ன?

'அவதூறு செல்லுவது' என்றால் என்ன என்று இனி விளக்கமாகக் கவனிப்போம். இதற்கு வேதம் பயன்படுத்தும் ஆங்கில வார்த்தை Slander என்பதாகும். இது 1 தீமோ. 3:11ல் 'அவதூறு' என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் எண்ணாகமம் 14:36ல் இது 'துர்ச்செய்தி' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சங்கீதம் 31:13ல் இதற்கு 'அவதூறு' என்ற வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைக்கு துர்ச்செய்தி என்பது பொதுவான பொருளானாலும் அதைப் பூரணமாக விளங்கிக் கொள்ள மெலும் அதை ஆராய வேண்டியது அவசியமாகும். அவதூறு சொல்லுவதில் எத்தனை பாவமான செயல்கள் அடங்கியிருக்கின்றன என்பதை நாம் வேதத்தைப் படித்துப் பார்க்கின்றபோது தெரிந்து கொள்ள முடிகின்றது. அவதூறு சொல்லுவதில் அடங்கியிருக்கின்ற துர்ச் செயல்களைக் கவனிப்போம்:

1. இரகசியமாய்ப் பேசுதல் (Whispering) - ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் தவறான முறையில் இரகசியமாகப் பேசுதல் (ரோமர் 1:30; 2 கொரி. 12:20).

2. அவதூறு சொல்லுதல் (Backbiting) - இதைப் புறங்கூறுதல் என்கிறோம் (ரோமர் 1:30; 2 கொரி. 12:20).

3. கேடான சந்தேகங்கள் (Evil surmising) - இதை தமிழ் வேதம் 'பொல்லாத சம்சயங்கள்' என்று மொழிபெயர்த்திருக்கிறது. ஒருவரைப் பற்றி ஆதாரமேயில்லாமல் சந்தேகங்களை எழுப்பி தவறாகப் பேசுதல் (1 தீமோ. 6:4).

4. கோள் சொல்லுதல் (Tale-bearing) - லேவி. 19:16.

5. அலப்புவாயன் (Babbling) - ஒன்றுக்கும் உதவாத வீண்பேச்சு பேசுகிறவன் (பிரசங்கி 10:11).

6. அலப்பல் (Tattling) - நேரத்தை வீணாக்கி அடுத்தவர்களைப் பற்றிப் பேசித்திரிதல் (1 தீமோ. 5:13).

7. மற்றவர்களுக்கு விரோதமாகப் பேசுதல் (Evil speaking) - சங். 41:5; 109:20.

8. அவதூறு சொல்லுதல் (Defaming) - மற்றவர்களைப் பற்றி இல்லாததைச்

சொல்லி அவர்களுடைய பெயரைக் கெடுத்தல் (யெரே. 20:10; 1 கொரி. 4:13).

9. பொய்சாட்சி சொல்லுதல் (Bearing False witness) - பார்க்காத ஒன்றைப் பார்த்ததுபோல் ஒருவருக்கெதிராக சாட்சியமளித்தல் (யாத்தி. 20:16; உபா. 5:20; லூக்கா 3:14).

10. மற்றவர்களைத் தவறாக எடைபோட்டு பழித்துப் பேசுதல் (Judging uncharitably) - யாக். 4:11-12.

11. மற்றவர்களைப் பற்றி தவறான செய்தி கொடுத்தல் (Raising false reports) - யாத்தி. 23:1.

12. ஒருவர் செய்த தவறைத் திரும்பத் திரும்பச் சொல்லி இன்பம் காணுதல் (Repeating matters) - நீதி. 17:9.

அவதூறு சொல்லுவதில் இத்தனையும் அடங்கியிருக்கிறது. அவதூறு சொல்லுவது இத்தனைப் பெரிய பாவமாக இருப்பதால்தான் அதைச் செய்வதற்கு நமது சரீரத்தில் இருந்து உதவுகின்ற நாவை நாம் எப்படி அடக்கியாள வேண்டும் என்று யாக்கோபு 3ம் அதிகாரத்தில் அனேக உதாரணங்களுடன் ஆணித்தரமான போதனையைத் தருகிறார்.

ஒருவரைப் பற்றி இல்லாததை இருப்பதுபோலும், நடக்காததை நடந்தது போலும் வர்ணித்துச் சொல்லுவதற்குப் பெயர்தான் அவதூறு சொல்லுதல். அவதூறு சொல்லுதல் புறங்கூறுதல், பொல்லாங்கு சொல்லுதல், பழித் துரைத்தல் என்று பல பெயர்களில் விளக்கப்படுகின்றது. தவறானவிதத்தில் ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் இரகசியமாகவோ அல்லது பலருமறியப் பேசுவதை இது குறிக்கிறது. உடனேயே அவதூறு சொல்லுவதை வழக்க மாகக் கொண்டிருக்கிறவர்கள், "ஐயா! நான் நடக்காததைச் சொல்ல வில்லையே, நடந்ததைப் பற்றித்தானே சொல்கிறேன்" என்பார்கள். ஒரு மனிதன் தவறாக நடந்துவிட்டால் நாம் மற்றவர்களோடு அதைப்பற்றிய விவாதத்தில் ஈடுபடவேண்டும் என்றும், எழுத்தில் வடித்து ஊரே அறியும் படிச் செய்யவேண்டும் என்றும் வேதம் எங்கே சொல்லுகிறது? அதைப் பற்றிப் பேசாதே என்றுதான் வேதம் சொல்லுகிறதை நான் பார்க்கிறேன். அந்த மனிதன் அப்படியே அதை செய்திருந்தாலும் அவனைப் பற்றிப் பேசியும், எழுதியும் பலரறியச் செய்வதால் அவனைத் திருத்த முடியும் என்று வேதம் எங்கே சொல்லுகிறது? நடந்த விஷயம் தங்களுக்கு இனிப்பா யிருப்பதாலேயே அவதூறு சொல்லுகிறவர்கள் அதைப்பற்றி மற்றவர்க ளோடு பேச முயல்கிறார்கள். தற்செயலாக ஒருவன் இறக்கக் காரணமாக இருந்தவர்களைக் காப்பாற்றுவதற்காக அடைக்கலப் பட்டணங்களைக் (Cities of Refuge) கர்த்தர் ஏற்படுத்தித் தந்திருந்தார் என்று பழைய ஏற்பாட் டில் வாசிக்கிறோம். நீதியுள்ள கர்த்தர் எவருடைய தவறுகளையும் சுட்டிக் காட்டித் திருத்த நீதியான அணுகுமுறைகளைக் கையாண்டிருக்கிறார். அவர்களைத் தெருவில் வைத்து மானபங்கப்படுத்த ஒருபோதும் நினைக்க வில்லை. எல்லாவிதத்திலும் ஒருவன் செய்தது தவறு என்று நிரூபிக்கப்பட்ட பிறகே கர்த்தர் தண்டனையையும் அளிக்கிறார். ஒருவன் செய்தது தவறா

என்பதை கர்த்தருடைய வார்த்தையைப் பின்பற்றி வேத அடிப்படையில் தீர்மானிக்க வேண்டிய இடத்தில் தீர்மானிக்காமல் நம்மை நாமே நீதிபதி யாக்கிக் கொண்டு அவனைப் பற்றி அவதூறாகப் பேசியும், எழுதியும் வருவது அவனைக் கொலை செய்வதற்கு சமமானதாகும்.

நடக்காத ஒன்றை நடந்ததுபோல் காட்டி ஒருவரைப் பற்றிப் பேசுவது மட்டும் அவதூறு அல்ல. நடந்த ஒரு விஷயத்தைத் திரித்து அதைப் பூதாகாரமாக்கி தவறானவிதத்தில் அது மற்றவர்களுடைய பார்வைக்குத் தெரியும்படிச் சொல்லுவதும் இதில் அடங்கும். ஒருவர் செய்த அல்லது செய்கின்ற காரியத்திற்கு தவறான உள்நோக்கம் கற்பித்து இல்லாததை இருப்பதுபோல் பாவித்துப் பேசுவதும் அவதூறு சொல்லுவதாகும். இயேசு கிறிஸ்து பாவிகளோடு சமமாக இருந்து பேசிப் பழகியதைத் திரித்து பரிசேயர்கள் அவரைப் பற்றித் தவறான எண்ணத்தை மற்றவர்கள் மத்தியில் ஏற்படுத்த முயலவில்லையா? பரிசேயர்கள் இங்கே உள்ளதை உள்ளபடிப் பார்க்கவில்லை; அதைத் தவறான நோக்கத்தோடு பார்த்தார் கள். இதைத்தான் அவதூறு செய்வது என்கிறது கர்த்தரின் வேதம். பவுல் அப்போஸ்தலனைப் பற்றி அவதூறாகப் பேசியவர்கள் கொரிந்து சபை யிலும், கலாத்தியாவிலும் இருந்ததைப் பவுலே அந்நிருபங்களில் நமக்கு விளக்குகிறார். அவதூறு சொல்லுகிறவர்கள் பொய்யாக ஒரு செயலை வர்ணித்துக் காட்டுவதைக் கடமையாகக் கொண்டிருப்பதால் அந்தக் காரியத்துக்கு ஒருபோதும் மெய்யான சாட்சிகள் இருக்காது. இப்படிக் கேள்விப்பட்டேன், அப்படித்தான் என் பார்வைக்குப்பட்டது, இப்படி யொருவர் சொன்னார் என்றுதான் அவர்கள் சொல்லுவார்களே தவிர அவதூறு சொல்லுகிறவர்கள் நல்ல நோக்கத்தோடு ஒருபோதும் அதைச் செய்வதில்லை. அவதூறு சொல்லுகிறவர்கள் ஒருவரைப் பற்றிய தப்பான அபிப்பிராயத்தை மற்றவர்களின் இருதயத்தில் ஏற்படுத்துகிறார்கள்.

அவதூறு சொல்லுவது தமிழினத்தில் அதிகம். கர்த்தரை அறியாத மக்கள் மத்தியில் இது வெகுசகஜம். இதற்கு தமிழினத்து நாளிதழ்களே நல்ல உதாரணம். அரசியல்வாதிகள், சினிமா நடிகர்கள் என்று இந்நாளிதழ்கள் ஒருவரையும் விடுவதில்லை. இந்தமாதிரியான பொய்யான செய்திகள்தான் பத்திரிகை விற்பனையை உயர்த்தும் என்பதால் நெஞ்சில் ஈரமில்லாமல் யார், எவர் என்று பார்க்காமலும், அவர்களுக்கு மனைவி, பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற அக்கறையில்லாமலும் பத்திரிகையில் எழுதுவார்கள். அப்படி செய்திகள் வாராத பத்திரிகையே இருக்காது. எவராவது தங்கள் மேல் வழக்குப் போட்டுவிடுவார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டால் 'சிட்டுக் குருவியார்' சொன்னார் என்ற பெயரில் இந்தப் பத்திரிகைகள் அவதூறு செய்திகளை வெளியிடும். இதேபோலத்தான் கிராமத்துக் கிணத்தடியும். அங்கே கூடிவரும் பெண்களுக்கு வாய்க்கு அவல் போட்டதுபோலத்தான் அவதூறு செய்திகள். நாக்கூசாமல் அடுத்தவர்களைப் பற்றி அவதூறு சொல்லிப் பேசுவதில் அவர்கள் இன்பம் காண்கிறார்கள். இதிலேயே அவர்கள் நாளைப் போக்கிவிடுவார்கள். எத்தனை மகான்கள் நம்மினத்தில் பிறந்திருந்தும், வள்ளுவர் குறள்களை எழுதியிருந்தும் இந்தக் கலாச்சாரம் தொலைந்தபாடில்லை. இது தவறு என்ற உணர்வே இல்லாமல் நம்மினம்

வாழ்ந்து வருகின்றது. நம் சமுதாயத்தில் இதற்கெதிராக சட்டங்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. சட்டங்கள் இருந்தாலும் எல்லோராலும் சட்டத்தைப் பயன்படுத்தி நீதிமன்றம் போய் தங்களுடைய பெயரைப் பாதுகாத்துக்கொள்ளுமளவுக்கு பணம் இருப்பதில்லை. ஆனால், அவதூறு சொல்லுவதற்கெதிராக சட்டம் நாட்டில் இருப்பதற்குக் காரணமே அவதூறு சொல்லுவது பெருங்குற்றம் என்பதால்தான். கர்த்தரை அறியாமல் இருப்ப தாலும், அவருடைய நீதிக்குக் கட்டுப்படாமல் இருப்பதாலுந்தான் கர்த்தரை அறியாதவர்கள் அவதூறு சொல்லுகிறார்கள் என்பது நமக்குத் தெரியாம லில்லை. அதிலும் கர்த்தரை அறியாதவர்கள் மத்தியிலும்கூட பலர் அவதூறு சொல்லுவதை அசிங்கமான செயலாகத்தான் கருதுகிறார்கள். அவதூறு சொல்லுவது நம்மினத்துக் கலாச்சாரமாகப் போய்விட்டபோதிலும் கர்த்தரின் ஒழுக்கக் கட்டுப்பாட்டின்படி வாழும் வல்லமையற்ற புறஜாதியார் கூட இதை யோக்கியமான செயலாகக் கருதுவதில்லை.

கர்த்தருடைய மக்கள் அவதூறு சொல்லுவது கர்த்தருக்கு பொறுக்க முடியாத காரியம். இது கர்த்தருடைய மக்கள் மத்தியில் இருக்கக்கூடாத காரியம். அவதூறு சொல்லுகிறவர்கள் அதைத் தெரிந்துதான் செய்கிறார் களா என்பது தெரியவில்லை. அது எத்தனைப் பெரிய குற்றம் என்பது தெரிந்தால் இதயமிருப்பவர்கள் அதைச் செய்யக்கூசுவார்கள். கிறிஸ்தவர் கள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்கள் அவதூறு சொல்வார் களானால் அதற்கு மூன்று காரணங்கள் மட்டுமே இருக்க முடியும். (1) அவர்களுடைய இருதயம் பாழாகிவிட்டது. (2) அவர்களுக்கு கர்த்தரின் கட்டளைகளைப் பற்றியோ அல்லது பரிசுத்த வாழ்க்கையைப் பற்றியோ எந்த அறிவும் அக்கறையும் இல்லை. (3) சக சகோதரர்கள் மேல் அவர் களுக்கு காழ்ப்புணர்ச்சியும், எரிச்சலும், பொறாமையும் இருக்கிறது. அவதூறு சொல்கிற எவருமே இன்றுவரை இந்த மூன்றையும் ஏற்றுக் கொண்டதில்லை. அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது!

அவதூறு சொல்லுகிறவர்கள் தாம் செய்யும் அநியாயத்தை உணராமல் அதற்குக் காரணம் கற்பிப்பார்கள். தப்பு செய்கிறவன் திருந்த வேண்டும் என்றும், அவனால் அடுத்தவர்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற் காகவுமே அவனுடைய செயல்களை பகிரங்கப்படுத்துகிறேன் என்பார்கள். இதற்காக இவர்கள் ஒருவரைப் பற்றிப் பலரிடம் வாய்கூசாமல் பேசுவ தோடு, அவர்களைப் பற்றி அநியாயமாக எழுதிப் பலருக்கும் அனுப்பி வைப்பார்கள். இப்படி அந்தச் சகோதரனுடைய செயலை பலருக்கும் பகிரங்கப்படுத்தினால் அவன் திருந்த வாய்ப்பிருக்கிறது என்பது இவர்க ளுடைய வாதமாக இருக்கும். இந்தவிதமான செயலில் இருக்கும் ஒழுக்கக் குறைவை சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

(1) முதலில் அவதூறாகப் பேசுகிறவர்கள் ஒரு விஷயத்தைப் பலபேரிடம் இருந்து கேள்விப்பட்டிருப்பார்களே தவிர அது உண்மையானது என்பதற் கான ஆணித்தரமான வேதம் எதிர்பார்க்கும் எந்த சாட்சியங்களையும் வைத்திருக்க மாட்டார்கள். எப்போதுமே நமக்கு நேரடியாகத் தொடர் பில்லாத, ஒரு சகோதரனின் வாழ்க்கை பற்றிய எந்த விஷயத்தையும் (af-

fairs of his personal life) காதால் கேட்டு அதைப்பற்றி மற்றவர்களோடு பேசுவது ஒழுக்கக் கேடான செயல்.

(2) உண்மையிலேயே தவறு செய்துவிட்டதாக தாங்கள் நினைக்கும் சகோதரன் திருந்த வேண்டும் என்ற உணர்வும், அவன் மேல் அன்பும் இருந்தால் அவனோடு மட்டுமே அதைப்பற்றிப் பேச வேண்டும் என்ற வேத உண்மையைக் (மத்தேயு 18:15) குற்றஞ்சாட்டுகிறவர்கள் மறந்து விடுகிறார்கள் அல்லது அறியாதிருக்கிறார்கள். அவதூறு சொல்லுகிறவர்கள் ஒருபோதும் சம்பந்தப்பட்டவர்களோடு அதைப்பற்றிப் பேசுவதில்லை. அவர்களுடைய செயலுக்கான உள்நோக்கமே வேறு.

(3) எந்த விஷயமும் யார் வாய்வழி வந்தாலும் தகுந்த சாட்சியங்களோடு நிரூபிக்கப்பட வேண்டிய இடத்தில் நிரூபிக்கப்படும்வரை அது எந்த விதத்திலும் பகிரங்கப்படுத்தப்படக்கூடாது என்ற வேத உண்மையை (மத்தேயு 18:15-17) இவர்கள் புறக்கணித்து விடுகிறார்கள்.

(4) சகோதரனைத் திருத்துவதற்காக கர்த்தர் ஏற்படுத்தித் தந்திருக்கும் ஒரே நியாயஸ்தலமான உள்ளூர் திருச்சபைக்கு வேதபூர்வமான முறையில் விஷயத்தைத் தெரியப்படுத்தாமல் வெளியில் அதை பகிரங்கப்படுத்துவது பெருந்தவறு.

(5) சகோதரனைத் திருத்துவதற்காக கர்த்தர் ஏற்படுத்தித் தந்திருக்கும் செயல் முறைகளை நிராகரித்து இவர்கள் கண்டவர்களிடமும் அந்தச் சகோதரனைப் பற்றிப் பேசுவதாலும், எழுதி பகிரங்கப்படுத்துவதாலும் அவனுடைய மரியாதைக்கும் குடும்ப மரியாதைக்கும் பங்கமேற்படுத்துகிறோம் என்பதை உணராமல் போகிறார்கள். குற்றம் நிரூபிக்கப்படுகிறவரை எவரும் நிரபராதி என்பது அவிசுவாசிகளுக்குக்கூடத் தெரிந்திருக்கிற உண்மை.

(6) பகிரங்கமாக ஒரு சகோதரனைப் பற்றி அவதூறாக எழுதிப் பேசியவுடனேயே குற்றஞ்சாட்டியவர்கள் கர்த்தருக்கு முன் குற்றவாளிகளாக தங்களை நிறுத்திக்கொள்வதை உணராது போய்விடுகிறார்கள்.

(7) ஒரு சகோதரனைப் பற்றி அவதூறாகப் பேசிக் குற்றஞ்சாட்டுகிறவர்கள் எந்தளவுக்கு நிலைதடுமாறி பாவத்தால் தங்களுடைய இருதயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை மறந்துவிட்டிருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இத்தனை உண்மைகளையும் மறந்தோ, அறியாமலோ அல்லது அறிந்திருந்தும் நிராகரித்தோ நடந்துகொள்கிறவர்கள் கர்த்தருக்கு முன் பெருந்தவறு செய்கிறார்கள். இப்படி நடந்துகொள்வதை வேதம் முறைகேடானதும், ஒழுக்கக் கேடானதுமான செயலாகக் கருதுகிறது. இதனால்தான் அவிசுவாசிகள் கூட சமுதாயத்தில் ஒருமனிதனின் பெயருக்குக் களங்கம் ஏற்படக் கூடாதென்பதற்காக முறையான சட்டங்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள் (Privacy laws, Defamation laws). அந்தச் சட்டங்கள் உருவாவதற்கு அடிப்படை கர்த்தரின் பத்துக் கட்டளைகளே. அந்தக் கட்டளைகளே அவதூறு சொல்லுவதை விசுவாசிகளின் மத்தியிலும் தடைசெய்கிறது. அத்தோடு கர்த்தர் சகல விசுவாசிகளுடைய பரிசுத்தமும் பாதுகாக்கப்படத் தேவை

யான நடைமுறைகளைக் கையாள திருச்சபையையும் நமக்குத் தந்திருக்கிறார்.

இனி எவருடைய தவறையும் திருத்துவதற்கான வேத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் அதைப்பற்றி அவதூறாக எழுதியும், பேசியும் வருகிறவர்கள் அந்த சகோதரனை எப்படி அவமதிக்கிறார்கள் என்பதை விளக்கமாகப் பார்ப்போம். மனிதனைத் தன்னுடைய சாயலில் படைத்திருப்பதாக கர்த்தர் சொல்லுகிறார் (யாக்கோபு 3:9). அதாவது அவிசுவாசியாக இருக்கிறவனும் பாவத்தில் இருந்தபோதும் அவன் கர்த்தருடைய சாயலைத் தன்னில் தொடர்ந்து கொண்டிருக்கிறான். ஆகவே அவிசுவாசியையோ அல்லது விசுவாசியையோ நாம் அசிங்கமாகப் பேசக்கூடாது; அவர்களுடைய மரியாதைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் எந்தவிதமான பொய்க் குற்றச்சாட்டுகளையும் அவர்கள் மேல் சுமத்தவும் கூடாது. மற்றவர்கள் அவர்களைப் பற்றி தவறாக நினைப்பதற்கு நாம் காரணமாக இருந்துவிடக் கூடாது. அவர்களுடைய செயல்களில் நமக்கு சந்தேகம் ஏற்பட்டால் அவற்றை வேதமுறைப்படி திருச்சபைக்கு அடங்கி அது அனுமதிக்கும் முறையிலேயே சபை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். இதற்கு மாறாக நடந்து அவர்களைப் பற்றி அவதூறாக பகிரங்கமாக பேசியும் எழுதியும் வந்தால் அவர்களுடைய தரத்தை நாம் கிறிஸ்தவ சமுதாயத்தில் குறைவடையச் செய்துவிடுகிறோம். கர்த்தரின் பிள்ளைக்கெதிராக அப்படி அநியாயமாக நடந்துகொள்ளும்போது கர்த்தரையே நாம் நிந்திக்கிறோம் என்கிறார் கர்த்தர். அந்த சகோதரனின் பெயருக்கு நாம் களங்கத்தை ஏற்படுத்தும் போது கர்த்தரை களங்கப்படுத்துகிறோம்; அந்தச் சகோதரனின் மானத்துக்கு இழுக்கு ஏற்படுத்துகிறோம். அத்தோடு அவனுடைய மனைவி, பிள்ளைகளுடைய மானத்துக்கும் களங்கத்தை ஏற்படுத்துகிறோம். அநீதியாக நடந்து சகோதரர்களைப் பற்றி தனிப்பட்ட முறையிலும், அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி இழிவாகவும் பகிரங்கமாகவும் பேசி எழுதுகிறபோது ஒரு பெண்ணை பலர் முன்னால் மானபங்கப்படுத்துவது போல் கிறிஸ்தவ சமுதாயத்தின் முன் அவர்களை அசிங்கப்படுத்துகிறோம். ஒருவருடைய பெயருக்கு இழுக்கு ஏற்படுத்துவது அவருடைய தகப்பன் பெயருக்கும், குடும்பப் பெயருக்கும் இழுக்கை ஏற்படுத்துவதாகும். சங்கீதம் 101:5ல் கரத்தர், "அயலானை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனை அழிப்பேன்" என்று ஏன் சொன்னார் என்று இப்போது தெரிகிறதா? சகோதரனை மானபங்கப்படுத்துவதன் மூலம் தன்னையே மானபங்கப்படுத்துகிறவர்களை கர்த்தர் அழிக்காமல் என்ன செய்வார்?

## அவதூறு சொல்லுவதை நிறுத்து

அவதூறு சொல்லுவது எத்தனைப் பெரிய பாவம் என்பது பற்றி வேதம் தரும் போதனைகளை இதுவரை விளக்கியிருக்கிறோம். கிறிஸ்தவர்கள் அவதூறு சொல்லுவதை நிறுத்த வேண்டும். மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்திருப்பவர்களில் இந்தப் பாவம் தொடர்ந்திருக்கக்கூடாது. தொடர்ந்து பாவத்தை செய்கிறவன் கிறிஸ்தவனாக இருக்க முடியாது என்கிறது கர்த்தரின் வேதம். இருதயம் கெட்டுப்போவதனால் ஏற்படும் இந்தப் பாவத்தை நிறுத்த வேதம் மூன்று நடமுறை வழிகளை நமக்குக் காட்டுகிறது:

*(1)* அவதூறு சொல்லுகிறவர்களின் பேச்சை நாம் ஒருபோதும் கேட்கக் கூடாது. பேசுகிறவன் இன்னொருவரைப் பற்றித் தவறாகப் பேசுகிறான் என்று தெரிந்தவுடனேயே அதை நாம் தடுத்துவிடவேண்டும்; அதற்கு இடங் கொடுக்கக் கூடாது. அப்படித் தடுத்துவிடுவதால் பேசுகிறவன் தான் பேசு வதை நிறுத்திக்கொள்ளப் போவதில்லை. ஆனால், அதைக் கேட்க மறுப்ப தனால் நம்முடைய இருதயத்தை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும். இன்னொருவரைப் பற்றி நாம் தப்பாக நினைக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே அவதூறு சொல்லுகிறவர்கள் நம்மிடம் பேச வருவார்கள். அதற்கு இடங்கொடுக்காமல் ஆரம்பத்திலேயே அவர்கள் வாயை அடக்கி விட்டால் இன்னொருவரைப் பற்றி நாம் தப்பாக நினைக்க இடமிருக்காது. நம் காதுகள் நல்லதைக் கேட்கவே எப்போதும் கூர்மையாக இருக்க வேண்டும். அவதூறுகளைக் கேட்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

*(2)* அவதூறான செய்திகளைத் தாங்கி வரும் பத்திரிகைகள், நியூஸ் லெட்டர் கள், கடிதங்களை நாம் வாசிக்கக் கூடாது. அவற்றை வாசிப்பதனால் நம் இருதயத்தில் தப்பான எண்ணங்கள் உருவாக இடங்கொடுத்துவிடுகிறோம். தனி மனிதனின் சொந்த வாழ்க்கையைப் பற்றிய, அவர்களுடைய கௌர வத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் எந்தச் செய்தியையும் வாசிக்க நம் கண்க ளுக்கு நாம் இடங்கொடுக்கக் கூடாது. நம் இருதயத்தை நாம் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

*(3)* அவதூறு பேசாமல் இருக்க நம் வாயை நாம் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். எதைப் பேசினாலும் நல்லதைப் பேச மட்டுமே நாக்கைப் பயன் படுத்தவேண்டும். சக மனிதர்களைப் பற்றியும், சகோதரர்களைப் பற்றியும் நாம் பேசாமல் இருக்க முடியாது. பேசினால் அவை நல்லதாகவே இருக்கு மாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இருதயம் பரிசுத்தமாக இருந்தால் மட்டுமே அடுத்தவர்களைப் பற்றி நாம் அசிங்கமாக சிந்திக்கவும், பேசவும் மாட்டோம்.

## நாவை அடக்கு

யாக்கோபு 3ம் அதிகாரத்தில் நாவை அடக்க வேண்டியதன் அவசியத்தை விளக்குகிறார். சத்தியத்தைப் பூரணமாக அறிந்துகொள்ளாமல், அறிந்து கொண்டிருக்கிறோம் என்ற திமிரில் அதைப் புரட்டிப்போட்டு போதிக் கின்றவர்களைக் கண்டித்து இங்கே யாக்கோபு எழுதுகிறார். சத்தியத்தைப் பேச மட்டுமே வாய் பயன்படுத்தப்பட வேண்டும். அதை மாற்றிப் பேச அது பயன்படுத்தப்படக்கூடாது. வாய் சத்தியத்துக்கு எதிராகப் பேசக் காரணமே இருதயம் பாழாய்ப் போவதுதான். அதனால்தான் "உங்கள் இருத யத்தில் கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால் . . பெருமைபாராட்டாதிருங்கள்; சத்தியத்துக்கு விரோதமாகப் பொய் சொல் லாமலுமிருங்கள்" என்று *3:14*ல் யாக்கோபு சொல்லுகிறார். அதற்கு அடுத்த வசனத்தில், அப்படிச்செய்வது பேய்த்தனமானது என்றும் சொல்லுகிறார். இங்கே யாக்கோபு நாவை அடக்கும்படித் தருகின்ற விளக்கம் பொதுவாக வாய் சம்பந்தமான எல்லா விஷயத்துக்கும் பொருந்தும். அவதூறு சொல்லு வதற்கும் இந்த வாயைத்தான் அவதூறு சொல்லுகிறவர்கள் பயன்படுத்து

கிறார்கள். ஒருவரைப் பற்றிய உண்மையைச் சொல்லாமல் அதை மறைத்து பொய்யாய் அவரைப் பற்றி திரித்துப் பேசுவது அவதூறு. அதைச் சொல்லு கிற வாய் அடக்கப்பட வேண்டும் என்கிறார் யாக்கோபு. அவதூறு சொல்லு கிறவன் அதிக ஆக்கினையை அடைவான் என்கிறார் யாக்கோபு. நம் வாய் மிகவும் சக்திமிக்கது. “அதை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது” என்று 3:8ல் யாக்கோபு கூறுவதற்குக் காரணம் அது எத்தனை பலமுள்ளது என்பதை நமக்கு உணரவைக்கத்தான். தொடர்ந்து “அது அடங்காத பொல் லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது” என்கிறார் யாக்கோபு. தன்னுடைய இருதயத்தை பாழாக்கிக் கொண்டிருக்கிற மனிதன் தன் சரீரத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பலத்தை இழந்து குரோதத் தாலும், பொறாமையாலும் சக மனிதர்களைத் தன்னுடைய பொல்லாத வாயைப் பயன்படுத்தி அழிக்கப் பார்க்கிறான். ஒரு விசுவாசி அப்படிச் செய்யும்போது தான் நிந்தனை செய்யும் சகோதரன் கர்த்தரின் சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை நினைத்துப் பார்க்க மறந்துவிடுகிறான். கர்த்தரின் சாயலைக் கொண்டிருக்கின்ற சகோதரர்களையும், சக மனிதர் களையும் நிந்தனை செய்வது கர்த்தரையே நிந்தனை செய்வதாகும்; அவரு டைய படைப்பை நம் வாயால் அழிக்கப் பார்ப்பது அவரையே எதிர்க்கும் பேய்த்தனம் என்று விளக்குகிறார் யாக்கோபு.

நம் வாயை நாம் அடக்கி ஆளப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துவதற்காக யாக்கோபு ஐந்துக்கு மேற்பட்ட உதாரணங்களை இங்கு பயன்படுத்தியிருக்கிறார். குதிரைக் கடிவாளம், கப்பல் சுக்கான், நெருப்பு, அத்தி மரம், திராட்சை செடி என்று பல உதாரணங்களை இங்கு பயன்படுத்தியிருக்கிறார். ஏன் இத்தனை உதாரணங்கள்? ஒரு தடவை விளக்கினால் போதாதா? என்று எவராவது கேட்கக் கூடும். சிறு பிள்ளைக்கு விளக்குவது போல் இத்தனை உதாரணங்களைத் தர வேண்டுமா? என்று கூட சிலர் எண்ணக்கூடும். இந்தக் கேள்விகள் நியாயமானவைதான். இத்தனை உதாரணங்களை நமக்கு யாக்கோபு தந்திருப்பதற்குக் காரணம் நாவைப் பயன்படுத்தி இன்னொருவருக்கு களங்கத்தை ஏற்படுத்துவது எத்தனை பெரிய பாவம் என்பதை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதற்குத்தான். அத்தோடு தேவையான ஆத்மீக நடவடிக்கை களை எடுத்து நம்முடைய வாயால் நலமானதையும், சத்தியத்தையும் மட்டுமே பேச நாம் பெருமுயற்சி எடுக்க வேண்டும் என்பதையும் யாக்கோபு உணர்த்துகிறார். யாக்கோபு வாயைப் பற்றி இங்கு சொன்ன அத்தனையும் ஒருவரைப் பற்றி எழுதி அவதூறு சொல்லும் தீச்செயலுக்கும் பொருந்தும்.

## குற்றம், குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வேத வழிமுறைகள்

மற்றவர்களுடைய தவறுகளைத் திருத்தப் பிறந்திருப்பதுபோல் அவர்களைப் பற்றி அவதூறு சொல்லும் அசிங்கமான செயலைச் செய்பவர் கள் கர்த்தருடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. குற்றம், குறைகளைத் திருத்துவதற்கு கர்த்தர் சில வழிகளை ஏற்படுத்தி கிறிஸ் தவர்கள் அவற்றைத் தவறாது பின்பற்ற வேண்டும் என்று கட்டளை யிட்டிருக்கிறார். இப்படி அவர் செய்திருப்பதற்குக் காரணம் தான் படைத்த மனிதனின் கெளரவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

அந்த வழிகளை இனிப் பார்ப்போம்.

*(1)* ஒரு விசுவாசி தான் செய்யும் எந்த ஆத்மீகத் தவறுகளையும், தன்னுடைய ஆத்மீகக் கடமைகளை உணர்ந்து கர்த்தர் அளித்திருக்கும் திருநியமங்களைப் பயன்படுத்தி இந்த உலகில் பரிசுத்தமாக வாழவும், பரலோக வாழ்க்கைக்குத் தன்னைத் தயார் செய்துகொள்ளவும் தன்னைத் தானே திருத்திக் கொள்ள வேண்டும். இது அவனுடைய கடமை.

*(2)* ஒரு சகோதரன் நமக்கெதிராக பாவம் செய்திருப்பானானால் அவனைத் தனியே நேரில் பார்த்துப் பேசி அவன் திருந்த உதவ வேண்டும். அவன் திருந்திவிட்டால் அதற்குப் பிறகு இது வேறு எவருக்கும் தெரியவரக்கூடாது. அத்தோடு அந்த விஷயம் முடிந்துவிட்டதாகக் கருதப்பட வேண்டும். *(மத்தேயு 18:15).*

*(3)* நமக்கெதிராகப் பாவம் செய்திருக்கும் அந்தச் சகோதரன் திருந்த மறுத்தால் திருச்சபை மூப்பருக்கு அதைத் தெரிவித்து அவரோடு போய் அவனைச் சந்தித்து பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அவன் திருந்திவிட்டால் இந்த விஷயம் அந்த மூன்று பேர்களைத் தவிர வேறு எவருக்கும் ஒருபோதும் தெரிய வரக்கூடாது. *(மத்தேயு 18:16).*

*(4)* அவன் தொடர்ந்தும் திருந்தாதிருப்பானேயானால் இரண்டு பேரிலிருந்து மூன்று பேர்வரைப் போயிருக்கும் அந்தப் பிரச்சனை சபை மூப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவன் திருந்த தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவும் தவறினால் மூப்பர்கள் சபை அங்கத்தவர்களைக் கூட்டி தகுந்த ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். *(மத்தேயு 18:17; 1 கொரி. 5).*

*(5)* உள்ளூர் சபைகளில் அங்கத்துவம் வகிக்காது மனம் போனபோக்கில் வாழ்கிறவர்கள் மத்தியில் தவறு செய்கிறவர்களைத் திருத்துவதற்கு வேதம் எந்த வழிமுறைகளையும் காட்டவில்லை. கர்த்தர் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு உள்ளூர் சபையில் அங்கத்தவனாக இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்த்து அந்த அடிப்படையிலேயே திருத்த ஒழுங்கு நடவடிக்கைகளை சபை பின்பற்றும்படியாக எழுத்தில் தந்திருக்கிறார். சபைக்கு வெளியில் கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் வாழ்கிறவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆபத்தாகவே எப்போதும் இருப்பார்கள். அவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்த அதிகாரமுள்ள ஒரு ஆத்மீக அமைப்பு இல்லை. அத்தகைய ஒரு அமைப்பை வேதம் அமைத்துத் தரவில்லை.

நம்மோடும், நமது சபைகளோடும் தொடர்பில்லாதவர்கள் செய்கின்ற காரியங்களை நியாயம் விசாரித்து நீதி வழங்க கர்த்தர் நம்மை நியமிக்கவில்லை. அவற்றைப் பற்றிப் பேசி, எழுதி அவதூறு சொல்லுவதில் எவரும் ஈடுபடக்கூடாது. இதுவரை நாம் பார்த்த வேத முறைகளைப் பின்பற்றி நாமும், சக சகோதர்களும் திருந்தி வாழவேண்டும். இந்த முறைகளை மீறி நடப்பது அருவருக்கத்தக்க செயல். அப்படி நடந்துகொள்ளுகிறவர்கள் கர்த்தரின் சபைக்கும், அவருடைய மக்களுக்கும் தீங்கு செய்வதால் கர்த்தர் அவர்களை நிச்சயம் சும்மாவிடமாட்டார்.

# நெதர்லாந்தில் சீர்திருத்தம்

நெதர்லாந்தை (Netherlands) ஒல்லாந்து (Holland) என்ற பெயரிலும் அழைப்பார்கள். ஐரோப்பிய நாடான நெதர்லாந்திற்கு சத்தியம் பரவி திருச்சபை சீர்திருத்தம் எவ்வாறு ஏற்பட்டது என்பதை இனி ஆராய்வோம். ஜெர்மனியில் கர்த்தர் லூதரின் மூலம் ஏற்படுத்திய திருச்சபை சீர்திருத்தம் தொடர்ந்து ஐரோப்பா எங்கும் பரவ ஆரம்பித்திருந்தது. பிரான்சில் அது ஏற்படுத்தியிருந்த தாக்கத்தைக் கடந்த இதழில் கவனித்தோம். நெதர்லாந்து கடலுயரத்தைவிட தாழ்ந்திருந்த நாடு. மூன்று மில்லியன் மக்களைக் கொண்டிருந்த அந்நாடு கடல் நீர் உள்ளே வருவதைத் தடுப்பதற்காக பெரும் சிரமத்துடன் கடற்கரைப் பகுதிகளில் தடுப்புச் சுவரெழுப்பி கடற்பரப்பை நன்நிலமாக்கி தங்களுடைய தேவைகளுக்காக பயன்படுத்தினர். நிச்சயமாக அவர்களுக்கு நிலத்தின் அருமை தெரிந்திருந்தது. தங்கள் நாட்டிற்கு சமுத்திரத்தால் உண்டாகக்கூடிய ஆபத்தும் தெரிந்திருந்தது. இத்தகைய சந்தர்ப்பத்தில் வாழ்கிறவர்களுக்கு கடவுளின் அருமை தெரியும். படைத்தவர் தங்களைக் காப்பாற்றாவிட்டால் கூண்டோடு அழிந்துவிடுவோம் என்பதை இந்த மக்கள் ஓரளவு உணர்ந்திருந்தார்கள். சமுத்திரத்திடம் போராடி நிலத்தைப் பெற்று அதைப் பாதுகாத்து வாழ்ந்து வருவதால் இவர்களிடம் நாட்டுப்பற்றும் அதிகமாயிருந்தது. உழைப்பின் அருமையையும் இந்த மக்கள் உணர்ந்தவர்களாயிருந்தார்கள். இக்காலப்பகுதியில் ரோமன் கத்தோலிக்க மதம் இங்கே தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. மறுமலர்ச்சியின் தாக்கமும் நாட்டு மக்களை அதிகம் சிந்திக்க வைத்தது. மறுமலர்ச்சிக் காலத்தின் தலைசிறந்த அறிஞராக இருந்த இராஸ்மஸ் நெதர்லாந்தின் ரொட்டர்டேமைச் (Rotterdam) சேர்ந்தவராக இருந்தார்.

திருச்சபை சீர்திருத்தம் உருவாகியிருந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே நெதர்லாந்திலும் சீர்திருத்தத்திற்கு பாதை வகுத்தவர்களைக் கர்த்தர் எழுப்பியிருந்தார். அவர்களில் ஒருவர் ஜெராட் குரூட் (Gerard Groote 1340-84). ஜோன் விக்கிளிப் இவருடைய காலத்திலேயே வாழ்ந்திருந்தார். இவர் சார்ந்திருந்த பிரிவு The Brethren of the Common Life என்று அழைக்கப்பட்டது. இது ரோமன் கத்தோலிக்க மதத்தின் ஒரு பிரிவாக இருந்தபோதும் அதில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தது. அத்தகைய மாற்றங்களை அதிரடியாகக் கொண்டுவரும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடாமல் இருந்ததால் கத்தோலிக்க மதம் அவர்களைப் பொறுத்துக் கொண்டது. பிற்காலத்தில் நெதர்லாந்தில் திருச்சபை சீர்திருத்தம் உருவாக கர்த்தர் ஏற்கனவே அதற்குத் தகுதியான சூழ்நிலையை இவர்கள் மூலம் உருவாக்கிக் கொண்டிருந்தார்.

அப்போது பேரரசனாக இருந்த ஐந்தாம் சார்ள்ஸின் பிடியிலிருந்து தூர தேசங்களில் ஒன்றாக நெதர்லாந்து இருந்தது. நெதர்லாந்து நாட்டின் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் ஆகியவற்றின் மூலம் அவனுடைய வருமானம் அதிகரித்தது. நெதர்லாந்தில் அவன் வசிக்காவிட்டாலும் ஜேர்மனி நாட்டைவிட இங்கேயே அவனுடைய செல்வாக்கு அதிகமாக இருந்தது. புரொட்டஸ்தாந்து திருச்சபை சீர்திருத்தம் ஐரோப்பாவில் பரவ ஆரம்பித்து நெதர்லாந்தில் தலைகாட்டியபோது அது ஜெர்மனி நாட்டினூடாக அங்கு வந்து சேர்ந்தது. ஆரம்பத்தில் மாட்டின் லூதரின் போதனைகளுக்கு அதிக வரவேற்பு கிடைத்தது. அதற்குப்பிறகு ஜோன் கல்வினின் போதனைகளில் மக்கள் அதிக நாட்டம் காட்டினர். உண்மையில் லூதரின் போதனைகளைவிட கல்வினின் போதனைகளை அதிக சிரத்தையோடு மக்கள் வரவேற்றனர். சுதந்திரத்தை நாடி நின்ற நெதர்லாந்து மக்களின் அறிவு, குணாதிசயம், எண்ணப்போக்கு ஆகியவற்றோடு கல்வினின் போதனைக்ள் இணைந்து போவதாக இருந்தன.

நெதர்லாந்து மக்கள் புரொட்டஸ்தாந்து சத்தியங்களில் ஆர்வம் காட்டியது ஐந்தாம் சார்ள்ஸுக்கு பெரும் கோபத்தையூட்டியது. ஜெர்மனியில் புரொட்டஸ்தாந்து சீர்திருத்தவாதிகளையும், இளவரசர்களையும் அடக்கமுடியாமல்போன ஆத்திரத்தால் நெதர்லாந்தில் அதை எப்படியாவது ஒடுக்கிவிட வேண்டும் என்று கங்கனம் கட்டினான் பேரரசன். இதற்காக நாட்டில் கத்தோலிக்க மதப்போதனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் எதிராக நடப்பவர்களைத் தண்டிப்பதற்காக ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இதை Spanish inquisition என்று அழைப்பார்கள். சீர்திருத்தப் போராட்டத்தையும், சீர்திருத்தவாதிகளையும் ஒடுக்குவதற்காக போப்பும், ரோமன் கத்தோலிக்க மதமும் கொண்டுவந்த சட்டமே இது. இதன் அடிப்படையில் சிறைப்பிடிக்கப்பட்ட சீர்திருத்தவாதிகள் தங்களுடைய விசுவாசத்தைப் பற்றிய விளக்கம் கொடுக்கும்படி கத்தோலிக்க மதத்தால் சித்திரவதை செய்யப்பட்டனர். கத்தோலிக்க மதப் போதனைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் போப்பாலும், கத்தோலிக்க மதத்தாலும் கொடுமைப்படுத்தப்பட்டனர், கொலை செய்யப்பட்டனர். கழுமரத்தில் கட்டப்பட்டு உயிரோடு பலர் எரிந்து சாம்பலானார்கள். ஏனையோர் கழுத்து நெறிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். மிஞ்சியோர் உயிரோடு கொளுத்தப்பட்டனர். சீர்திருத்தவாதிகளுக்கும், அவர்களைப் பின்பற்றியவர்களுக்கும் எதிரான இந்தக் கொடுமை 1523 அளவில் ஆரம்பமாகி ஐந்தாம் சார்ள்ஸ் பதவி இழந்த 1555ம் ஆண்டுவரை தொடர்ந்தது. கத்தோலிக்க மதத்திற்கெதிராக கர்த்தரின் வேதத்தை வாசித்து கிறிஸ்துவை விசுவாசித்ததற்காகவே இவர்கள் இந்தவகையில் தண்டிக்கப்பட்டு தங்களுடைய உயிரை இழக்க நேரிட்டது. வாளாலும், தீயாலும் திருச்சபை சீர்திருத்தத்தை ஐந்தாம் சார்ள்ஸ் அழித்து ஒழிக்க முற்பட்டபோதும் அவன் பதவி துறந்த ஆண்டில் சீர்திருத்தம் நெதர்லாந்தில் ஆழமாக வேர் பதிந்து நாடெங்கும் பரவி வியாபித்திருந்தது. வேதபூர்வமான திருச்சபை சீர்திருத்தத்தை அடக்குமுறையைக் கையாண்டு ஒடுக்க முயன்ற கத்தோலிக்க மதத்தாலும் பேரரசனாலும் அசைக்க முடியவில்லை.

நெதர்லாந்தில் சத்தியத்திற்காக இவ்வாறு ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்ததை மார்டின் லூதர் ஜெர்மனியில் கேள்விப்பட்டபோது நெதர் லாந்தில் இருந்த கிறிஸ்தவ விசுவாசிகளான பிராபேன்ட் (Brabant), பிளேன்டர்ஸ் (Flanders) ஆகிய இரு சகோதர்களுக்கும் உற்சாகமூட்டி லூதர் கடிதமனுப்பினார். அதில், “நீங்கள் கர்த்தருடைய வேதபோதனை களை அறிந்து விசுவாசிக்கும் பெரும் ஆசீர்வாதத்தை அடைந்திருப்பது மட்டுமன்றி, உங்களில் சிலர் கிறிஸ்துவுக்காக உங்களுடைய உயிரையே இழக்கின்ற பெரும் பாக்கியத்தையும் அடைந்திருக்கிறீர்கள். கிறிஸ்துவின் பார்வையில் உங்களுடைய இரத்தம் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கின்றது” என்று லூதர் எழுதியிருந்தார்.

ஐந்தாம் சார்ள்ஸ் ஆண்ட காலத்தில் இவ்வாறாக ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கத்தோலிக்க மத விரோதிகளாகக் கணிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். ஆனால், இவ்வாறாக உயிர்ப்பழி கொடுக்கும் விசுவாசிகளின் இரத்தமே திருச்சபை வளர்ச்சிக்கு வித்தாக அமைந்து விடுகிறது என்பதை பேரரசன் உணராமல் போனான். எந்தளவுக்கு ஆக்ரோஷத்தோடு அவன் கிறிஸ்தவர்களைத் தொலைக்க முயன்றானோ அந்தளவுக்கு வைராக்கியத்தோடு விசுவாசிகளின் தொகை நெதர்லாந்தில் பெருகத் தொடங்கியது. தனக்கு 55 வயதாக இருந்தபோது மனம் தளர்ந்து தனது பதவியைத் துறந்தான் பேரரசன். தன் வாழ்நாளின் கடைசிக் காலத்தை அவன் ஸ்பெயினில் ஒரு மடத்தில் கழிக்க ஆசைப்பட்டான். 1558ல் அவன் இறக்கும்வரை ஒரு மடத்தில் தனிமையில் ஒதுங்கி வாழ்ந்து மரித்தான். ஐந்தாம் சார்ள்ஸ் கடிகாரங்கள் சேகரிப்பதையும், கடிகாரங்கள் செய்வதையும் தன் வாழ்க்கையில் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தான். ஒரு முறை அவன் தன்னுடைய கடிகாரங்களில் சிலவற்றை ஒரே நேரத்தில் ஓடி மணியடிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு முடியாமல் போனபோது பின்வருமாறு சொன்னதாக செய்தியுண்டு: “இரண்டு கடிகாரங்களை ஒரே நேரத்தில் மணியடிக்க வைக்க என்னால் முடியாமல் இருக்கும்போது நாட்டின் அனைத்து மனிதர்களையும் சமய சம்பந்தமான காரியங்களில் ஒரே விஷயத்தை விசுவாசித்து பின்பற்ற வைப்பதில் நான் எத்தனை முட் டாள்தனமாக நடந்துகொண்டிருக்கிறேன்” என்றானாம் பேரரசன். அத்தோடு வேர்ம்ஸ் கவுன்சில் (Diet of Worms) கூடி முடிந்தவுடனேயே மார்டின் லூதரைக் கொல்லாமல் விட்டதுதான் தன் வாழ் நாளில் தான் விட்ட பெருந்தவறு என்றும் அவன் சொல்லியிருக்கிறான்.

ஐந்தாம் சார்ள்ஸுக்குப் பிறகு அவனுடைய மகன் ஸ்பெயினின் இரண்டாம் பிலிப்பு பதவிக்கு வந்தான். இவனே இங்கிலாந்தின் அரசி மேரியின் கணவன். இவன் மொத்தமாக நான்கு முறை திருமணம் செய்திருந்தான். இவனே 1588ல் ஒரு பெரும் கடற்படையை (Spanish Armada) இங்கிலாந்தைத் தாக்க அனுப்பியவன். தன்னுடைய வாழ்நாளின் கடைசி நாற்பது வருடங்களில் இவன் ஸ்பெயினைவிட்டு வெளியில் போகவில்லை. தன் நேரமனைத்தையும் கட்டுரைகளையும், அறிக்கைகளை யும் எழுதுவதிலேயே இவன் செலவிட்டான். சிறு காகிதத் துண்டின் மூலம் தென், வட பகுதிகளைத் தான் ஆண்டதாக இவன் பெருமையோடு கூறிக்

கொள்வான்.

பிலிப்பின் தந்தை சவுக்கால் நெதர்லாந்து மக்களைத் தண்டித்தான் என்றால் அவன் மகன் அவர்களை தேள்களினால் தண்டித்தான் என்று கூறலாம். அந்தளவுக்கு தகப்பனைவிட கொடுமைக்காரனாக மகன் இருந்தான். மத விரோதிகளைத் தன்னால் ஆள முடியாது என்று தீர்மானித்த பிலிப்பு அவர்களைத் தொலைக்க தந்தையைவிட அதிக ஈடுபாடு காட்டினான். ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களுக்கெதிரான துன்பம் குறைந்திருந்தது. பிலிப்பு தன்னுடைய சகோதரியான பார்மாவின் மார்கிரெட்டை (Margaret of Parma) நெதர்லாந்தை ஆள நியமித்திருந்தான். நாட்டில் பிரிவினை போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டு பிலிப்பின் கவனம் அதன் மேல் திரும்பாதவரை தான் மக்களுக்கெதிரான சித்திரவதைகளைச் செய்யப் போவதில்லை என்று அவள் வாக்குக் கொடுத்திருந்தாள்.

இக்காலப்பகுதியில் நெதர்லாந்தில் வாழ்ந்த ஒரு மனிதர்தான் கை டீ பிரே (Guy De Bray). இவரே நெதர்லாந்தில் சீர்திருத்த சபைகள் பயன்படுத்தி வந்த 37 அம்சங்களைக் கொண்ட விசுவாச அறிக்கையை (37 Articles of Netherlands Confession of Faith) எழுதியவர். இதை பெல்ஜிக் விசுவாச அறிக்கை (Belgic Confession of Faith) என்றும் அழைப்பார்கள். கை டீ பிரே மிகவும் சிறந்த படிப்பாளி ஆனால் சிறந்த பிரசங்கியாக இருக்கவில்லை. அத்தோடு பெரிய இறையியல் வல்லுனரும் அல்ல. அவர் ஓவியராக இருந்தார். அவரெழுதிய விசுவாச அறிக்கை நெதர்லாந்து சபைகளுக்கு அவசியமான வேத இறையியலை வழங்குவதில் பெரிதும் பயன்பட்டது. தன்னுடைய கடைசி காலத்தில் இவர் பிரான்சில் அகதியாக வாழ நேரிட்டது. ஆனால், பிரான்சிலும் நெதர்லாந்தைப் போலவே கிறிஸ்தவர்களுக்கு ஆபத்து இருந்தது. கை டீ பிரே பிரான்சில் சிறையில் அடைக்கப்பட்டு 1567ல் கிறிஸ்துவுக்காக மரண தண்டனையை அநுபவித்தார்.

நெதர்லாந்தில் இரண்டாம் பிலிப்பின் கொடுமைகளுக்கெதிராக போராட ஆரம்பித்தவர் ஓரெஞ்சின் வில்லியம் (William the Orange) என்ற பெயரைக் கொண்டவர். இவரை (William the Silent) என்றும் அழைப்பார்கள். ஜெர்மனியில் பிறந்த வில்லியம் பிரான்சின் தென்பகுதியில் தன்னுடைய குடும்பத்துக்கு சொந்தமான சொத்துகளை அடைந்திருந்தார். ரோமன் கத்தோலிக்கனாக வளர்ந்தால் மட்டுமே இந்த சொத்துக்களை அடைய முடியும் என்ற விதி இருந்ததால் அந்த முறையில் வளர்க்கப்பட்டு இந்த சொத்துக்களுக்கு அதிபதியானார். ஐந்தாம் சார்ள்ஸுக்கு கீழ் பின்னால் பணியாற்றினார் வில்லியம். சமுதாயத்தில் எல்லாப் பகுதியினருக்கும் வில்லியத்தைப் பிடித்திருந்தது. கனிவும், எல்லோருடனும் நன்றாகப் பழகக்கூடிய தன்மையையும் அவர் கொண்டிருந்தார். இவர் "அமைதியான வில்லியம்" என்ற பெயரில் அழைக்கப்பட்டபோதும் தெளிவாகப் பேசி தன்னுடைய நம்பிக்கைகளை நன்றாக விளக்கக்கூடியவராக வில்லியம் இருந்தார். நிலைமைக்குத் தக்கபடி பேசக்கூடாத இடத்தில் ஞானத்தோடு அமைதியாக இருப்பதில் வில்லியம் பெயர் பெற்றிருந்ததால் அவர் "அமைதியான வில்லியம்" என்ற பெயரையும் பெற்றிருந்தார்.

இரண்டாம் பிலிப்பு நெதர்லாந்தில் தான் மத விரோதிகளாகக் கருதிய கிறிஸ்தவர்களுக்கெதிரான துன்பங்களை ஆரம்பிக்கும்படி 1566ல் தன்னுடைய சகோதரிக்கு கட்டளையிட்டான். இதன்படி அவனுடைய ஆட்சிக்குட்பட்ட மக்களனைவரும் டிரென்ட் கவுன்சில் (Council of Trent, 1546-63) கட்டளைகளை ஏற்றுநடக்கும்படி கட்டளையிருந்தது. இக்கட்டளைகள் ரோமன் கத்தோலிக்க மதப்போதனைகளையும் நடைமுறைகளையும் மக்களனைவரும் கடைப்பிடிக்கும்விதத்தில் எழுதப்பட்டிருந்தது. இக் கட்டளைகளுக்கெதிராக நடக்க மறுத்தவர்களெல்லாம் சித்திரவதைத் துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இக்கட்டளைகளுக்கு எதிராக நடந்தவர்களைத் துன்புறுத்தத் தயங்கிய அதிகாரிகள் விலக்கப்பட்டு அவர்களுடைய இடத்தில் ஆர்வத்தோடு கொடுமைகளைச் செய்யக்கூடியவர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்தக் காலப்பகுதியில் வில்லியம் லூத்தருடைய போதனைகளில் ஆர்வம் காட்டி அவற்றை விசுவாசித்து லூத்தரன் பிரிவைச் சார்ந்தவராக (Lutheren) மாறியிருந்தார். அதற்கு ஆறு வருடங்கள் கழித்து அவர் கல்வினித்துவவாதியாக (Calvinist) மாறினார். அவர் லூத்தரனாக இருந்த காலத்திலேயே நெதர்லாந்தின் கவர்னராக இருந்து ஆண்டு வந்த அல்வா (Duke of Alva) என்பவருக்கெதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அல்வா வலிமையான கத்தோலிக்கப் படைக்குத் தலைவனாக இருந்தான். நெதர்லாந்தில் பலரைக் கொடுமைப்படுத்திக் கொன்று பிலிப்பை சந்தோஷப்படுத்துவதில் குறியாக இருந்த அல்வா, "இரும்புபோன்ற மனிதர்களை நெகிழ வைத்த எனக்கு வெண்ணெய்யைப் போன்றவர்களை நெகிழ வைப்பது எம்மாத்திரம்" என்று தம்பட்டம் அடித்துக்கொண்டான். ஆயிரக் கணக்கானவர்களுடைய சொத்துக்களை இவன் பறிமுதல் செய்தான். ஆயிரக்கணக்கானவர்களை இரக்கமில்லாமல் கொலை செய்தான். ஆயிரக் கணக்கானவர்கள் ஜெர்மனிக்கும், இங்கிலாந்துக்கும், பிற நாடுகளுக்கும் தப்பி அகதிகளாகப் போனார்கள்.

ஸ்பெயினைக் கடலில் கட்டுப்படுத்தத் தீர்மானித்த பல நெதர்லாந்தியர்கள் "கடல் பிச்சைக்காரர்கள்" என்ற பெயரில் ஒரு கடற்படையை அமைத்துப் போராடினர். அவர்கள் ரொட்டர்டாமுக்கு அருகில் இருந்த ஓரிடத்தைப் பிடித்து அதை எல்லா எதிர்ப்புக்கு மத்தியிலும் தங்கள் கையில் வைத்திருந்தனர். கடலுக்கு அருகில் இருந்த வேறுபல பிரதேசங்களும் ஸ்பெயின் நிர்வாகத்துக்கு எதிராகப் போராட ஆரம்பித்தன. பல இடங்களில் கடல் தடுப்புகளைத் திறந்து கடல்நீர் உள்ளே வரும்படி செய்து ஸ்பெயினின் படைகளைத் திக்குமுக்காடச் செய்தனர் நெதர்லாந்தில் இருந்த ஸ்பெயினின் எதிர்ப்புவாதிகள். அல்வாவின் மகன் ஓரிடத்தில் 12,000 பேர் கொண்ட படையைக் கொண்டு 4,000 பேர்களைத் தாக்க வேண்டியிருந்தது. பல இடங்களில் ஸ்பெயினின் படை திகிலடைந்து பின்வாங்க நேர்ந்தது. அல்வாவின் கொடுமைகளை வரலாற்றறிஞர்கள் விளக்கியிருக்கின்றனர். அவை நம்பமுடியாதளவுக்கு கொடியவைகளாக இருந்ததை அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். இரண்டாம் பிலிப்பின் ஒத்துழைப்போடுதான் அல்வா எல்லாக் கொடுமைகளையும் செய்திருக்

கிறான். இந்த விஷயத்தில் இருவரும் இணைந்து செயல்பட்டார்கள். ஸ்பெயினின் படைகள் நிலத்தில் வலிமை வாய்ந்தவையாக இருந்தன. அப்படைப் போராளிகள் நல்ல பயிற்சிபெற்றவர்களாக இருந்தனர். ஆனால், கடலில் அவர்களால் “கடல் பிச்சைக்காரர்களைத்” தாக்குப்பிடிக்க முடியவில்லை.

இரண்டாம் பிலிப்பு 1580ல், வில்லியத்தை உயிரோடு பிடித்தோ அல்லது கொன்று அவருடைய சரீரத்தைக் கொண்டு வருபவர்களுக்கு 25,000 தங்கக் காசுகளை அளிப்பதாக அறிவித்தான். அடுத்த நான்கு வருடங்களுக்கு எவராலும் வில்லியத்தைப் பிடிக்க முடியவில்லை. 1584ல் வில்லியத்தின் எதிரிகள் அவரைக் கொலை செய்தனர். நெதர்லாந்து குடியரசை அமைத்தவர் என்று வில்லியம் அந்நாட்டவரால் போற்றப்பட்டார். அவர் இறந்த போது சிறுவர்கள் தெருவில் கதறி அழுததாக வரலாற்றறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இறுதியில் ஸ்பெயினிடமும், போப்பிடமும் இருந்து நெதர்லாந்து விடுதலை அடைந்தது. 1609ல் பன்னிரெண்டு வருடங்களுக்கான போர் நிறுத்த ஒப்பந்தம் இருநாடுகளுக்கிடையிலும் நிறைவேறியது. 1648ல் முழு சுதந்திரம் கிடைத்தது. 17ம் நூற்றாண்டில் மிக முக்கியமான வேத சம்பந்தமான நிகழ்ச்சிகள் நெதர்லாந்தில் ஏற்பட்டன. இது வேதம் போதிக்கும் இரட்சிப்பு பற்றிய போதனையோடு தொடர்புடையதாக இருந்தது. லெயிடன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த ஜெக்கோபஸ் ஆர்மீனியஸ் என்பவர் கல்வினின் போதனைகளில் சிலவற்றை மறுதலித்து மனிதனின் இரட்சிப்புக்கு கிறிஸ்துவின் மூலம் கர்த்தர் வழிவகுத்துத் தந்திருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளலாமா, கூடாதா என்கிற பொறுப்பை அவர் மனிதனின் கரத்திலேயே விட்டிருக்கிறார் என்று போதித்தார். ஆர்மீனியஸின் இந்தப் போதனை கிறிஸ்து பாவிகளுக்காக ஒரு பிரயோசனமும் இல்லாமல் மரித்திருக்கிறார் என்ற சித்தாந்தத்திற்கு வழிவகுத்தது. இதற்கு மாறாக அதே பல்கலைக்கழகத்தில் போதித்த ஆர்மீனியஸின் சக போராசிரியரான கோமர் தெரிந்துகொள்ளுதலாகிய போதனையின் அடிப்படையில் எந்த மனிதனுடைய இரட்சிப்பும் கர்த்தருடைய அளவற்ற கிருபையாலும் அவருடைய சர்வவல்லமையினாலும் மட்டுமே நிகழ்கின்றது என்று போதித்தார். ஆர்மீனியஸ் 1609ல் இறந்தார். அவரைப் பின்பற்றியவர்கள் அவருடைய போதனைகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததால் 1619ல் கல்வினித்துவ நெதர்லாந்து திருச்சபைகள் இதற்கு ஒரு முடிவுகான டோர்ட் சினட்டைக் (Synod of Dort) கூட்டின. நெதர்லாந்து, இங்கிலாந்து, ஜெர்மனி, சுவிர்ட்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த இறையியலறிஞர்கள் இதில் அங்கம் வகித்தனர். இவர்கள் ஆர்மீனியஸின் போதனைகள் வேதத்துக்குப் புறம்பானவைகள் என்று தீர்ப்பளித்து கல்வினித்துவ போதனைகளைத் தரும் பெல்ஜிக் விசுவாச அறிக்கை மற்றும் ஹெயிட்டில்பேர்க் வினாவிடைப் போதனைகளையும், சீர்திருத்த திருச்சபைப் போதனைகளையும் உறுதிப்படுத்தினர். அதேவேளை ஆர்மீனியஸின் போதனைகளைப் பின்பற்றிய 300 பேர் பதவியிறக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர். இன்றுவரை டோர்ட் சினட்டின் தீர்ப்புக்கு எல்லா நாடுகளிலும் இருக்கின்ற கல்வினித்துவ சபைகள் பெருமதிப்பளித்து வருகின்றன.

கேள்வி 104: திருவிருந்து (கர்த்தருடைய பந்தி) என்றால் என்ன?

பதில்: புதிய உடன்படிக்கையின் திருநியமங்களில் ஒன்று திருவிருந்து. கிறிஸ்து ஏற்படுத்தியபடி அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் அளிப்பதன் மூலமும், அவற்றில் பங்குகொள்வதன் மூலமும் கிறிஸ்துவின் மரணம் திருவிருந்தில் எடுத்துக்காட்டப்படுகிறது. தகுதியோடு அதில் பங்குபெறுகிறவர்கள் சரீரப் பிரகாரமாகவோ, மாம்சப்பிரகாரமாகவோ அல்லாமல் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் சரீரத்திலும், திரு இரத்தத்திலும், அவருடைய சகல பலாபலன்களிலும் பங்காளர்களாகி ஆத்மீக போஷாக்கடைந்து கிருபையிலும் வளர்கிறார்கள்.

(1 கொரி. 11:23–26; 1 கொரி. 10:16).

கேள்வி 105: தகுதியோடு திருவிருந்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானவை யாவை?

பதில்: திருவிருந்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்கள் அபாத்திரமாய் திருவிருந்தில் பங்குகொண்டு ஆக்கினைத் தீர்ப்பை அடையாதபடிக்கு, கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறிந்துகொள்ளுகிறோமா என்று தங்களுடைய அறிவையும், திருவிருந்தைப் புசிக்கும்படியாக தங்களுடைய விசுவாசத்தையும், தங்களுடைய மனந்திரும்புதலையும், அன்பையும் சோதித்துப் பார்த்து புதிய கீழ்ப்படிதலோடு திருவிருந்தில் பங்குகொள்ள வேண்டும்.

(1 கொரி. 11:28–29; 2 கொரி. 13:5; 1 கொரி. 11:31; 1 கொரி. 11:16–17; 1 கொரி. 5:7–8).

**விளக்கக் குறிப்பு:** கர்த்தரின் வேதம் புதிய ஏற்பாட்டின் நான்கு பகுதிகளில் திருவிருந்தைப் பற்றிய விளக்கத்தைத் தருகிறது. மத்தேயு 26:26–29; மாற்கு 14:22–25; லூக்கா 22:17–20; 1 கொரி. 11:23–26. இந்நான்கு பகுதிகளிலும் திருவிருந்து பற்றிய தெளிவான விளக்கங்களைக் கர்த்தர் நமக்குத் தந்திருக்கிறார். இருந்தபோதும் இதுபற்றிய பல தவறான போதனைகளை உருவாக்கி சுவிசேஷத்தைப் பலர் குழப்பப் பார்த்திருக்கிறார்கள். திருவிருந்து பற்றிய இந்த வினாவிடைப் போதனை அத்தகைய தவறுகளில் இருந்து நம்மைக் காப்பாற்ற முனைகின்றது.

**கத்தோலிக்க மதத்தின் போதனை**

இந்த இரு வினாவிடைகளில் இருந்து திருவிருந்தின் இரண்டு வெளிப்புற அம்சங்களாக அப்பமும், திராட்சை இரசமும் இருப்பதைக் கவனிக்கிறோம். சரீரபூர்வமாகவோ, உலகப்பிரகாரமாகவோ இவற்றில் கிறிஸ்துவின்

சரீரமோ, இரத்தமோ இருக்கவில்லை என்கின்றன இந்த வினாவிடைகள். இவற்றின் மூலம் சரீரப்பிரகாரமாக கிறிஸ்து தன்னை ஒப்புக்கொடுப்ப தில்லை. இவற்றை ஆத்துமாக்களுக்கு சபைப் போதகர் அளிக்கும்போது கண்கட்டி வித்தைபோல் இந்த இரண்டு அம்சங்களும் உருமாற்றமடைவது போன்ற எந்த அற்புதமும் அங்கே நிகழ்வதில்லை. ரோமன் கத்தோலிக்க மதம் இதைத்தான் போதித்து வருகிறது. இது பெருந்தவறு. கத்தோலிக்க மதம், மாஸ் ஆகிய அற்புதம் நிகழ்கிறபோது அப்பம் கிறிஸ்துவின் சரீரமாக வும், திராட்சை இரசம் கிறிஸ்துவின் இரத்தமாகவும் உடனடியாக மாறி விடுகின்றன என்ற தவறான போதனையை அளிக்கின்றது. இதை ஆங்கிலத் தில் Transubstantiation என்று அழைக்கிறார்கள். இதன் மூலம் மாஸ் நிகழ்கிறபோது அப்பமும், இரசமும் அற்புதமாக உருமாறிவிடுகின்றன என் கிறது கத்தோலிக்க மதம். அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் பெற்றுக் கொள்கிறவர்கள் மெய்யாகவே கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள் என்கிறது கத்தோலிக்க மதம். கத்தோலிக்க மதப் போதனை தவறானது. இருந்தபோதும் வேதத்தில் இத்தகைய அற்புதத்தை நம்மால் வாசிக்க முடிகிறது. இயேசு கானானில் நடந்த திருமண வைபவத் தில் தண்ணீரை மெய்யான திராட்சை இரசமாக மாற்றினார். அது உண்மையான Transubstantiation. இதை யோவான் 2:1-11ல் வாசிக்கலாம். அத்தினத்தில் வெறுந் தண்ணீரை இயேசு திராட்சை இரசமாக்கினார். அன்று இயேசு அற்புதம் செய்வதற்கு முன் தண்ணீர் தண்ணீராக மட்டுமே இருந்தது என்பதை எல்லோரும் அறிந்திருந்தார்கள். இயேசு அற்புதம் செய்த பிறகு தண்ணீர் திராட்சை இரசமாக மாறியதையும் எல்லோரும் உணர்ந்தார்கள். இந்த அற்புதத்திற்கு அன்று பெருந்தொகையான சாட்சிகள் இருந்தார்கள். இந்த அற்புதத்தை அவர்களுக்கு எவரும் விளக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆனால், ரோமன் கத்தோலிக்க மதம் அப்பமும், திராட்சை இரசமும் கிறிஸ்துவின் சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுவதாக பொய்யைச் சொல்லி மனிதர்களை நம்பவைக்க முயல்கிறது. இயேசு கானானில் செய்த அற்புதத்தைப்போல மாஸின்போது அப்பமும், திரா ட்சை இரசமும் மாற்றமடைவதில்லை.

### லூதரன் சபையின் போதனை

லூதரன் சபையினர் திருவிருந்து பற்றிய இன்னொருவித போதனையைக் கொடுக்கிறார்கள். இவர்களுடைய விளக்கத்துக்கு Consubstantiation என்று பெயர். இவர்களுடைய விளக்கத்தின்படி ஆரம்பத்தில் அப்பம் அப்பமாக வும், திராட்சை இரசம் திராட்சை இரசமாகவுமே இருக்கின்றன. ஆனால், திருவிருந்து கொடுக்கப்படுகின்ற நேரத்தில் திடீரென அப்பத்தில் கிறிஸ்து வின் சரீரம் வந்து இணைந்துகொள்வதாக அல்லது தங்கிவிடுவதாக அவர் கள் விளக்கமளிக்கிறார்கள். அதாவது அப்பம் அப்பமாகத்தான் இருக்கிறது; இருந்தபோதும் அதில் கிறிஸ்துவின் சரீரமும் புதிதாக சேர்ந்துகொள்கிறது என்பது அவர்களுடைய விளக்கம். உதாரணத்திற்கு, கொல்லனொருவன் இரும்பை உலையில் போட்டு சூடாக்குகிறான் என்று வைத்துக் கொள் வோம். அவன் அதை உலையில் இருந்து வெளியில் எடுக்கும்போது அந்த இரும்பு கொதிக்கும் சூட்டோடு இருப்பதைப் பார்க்கிறோம். இரும்பு

இப்போதும் இரும்பாகத்தான் இருக்கிறது. இரும்பு தன் நிலையை இழந்து விடவில்லை. ஆனால், அதோடு தகிக்கும் வெப்பம் சேர்ந்திருப்பதால் இப்போது தகிக்கும் இரும்பாக அது இருக்கிறது. இந்தவிதமாகத்தான் லூதரன் சபையாரின் போதனை இருக்கிறது.

**சீர்திருத்த சபையாரின் போதனை**

இதுவரை நாம் பார்த்த இந்த இரண்டு விளக்கங்களின்படியும் கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் திருவிருந்தில் பங்குபெறுகிறவர்கள் "சரீரப்பிரகாரமாகவும் உலகப்பிரகாரமாகவும்" அநுபவிக்கிறார்கள். அதாவது திருவிருந்தில் பங்குபெறுகிறவர்கள் நரமாமிசத்தை உண்கிறவர்கள் போல் கிறிஸ்துவின் சரீரத்தை உண்டு அவருடைய இரத்தத்தை அருந்துகிறார்கள். ஆனால், இந்த இரண்டு போதனைகளும் முற்றிலும் வேதத்துக்குப் புறம்பானவை. இப்போதனைகளுக்கு மாறாக சீர்திருத்த திருச்சபைப் போதனையாளர்களின் திருவிருந்து பற்றிய விளக்கம் அமைந்திருக்கின்றது. சீர்திருத்தப் போதனையின்படி அப்பமும், திராட்சை இரசமும் திருவிருந்து கொடுக்கும்போது அதே நிலையிலேயே எந்தவித மாற்றத்தையும் அடையாமல் இருக்கின்றன. அவற்றைப் பெற்றுக்கொள்கிறவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் நினைப்பூட்டும் அம்சங்களாக மட்டுமே அவற்றைக் கருதி, தங்களுடைய விசுவாசத்தினால் ஒரே தடவை நிறைவேறிய கிறிஸ்துவின் கல்வாரி சிலுவைப் பலன்களை ஆத்மீகரீதியில் அடையும்படியாக அவற்றைப் பெற்றுப் புசிக்கிறார்கள். இதுவே சீர்திருத்தப் போதனை (Reformed Doctrine) திருவிருந்துக்கு தரும் விளக்கம். இந்த விளக்கமே வேதபூர்வமான விளக்கமாகும்.

இயேசு கிறிஸ்து தன்னுடைய சீஷர்கள் மத்தியில் திருவிருந்தை ஏற்படுத்தியபோது சீஷர்கள் அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் புசிக்கவில்லை. அப்போது அப்பமும், திராட்சை இரசமும் மாற்றமடையவில்லை. அவற்றில் இயேசு சரீரப்பிரகாரமாக இருக்கவில்லை. இயேசு அவர்களுக்கு தன்னுடைய சரீரத்தையோ, இரத்தத்தையோ கொடுக்கவில்லை. இயேசு அவர்கள் மத்தியில், அவர்களோடு இருந்து அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் மட்டுமே அவர்களுக்கு அளித்தார். இந்த சம்பவத்தை நினைவுகூர்ந்து பின்னால் பவுல் திருவிருந்து பற்றி 1 கொரி. 11ல் விளக்கம் கொடுக்கும்போது பின்வருமாறு கூறுகிறார்: "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாக இருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" *(1 கொரி 10:16)*. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" *(1 கொரி. 11:26)*. பவுலின் வார்த்தைகளில் இருந்து அப்பமும், இரசமும் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நாமடைந்திருக்கிற ஆத்மீகப் பலன்களைக் குறிப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. திருச்சபைத் தலைவர்களில் ஒருவரான ஆகஸ்டீன் (Augustine) ஒருமுறை சொன்னார்: "யூதாஸ் இயேசுவோடிருந்து அப்பத்தைச் சாப்பிட்டான், ஆனால், அப்பத்தோடு இயேசுவைச் சாப்பிடவில்லை".

## நம்மை நாமே சுயபரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும் (Self Examination)

திருவிருந்தைப் பெற்றுக்கொள்ள வரும்போது ஆத்துமாக்கள் தங்களைத் தாங்களே நிதானித்து அறிய வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார். அதாவது, அவர்கள் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது இதன் பொருள். திருவிருந்தின் மூலம் நாம் ஆத்மீக பலன்களை அடைவதால் சுயபரிசோதனை அவசியமாகிறது. இது திரு விருந்தெடுக்கும்போது மிகவும் அவசியமாகிறது. 1 கொரி. 11ல் பவுல் திரு விருந்து பற்றி விளக்கம் கொடுக்கும்போது, “அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசிக்கக்கூடாது” என்று சொன்னதன் பொருளை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். பொதுவாகவே அநேகர் திருவிருந்தெடுப் பதற்கு தாம் தகுதியற்றவர்கள் என்று எண்ணி இருந்து விடுகிறார்கள். நம்மில் எவருமே திருவிருந்தில் பங்குகொள்ளத் தகுதியற்றவர்கள்தான். நாமெல்லோருமே பாவிகளாக கர்த்தருக்கு முன் தேவ மகிமையை இழந்து நிற்கிறோம் (ரோமர் 3:23). திருவிருந்தெடுப்பதற்கு தகுதியுள்ளவர்களாய் இருப்பது அவசியம். ஆனால், அதற்குப் பொருள் கர்த்தருடைய ஆசீர்வா தத்தைப் பெறுவதற்கு நாம் தகுதியுள்ளவர்களாய் இருப்பது என்பதல்ல. கிறிஸ்துவின் மரணத்தை நினைவுறுத்தும் திருவிருந்தில் பங்குகொள்ள வருகிறோம் என்ற சிந்தனையோடும், செய்யப்போகிற காரியத்துக்குத் தகுந்த மனநிலையோடும், சிந்தனையோடும், இருதயத்தில் பரிசுத்தத்தோடும் வருவதையே அது குறிக்கிறது. இதன் மூலம் திருவிருந்து எடுக்க வருகிற வேளையில் ஏனோதானோவென்று அலட்சியமாக வந்து அதை அசட்டை செய்யக்கூடாது என்று விளக்குகிறார் பவுல். அதற்கு மாறாக திருவிருந்து எடுக்க வருகிறவர்கள் சுயபரிசோதனைக்கு தம்மை உட்படுத்தி கர்த்தருக்கு முன் நாம் பாவிகள் என்ற சிந்தனையோடு, அவருடைய எந்த ஆசீர்வாதத் துக்கும் நாம் தகுதியற்றவர்கள் என்ற தாழ்மையுணர்வோடு, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் மட்டுமே பரலோக பாக்கியம் தமக்குண்டு என்ற ஆத்மீக சிந்தனைகளோடும் தேவபயத்தோடும் அதில் பங்குகொள்ள வேண்டும்.

இந்த வினாவிடை “கர்த்தருடைய சரீரத்தை நிதானித்து அறிந்து கொள்ளுகிறோமா” என்று நம்முடைய அறிவை ஆராய்ந்து பார்க்கும்படி சொல்லுகிறது. இதற்கு அர்த்தம், கிறிஸ்துவின் மரணத்துக்கும் ஏனைய எல்லா மரணங்களுக்கு இடையில் உள்ள வேறுபாட்டை நாம் அறிந்திருக் கிறோமா என்று நம்மையே ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதுதான். இதன் மூலம் தன்னுடைய மக்களுக்காக அவர்களுடைய பாவங்களையும், தேவ கோபத்தையும் தன்மேல் தாங்கி மரித்திருக்கும் கிறிஸ்துவின் மரண த்தை நாம் உணர்ந்து மதித்து திருவிருந்தில் கலந்துகொள்ள வேண்டும் என்பது பொருள். சுருக்கமாக சொல்லப்போனால், கிறிஸ்து நமக்காக தம்மையே பலிகொடுத்து நமது இரட்சிப்புகுரிய அனைத்தையும் நிறை வேற்றி நம்மை இரட்சித்திருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து தாழ்மை யோடு திருவிருந்தில் பங்குகொள்ள வேண்டுமென்பதுதான். ஆகவே, திருவிருந்தில் பங்குகொள்ள பாத்திரமான மனிதன் தான் எந்தளவுக்கு

தகுதியற்றவன் என்பதை உணர்ந்து கர்த்தரிடம் மிகுந்த நன்றியறிதலோடு வருகிறவனாக இருக்க வேண்டும்.

திருவிருந்தில் கலந்துகொள்ள பாத்திரமுள்ளவனாக இருக்க கிறிஸ்து நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பதை அறிவுபூர்வமாக உணர்ந்திருப்பது மட்டும் போதாது. அதற்கும் மேலாக நம்முடைய இருதயத்தை நாம் சோதித்துப் பார்த்து கர்த்தரோடு நமக்கு நல்ல ஆத்மீக உறவும், ஐக்கியமும் இருக்கிறதா என்றும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நொருங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்தை நாம் கொண்டிருக்கிறோமா என்றும், கிறிஸ்துவில் நாம் தொடர்ந்து விசுவாசத்தோடு இருக்கிறோமா என்றும், அவரில் அன்பு தொடர்ந்து நிலையாக இருக்கிறதா என்றும், அந்த அன்பின் அடிப்படையில் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து வருகிறோமா என்றும் நம்மை நாம் ஆராய்ந்து பார்த்துக்கொள்ளும்படி வேதம் வற்புறுத்துகிறது. இந்த இடத்தில்தான் அநேக விசுவாசிகள் தங்களைப் பற்றிய சந்தேகத்துடன் வாழ்கிறார்கள். கர்த்தரில் இருக்க வேண்டிய அளவுக்கு விசுவாசம் இல்லையே, அன்பு இல்லையே, மனந்திரும்புதல் இல்லையே என்று எண்ணிப் பார்த்து தங்களைப் பற்றிய சந்தேகத்துடன் வாழ்கிறார்கள். இத்தகைய எண்ணப்போக்கைப் பொதுவாகவே பல விசுவாசிகளில் காணலாம். ஆனால், இந்த இடத்தில் விசுவாசிகள் கவனமாக நடந்துகொள்ள வேண்டியது அவசியம். நம்மை நாம் பரிசோதித்து மனந்திரும்புதலும், அன்பும், விசுவாசமும், கீழ்ப்படிதலும் உண்டா என்று ஆராய்ந்து பார்ப்பது அவசியம். ஆனால், அத்தகைய பரிசோதனைக்குப் பிறகு இவையெல்லாம் நம்மில் மிகவும் அதிகமாகவும், பூரணமாகவும் இருப்பதாக உணர்ந்து முழுத்திருப்தியுடன் நமது முதுகை நாமே தட்டிக்கொடுக்க வேண்டும் என்று வேதம் எந்த இடத்திலும் சொல்லவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கூடத் தன்னுடைய இருதயத்தைப் பரிசோதித்துப் பார்த்து, “நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? என்றுதான் அங்கலாய்த்திருக்கிறார். இதிலிருந்து அவர்கூடத் தன்னில் விசுவாசமும், அன்பும், கீழ்ப்படிதலும் வெறும் ஆரம்ப நிலையில் இருந்ததையே உணர்ந்திருக்கிறார் என்று அறிந்துகொள்ளுகிறோம். அப்படியானால் பவுல் எப்படி திருவிருந்தில் கலந்துகொள்ள வந்தார்? ஏனென்றால், கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க இந்த உலகத்துக்கு வந்தார் என்பதை அவர் அறிந்திருந்தார். அத்தோடு தான் வெறும் அடிமட்டப்பாவியாக இருந்தபோதும் கிறிஸ்து மட்டுமே தனக்கு எல்லாம் என்பதையும், தன்னுடைய இருதயத்தின் ஆனந்தமும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். கர்த்தரின் கிருபையின் விளைவுகளுக்கான சாட்சியங்களைத் தன் இருதயத்தில் சிறிதளவாகவே அவர் கண்டபோதும், கிறிஸ்துவின் நிறைவேறிய சிலுவைத் தியாகமும், அவரும் இல்லாவிட்டால் தனக்கு பரலோகமில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். இன்னொருவிதமாக சொல்லப்போனால் எந்தளவுக்கு இந்தக் கிருபைகள் நம்மில் வளர்ந்திருக்கின்றன என்பதைப் பற்றியல்லாமல் அந்தக் கிருபைகள் நம்மில் தொடர்ந்திருக்கின்றனவா என்பதை அறிந்துணர்வதிலேயே நாம் அதிக அக்கறை காட்டவேண்டும். இந்தவிதமான எண்ணங்களோடு

திருவிருந்தில் கலந்துகொள்ள வராதவர்களே ஆபத்தான நிலையிலிருக் கிறார்கள். அப்படிப்பட்டவர்களே இஸ்ரவேலின் பரிசேயர்கள். அவர்கள் தங்களைப் பற்றிய பெருமிதமான எண்ணங்களோடு கர்த்தரின் ஆலயத் துக்கு வந்தார்கள். கர்த்தரை ஆராதிக்கவும், அவர் முன் ஜெபிக்கவும் தங்க ளுக்கு எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன என்ற அகங்காரத்துடன் ஆலயத்துக்கு வந்தார்கள். பாவ உணர்வு துளியும் அவர்களுடைய இருதயங் களில் இருக்கவில்லை. ஆனால், புறஜாதியானோ, "கர்த்தாவே, என் பாவங்களை மன்னியும்" என்று கர்த்தரின் முன் மண்டியிட்டான் (லூக்கா 18:10-13). பாவத்தைத் தவிர தன்னில் வேறு எதுவுமில்லை என்ற உணர்வோடு அந்தப் பாவத்துக்கு கர்த்தர் மட்டுமே பரிகாரம் செய்ய முடியும் என்ற தூய உணர்வுகளோடு அவன் கர்த்தரின் முன் பணிந்தான். அவனையே நாம் பின்பற்ற வேண்டும்.

திருவிருந்தில் பங்குகொள்ள வரும்போது பாவமன்னிப்பைப் பெறவும், இயேசுவின் திருஇரத்தத்தால் நாம் கழுவப்பட வேண்டும் என்ற எண்ணத் தோடும், நாம் மேலும் மேலும் பரிசுத்தராக வாழ கர்த்தர் நமக்கு வல்லமை யைத் தரவேண்டும் என்ற எண்ணத்தோடும் வந்து அதில் கலந்துகொண்டு கர்த்தரில் களிப்படைய வேண்டும். அப்படித் திருவிருந்தில் நாம் கலந்து கொள்ளுகிறபோது, அவ்வேளையில் அப்பம் பகிர்ந்து கொடுக்கப்பட்டு, திராட்சை இரசம் எல்லோருக்கும் விநியோகிக்கப்படுகிறபோது, கிறிஸ்து வின் ஒரே தடவை நிறைவேறிய கல்வாரி சிலுவைத் தியாகத்தினால் மட்டுமே நமக்கு இரட்சிப்பு கிடைத்திருக்கிறது, வேறு எதனாலும் அல்ல என்று நாம் அவருக்கே சகல மகிமையையும் அளிக்கிறோம். திருவிருந்தின் மூலம் அவர் மட்டுமே சகல மகிமையையும் அடைய வேண்டும்.


# சிறப்புச் சலுகையில் நல்ல நூல்கள்

மூன்று நல்ல நூல்களை வாசகர்கள் சிறப்புச் சலுகையாக முப்பது ரூபாய் மட்டும் (ரூபாய் 30/-) நன்கொடை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

**பரிசுத்த வேதாகமம்**
**பிரசங்கம் ஏன்!**
**கிறிஸ்தவன் யார்!**

இந்த நூல்களை வாசகர்கள் கீழ்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபை
57/2 டி. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 600425
தொலைபேசி எண்: 9994181010

# கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம் - 6

இந்த உலகத்தில் திருச்சபை ஊழியப் பணிகளை எந்தமுறையில் செய்ய வேண்டும் என்று கர்த்தர் வேதத்தில் விளக்கியிருக்கின்ற விதிகளைப் பற்றி (Principles of Mission) *11/2-2005* இதழில் இருந்து தொடர்ச்சியாக எழுதி வந்திருக்கிறோம். அதைத் தொடருவதற்கு சூழ்நிலைகள் இடந்தரவில்லை. இந்த இதழில் இதுவரை நாம் பார்த்திருப்பவை பற்றி சுருக்கமாகக் கவனித்துவிட்டு தொடர்ந்து திருச்சபை ஊழியப்பணிகள் பற்றி வேதம் நமக்குத் தரும் போதனைகளை ஆராய முற்படுவோம். கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியங்களைச் செய்யவேண்டுமானால் நாம் அறிந்திருக்க வேண்டிய மூன்று முக்கிய வேதவிதிகளை இதுவரை பார்த்திருக்கிறோம்:

**(1) திருச்சபையை இந்த உலகத்தில் கர்த்தர் தம்முடைய இறையாண்மையின் அடிப்படையில் அமைக்கிறார்.** இந்த சத்தியத்தை நாம் நினைவுகூருவதற்குக் காரணம் திருச்சபை ஊழியப்பணியில் ஈடுபடும்போது அந்தப்பணி சர்வ வல்லவராகிய கர்த்தருடையது என்பதையும், அந்தப்பணியில் கர்த்தருடைய அதிகாரத்துக்குட்பட்டு தேவ பயத்தோடேயே நாம் இந்த உலகத்தில் ஈடுபட வேண்டுமென்பதையும் நாம் ஆரம்பத்திலேயே உணரவேண்டுமென்பதற்காகத்தான். நம்முடைய திருச்சபை அமைப்புப் பணிகள் அனைத்தும் கர்த்தருடைய இறையாண்மையைக் கருத்தில் கொண்டு அதற்குக் கட்டுப்பட்டு அமைந்தவையாக இருக்க வேண்டும் *(11/4-2005)*.

**(2) கர்த்தரின் வார்த்தை சகல அதிகாரத்தையும் தன்னில் கொண்டு அனைத்தின் மீதும் அதிகாரமுள்ளதும், சகலத்துக்கும் போதுமானதாகவும் இருக்கின்றது.** இந்த சத்தியத்தின் மூலம் நாம் திருச்சபை அமைக்கும் பணி கர்த்தரின் அதிகாரமுள்ள வார்த்தைக்குட்பட்டு அமையவேண்டுமென்பதை அறிந்து கொள்கிறோம். கர்த்தருடைய அதிகாரமுள்ள வார்த்தையே திருச்சபை அமைப்புப் பணி பற்றிய சகல போதனைகளையும் நமக்குத் தருவதாக இருக்கிறது. *(12/1-2006)*.

**(3) சுவிசேஷ ஊழியத்தில் திருச்சபையே அதிமுக்கியமானதும், அடிப்படையானதுமான இடத்தை வகிக்கிறது. சுவிசேஷ ஊழியங்கள் எப்போதும் திருச்சபையில் ஆரம்பித்து திருச்சபை அமைப்பதிலேயே போய் முடியவேண்டும்.** திருச்சபை அமைக்கும் பணியில் அல்லது திருச்சபையில் ஆத்துமாக்களைக் கொண்டு சேர்க்கும் பணியில் போய் முடியாத சுவிசேஷ ஊழியங்கள் அறைகுறை ஊழியங்களே. சுவிசேஷத்தைக் கர்த்தர் தந்திருப்பதற்குக் காரணமே

அதனால் விடுதலை அடைகின்ற ஆத்துமாக்கள் அவருடைய சபையில் இருந்து வளரவேண்டுமென்பதற்காகத்தான் (12/2-2006).

இனி நாம் திருச்சபை ஊழியப்பணியைச் செய்வதற்கு அவசியமான வேதம் போதிக்கும் நான்காவது விதியை விளக்கமாகப் பார்ப்போம்.

**(4) அப்போஸ்தலர்களுடைய போதனைகளையும் அவர்களுடைய வழிமுறைகளையும் பின்பற்றித் திருச்சபைகள் இந்த உலகத்தில் அமைய வேண்டும்.** - திருச்சபை அமைக்கும் பணியை நாம் எதிலிருந்து அறிந்துகொள்கிறோம்? பாவத்தில் இருக்கும் இந்த உலகம் அதைப் பற்றி நமக்கு விளக்க முடியாது. உலக ஞானம் இந்த ஆத்மீகப் பணிக்கான ஆலோசனைகளைத் தரமுடியாது. அப்படியானால் கர்த்தர் மட்டுமே தன்னுடைய திருச்சபையை இந்த உலகத்தில் எப்படி அமைக்க வேண்டும் என்பதை நமக்கு காட்டித்தர வேண்டும். அதை அவர் நமக்கு எதன் மூலம் காட்டித்தருகிறார்? ஆதியில் தேவன் பங்குபங்காகவும், வகைவகையாகவும் பேசினார். கர்த்தரின் வெளிப்படுத்தல் அனைத்தும் ஒட்டுமொத்தமாக எழுத்தில் வடிக்கப்பட்டு வேதமாக நமக்கு அளிக்கப்பட்டபின்பு கர்த்தர் நேரடியாக நம்மோடு பேசுவதையும், தீர்க்கதரிசிகள் மூலம் பேசுவதையும் நிறுத்திக்கொண்டு விட்டார். கர்த்தர் இன்று வேதத்தின் மூலம் மட்டுமே நம்மோடு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். அதனால்தான் ஏற்கனவே இரண்டாவது விதியில் கர்த்தருடைய வேதம் அதிகாரமுள்ளது என்பதைப் பார்த்தோம். நாம் எப்படி வாழ வேண்டும் என்றெல்லாம் கர்த்தர் தம்முடைய வேதத்தில் இருந்து மட்டுமே நமக்கு வழிகாட்டி வருகிறார். வேதமே அவருடைய நாவாக இன்று இருந்து வருகிறது. வேத போதனைகளே அவருடைய சித்தமாக இருந்துவருகிறது. வேதத்தை நிராகரிப்பது கர்த்தரை நிராகரிப்பதற்கு சமம்.

இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் திருச்சபை அமைப்புப் பணி பற்றி கர்த்தர் இன்றைக்கு தன்னுடைய வேதத்தின் மூலம் மட்டுமே நமக்கு வழிகாட்டி வருகிறார். சத்திய வேதம் ஆதியில் திருச்சபை எப்படி அமைக்கப்பட்டது என்பதை நமக்கு விளக்கி ஆதிசபையை உதாரணங்காட்டியும், அப்போஸ்தலர்களுடைய போதனைகள் மூலமாகவும் திருச்சபை ஊழியப் பணி பற்றிய சகல விளக்கங்களையும் நமக்குத் தருகிறது. அப்போஸ்தல நடபடிகள் விளக்கும் ஆதித் திருச்சபை அமைக்கப்பட்ட முறையும், புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலப் போதனைகளும் இல்லாமலிருந்திருந்தால் நாம் இந்த உலகத்தில் திருச்சபை ஊழியப்பணியில் ஈடுபடவே முடியாது. வேதம் விளக்குகின்ற அந்தப் போதனைகளை நாம் நிராகரிப்போமானால் நமது திருச்சபை ஊழியப்பணி கர்த்தரைச் சார்ந்ததாக ஒருபோதும் இருக்கமுடியாது. அப்போஸ்தல நடபடிகளும், புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலப் போதனைகளுமே திருச்சபை ஊழியப்பணியில் நாம் எப்படி ஈடுபட வேண்டும் என்ற விளக்கங்களையெல்லாம் தருகின்ற சத்திய வசனங்களாக இருந்து வருகின்றன. அந்தப் போதனைகளை மீறி அமைகின்றவையும், அந்தப் போதனைகளோடு ஒத்துவராதவையும் கர்த்தருடைய ஊழியங்களாக ஒருபோதும் நிச்சயமாக இருக்க முடியாது. இனி புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கின்ற திருச்சபை ஊழியம் பற்றிய அப்போஸ்தலப்

போதனைகளை விபரமாக ஆராய்வோம்.

**அ. பெந்தகொஸ்தே தினத்தில் திருச்சபையின் பிறப்பு**

இயேசு கிறிஸ்து பன்னிரெண்டு சீஷர்களைத் தயார் செய்து சுவிசேஷ ஊழியத்தின் மூலம் சபை நிறுவ மத்தேயு 28:18-20 கட்டளையின்படி அவர்களை அனுப்பி வைத்தார். எருசலேமில் அவர்கள் கூடி சுவிசேஷத்தை அறிவித்து பெந்தகொஸ்தே நாளில் திருச்சபை மூவாயிரம் பேரோடு வளர்ந்ததை அப்போஸ்தலர் நடபடிகள் நமக்கு விளக்குகின்றது. திருச்சபை பிறந்த இந்த ஆரம்பகாலப் பகுதியில் அது அப்போஸ்தலர்களால் ஆரம்பிக்கப்பட்டது என்பதை நாம் அறிய முடிகின்றது. இக்காலப்பகுதியில் விசுவாசிகளிடம் பழைய ஏற்பாடு மட்டுமே இருந்தது. கர்த்தர் இக்காலப்பகுதியில் அப்போஸ்தலர்கள் மூலமாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாகவும் தனது சித்தத்தைத் தொடர்ந்து தம் மக்களுக்கு வெளிப்படுத்தி வந்தார். இதனால் திருச்சபை தன்னுடைய ஆரம்ப காலப்பகுதியில் விசேஷமான வரங்களைக் கொண்டவர்களைத் தன்னில் கொண்டிருந்ததை அறிய முடிகிறது. திருச்சபை நிறுவப்பட்டு வளர்ந்து வந்தபோது இந்த அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும், ஏனைய அற்புத வரங்களைக் கொண்டிருந்தவர்களும் மெல்ல மெல்ல மறைய ஆரம்பித்தனர். அதற்குப் பிறகு கர்த்தர் சபைக்கு அப்போஸ்தலர்களைத் தரவில்லை. அப்போஸ்தலர்களுடைய காலம் ஆதி சபையோடு முடிந்துவிட்டது. அதற்குக் காரணம் கர்த்தருடைய சித்தம் முழுவதுமாக பழைய புதிய ஏற்பாட்டு நூல்களாக எழுதி முடிக்கப்பட்டதுதான். வேதம் நமக்கு பூரணமாகக் கொடுக்கப்பட்டபின் அப்போஸ்தலர்களுடைய அவசியம் திருச்சபைக்கு இல்லாமல் போனது. அதேபோல்தான் தீர்க்கதரிசிகளையும், அற்புத வரங்களைக் கொண்டிருந்தவர்களையும் கர்த்தர் அதற்குப் பிறகு தொடர்ந்து திருச்சபைக்குக் கொடுப்பதை நிறுத்திக் கொண்டார். எனவே, பெந்தகொஸ்தே தினத்திலும் அதற்குப்பிறகு திருச்சபை நிறுவப்பட்டு வளர்ந்த ஆதிகாலத்திலும் நிகழ்ந்த அனைத்து நிகழ்ச்சிகளையும், கிரியைகளையும் நாம் தொடர்ந்து திருச்சபையில் இன்று எதிர்பார்க்க முடியாது; கூடாது. இக்காலப்பகுதியில் நிகழ்ந்த செயல்களின் மூலம் போதிக்கப்படும் சத்தியங்களை மட்டுமே நாம் இன்று பின்பற்ற வேண்டும்.

பெந்தகொஸ்தே தினத்தில் அப்போஸ்தலர்கள் முதலில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் என்று வாசிக்கிறோம். சுவிசேஷப் பிரசங்கமில்லாமல் திருச்சபை ஊழியம் செய்ய முடியாது. இயேசு கிறிஸ்துவே ஒரே தேவன் என்பதைத் தெளிவாக அவருடைய வருகை, சிலுவைத் தியாகம், மரணம், உயிர்த்தெழுதல் என்பவற்றோடு விளக்கி மக்கள் மனந்திரும்பி கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சிப்புக்காக விசுவாசிக்க வேண்டுமென்று பிரசங்கித்தார்கள். அப்படி அவர்கள் சுவிசேஷத்தைச் சொல்லும்போது அதற்கு அவர்கள் பயன்படுத்திய ஆயுதம் பிரசங்கம் மட்டுமே என்பதையும் நாம் நினைவில் கொள்ளுவது அவசியம். பரிசுத்த ஆவியின் வல்லமையோடு கூடிய சுவிசேஷப் பிரசங்கமில்லாத எந்த ஊழியமும் திருச்சபைப் பணியாக இருக்க முடியாது. சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலம் பெந்தகொஸ்தே தினத்தில் திருச்சபை உதயமானது என்று வாசிக்கிறோம். இதிலிருந்து

நாம் கவனிக்கும் சில முக்கிய உண்மைகள் பின்வருமாறு:

1. அன்று சுவிசேஷம் ஆவியின் வல்லமையால் பிரசங்கிக்கப்பட்டது.
2. அதைக் கேட்டு மனந்திரும்பிய விசுவாசிகள் (சீஷர்கள்) ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.
3. சீஷர்களுக்கான அடையாளங்களைக் கொண்டிருந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் மட்டும் திருச்சபை அங்கத்தவர்களாக சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள்.

திருச்சபை ஆரம்பமாக இந்த மூன்றும் அவசியமாக இருந்ததைப் பெந்தகொஸ்தே தினத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் மூலமாக அறிந்து கொள்ளுகிறோம். இவை எக்காலத்துக்கும் பொருந்துகிற சத்தியங்கள். அத்தோடு பெந்தகொஸ்தே தின நிகழ்ச்சிகளில் இருந்து வேறு சில பாடங் களையும் படிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். வேதபூர்வமான சுவிசேஷ ஊழியம் சபைகள் இல்லாத இடங்களில் திருச்சபைகள் அமைவ தில் போய் முடிய வேண்டும். அல்லது திருச்சபைகள் இருக்கின்ற இடங் களில் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் திருச்சபைகளில் போய் இணைந்து கொள்ளுவதில் முடியவேண்டும். இந்த இரண்டில் ஒன்று சுவிசேஷ ஊழியத்தின் மூலம் நிகழ்வதையே கர்த்தர் விரும்புகிறார், எதிர்பார்க்கிறார். சுவிசேஷ ஊழியத்தின் மூலம் மனந்திரும்பினேன் என்று சொல்லிக் கொண்டு எந்தவொரு சபையிலும் தங்களை இணைத்துக் கொள்ளாமல் திரிகிறவர்களைப் பற்றி இயேசு கேள்விப்பட்டதில்லை; அவர்களைப் பற்றி வேதத்திலும் நாம் வாசிப்பதில்லை.

### ஆ. திருச்சபை விஸ்தரிப்பு

பெந்தகொஸ்தே தினத்தில் எருசலேமில் நிறுவப்பட்ட திருச்சபை அப்போஸ்தலர் நடபடிகள் 1:8ன்படி சுவிசேஷத்தை ஏனைய பகுதிகள் தோறும் பிரசங்கிக்க ஆரம்பித்தது. இப்படியாக சுவிசேஷம் பிரசங்கிக்கப் பட்டு திருச்சபைகள் எவ்வாறு நிறுவப்பட்டன என்பதை அப்போஸ்தலர் நடபடிகள் 13ம் அதிகாரம் நமக்குத் தெளிவாக விளக்குகின்றது. இதிலிருந்து நாம் திருச்சபை ஊழியப்பணி பற்றி அறிந்துகொள்ள வேண்டிய சத்தியங் கள் அநேகம். இந்த சத்தியங்களைப் பின்பற்றியே இன்றைக்கு நாம் இந்த உலகத்தில் திருச்சபை ஊழியப்பணியில் ஈடுபட வேண்டும். வேதபூர்வமாக திருச்சபை ஊழியப்பணிகள் அமைய வேண்டுமானால் வேதம் விளக்கு கின்ற போதனைகளைப் பின்பற்றுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. அப்போஸ்தலர் நடபடிகள் 13 அதிகாரத்தில் திருச்சபை அமைப்புப் பற்றி நாம் கவனிக்கின்ற சத்தியங்கள் யாவை என்பதை இனி ஆராய்வோம்:

**1. திருச்சபை அமைப்புப் பணி ஏற்கனவே நிறுவப்பட்டு வளர்ச்சியடைந்திருந்த அந்தியோகியா சபையில் இருந்து ஆரம்பித்தது.**

அந்தியோகியா திருச்சபை எப்படி நிறுவப்பட்டது என்பதை அப்போஸ் தல நடபடிகளின் மூலம் விபரமாக அறிந்துகொள்கிறோம். எருசலேமில் சபைக்குத் துன்பம் உண்டாகியபோது யூதேயா, சமாரியா எங்கும் சபையார் சிதறிப்போய் சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் என்றும் (8:4) அதன் மூலம் அங்கெல்லாம் சபைகள் நிறுவப்பட்டதாகவும் அறிந்து

கொள்ளுகிறோம் (8:4-14; 9:31). அதேபோல் சிதறிப்போனவர்கள யூதேயா, சமாரிய நாடுகளுக்கு வெளியில் பெனிக்கே நாடு, சீப்பூரு தீவு, அந்தியோகியா பட்டணம்வரையும் சுற்றித் திரிந்து சுவிசேஷம் சொன்னார்கள் (11:20-21). அவர்கள் மூலமாகவே அந்தியோகியாவில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு சபை நிறுவப்பட்டது (11:19-24). இங்கேதான் முதன் முதலாக கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் “கிறிஸ்தவர்கள்” என்ற பெயரால் அழைக்கப்பட்டார்கள் (11:26). எருசலேம் சபையால் அனுப்பப்பட்டு அங்கு ஊழியம் செய்து வந்த பர்னபா பின்பு தர்சுவுக்குப் போய் அங்கிருந்த பவுலைத் தன்னோடு அழைத்துக் கொண்டு அந்தியோகியாவுக்குப் போய் ஒரு முழு வருடம் சபையோடு இருந்து அவர்களுக்கு இருவருமாக உபதேசம் செய்தார்கள் (11:24-26). இந்த சபை இப்படியாக நிறுவப்பட்டு வளர்ந்து வந்தது. இந்நாட்களில் உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. யூதேயாவில் இருந்த சகோதரர்களின் குறை நீக்க அந்தியோகியா சபையார் தங்கள் திராணிக்குத் தக்கதாக பணத்தைச் சேகரித்து பர்னபா, பவுல் மூலமாக எருசலேம் சபை மூப்பர்களுக்கு அனுப்பி வைத்தார்கள் (11:27-30).

இவ்வாறாக வேதம் தருகின்ற சாட்சியங்களின் மூலமாக எவ்வாறு அந்தியோகியா சபை நிறுவப்பட்டு வளர்ந்து வந்திருந்தது என்பதை நாம் அறிந்துகொள்ளுகிறோம். இந்த சபையைப் பற்றித்தான் நாம் மறுபடியும் அப்போஸ். 13ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இந்த அதிகாரம் இந்த சபையைப் பற்றிய மேலும் விபரங்களை நமக்குத் தருகின்றது. இதன் முதல் வசனத்திலேயே (13:1) இந்த சபையில் அநேக போதகர்களும், தீர்க்கதரிசிகளும் இருந்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. இந்தளவுக்கு சபையில் போதிப்பதற்கும், சபை நடத்தவும் அதிகாரிகள் இருந்த காரணம் சபை பெருமளவுக்கு எண்ணிக்கையில் வளர்ந்திருந்ததுதான். அந்தளவுக்கு சபையில் போதகர்களின் தேவையும், அவர்களுடைய ஊழியமும் அவசியமாயிருந்தது. கர்த்தர் புறஜாதியினரின் மத்தியில் சுவிசேஷத்தை மேலும் பரவச் செய்து திருச்சபைகளை நிறுவுவதற்கு முதல் மிஷனரிகளை அனுப்பிவைத்தபோது இந்த சபையில் இருந்தே அதை ஆரம்பித்திருக்கிறார் என்பதை இந்த அதிகாரத்தின் 2ம், 3ம் வசனங்களில் இருந்து தெரிந்துகொள்ளுகிறோம்.

இந்தத் தெளிவான வேத விபரங்கள் திருச்சபை ஊழியப்பணி பற்றி நமக்குத் தரும் போதனை என்ன? திருச்சபை அமைக்கும் ஊழியத்திற்கு கர்த்தர் தன்னுடைய சபையை மட்டுமே பயன்படுத்தியிருக்கிறாரே தவிர எந்த மிஷனரி ஸ்தாபனத்தையும், அசோசியேஷன்களையும் ஏற்படுத்தவில்லை என்பதை முதலில் நாம் உணர வேண்டும். திருச்சபை என்ற ஒன்று இருக்கின்றதே என்ற எண்ணமே இல்லாமலும், திருச்சபையைப் பற்றிய மேலான வேத எண்ணங்கள் இல்லாமலும் இன்றைக்கு சுவிசேஷப் பணியை ஏனோதானோவென்று ஸ்தாபனங்களைக் கொண்டு செய்து வருகின்றவர்கள் பெரிய தவறைச் செய்துவருகிறார்கள். இன்றைக்கு சுவிசேஷ ஊழியம் செய்கிற அநேகர் தங்களைத் தாங்களை அந்த ஊழியங்களுக்கு நியமித்துக்கொள்கிறார்கள் அல்லது வேதாகமக் கல்லூரிகளின் மூலமாகவோ, ஸ்தாபனங்களின் மூலமாகவோ அனுப்பப்படுகிறார்கள்.

ஆனால், வேதம் இந்தப் பணியைச் செய்யக்கூடிய கர்த்தர் நியமித்திருக்கும் ஒரே நிறுவனமாக சபையையே நமக்குக் காட்டுகிறது. சபையே ஊழியக் காரர்களைத் தெரிவுசெய்து இந்தப் பணிகளுக்கு அனுப்பிவைத்திருப்பதை அப்போஸ். 18ல் வாசிக்கிறோம். திருச்சபையை நிராகரித்து வேறு நிறுவனங் களை நாம் சுவிசேஷப் பணிக்காக நாடுகின்றபோது கர்த்தரின் திருச்சபை யின் வல்லமையையும், அதன் மகிமையையும் நினைத்துப்பார்க்க மறந்து விடுகிறோம்; அல்லது உதாசீனப்படுத்திவிடுகிறோம். திருச்சபை ஊழியத் தைச் செய்வதற்கு கர்த்தருக்கு தன்னுடைய சபையைத் தவிர வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை; வேறு எதையும் அவர் பயன்படுத்தவுமில்லை. ஆரம் பத்தில் சுவிசேஷப் பணி திருச்சபை அமைப்பதில் முடிந்து அதிலிருந்தும் அதன் மூலமுமே ஏனைய இடங்களில் திருச்சபை நிறுவும் பணி நடந்திருக்கிறது.

2. **ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த அந்தியோகியா சபை தகுதியான பல போதகர் களையும், வரங்களையும் தன்னில் கொண்டிருந்தது.**

சுவிசேஷ ஊழியத்தின் மூலம் திருச்சபை அமைப்பதென்பது சாதாரண காரியமல்ல. உலகப் பிரகாரமாக நடந்து ஒரு தொழிலை ஆரம்பிப்பதற் கும் சபை அமைப்பதற்கும் இடையில் பெரிய வித்தியாசமுண்டு. திருச் சபைப் பணி ஆத்மீகப் பணியாகும். அது பரலோகத்தோடு தொடர்புடைய ஊழியம். கர்த்தர் படைத்துள்ள உலகத்தில் திருச்சபை நிறுவப்படுகின்ற போது உலகத்தோடு சம்பந்தமுள்ள சில விஷயங்களை நாம் திருச்சபை யில் பின்பற்றுவதைத் தவிர்க்க முடியாது. உதாரணத்துக்கு திருச்சபை கூடி வர ஒரு கட்டிடமும், அது கூடிவரத் தகுந்த நேரமும் அவசியம். இதெல்லாம் உலகத்தில் வாழ்கிற எவரும் பின்பற்ற வேண்டிய விஷயங்கள். ஆனால், பரலோகத்துக்கு சொந்தமான இரட்சிப்படைந்த ஆத்துமாக்களை இணைத்து திருச்சபை கட்டப்படுவதால் அதன் கட்டுமானத்துக்கு நாம் முழுவதும் கர்த்தரிலேயே தங்கியிருக்கிறோம். இந்த மாபெரும் பணிக்கு ஆத்மீக வளர்ச்சியும், முதிர்ச்சியும், ஞானமும் இருப்பவர்கள் அவசியம். அத்தகைய தகுதியுள்ளவர்களையே இறையாண்மையுள்ள கர்த்தரும் தன் பணியில் பயன்படுத்துவார்.

இந்த உண்மையைத்தான் நாம் அந்தியோகியா சபையில் பார்க்கிறோம். அந்தச் சபை நிறுவப்பட்டு வளர்ந்து வந்திருந்தது. அது ஆத்மீகத்தில் சிறந்த சபையாக இருந்தது. கர்த்தரின் ஆவியானவரின் ஈடுபாட்டை அந்தச் சபை ஊழியங்களில் நம்மால் பார்க்க முடிகிறது. ஆத்மீகத்தில் வளர்ந்திருந்த அந்தச் சபை எண்ணிக்கையில் மட்டுமல்லாமல் வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்திருந்தது. அதில் அநேக சபை அதிகாரிகள் இருந்தார்கள். அதாவது, அநேக போதகர்கள் இருந்தார்கள். அவர்கள் ஆத்மீக வளர்ச்சி யுள்ளவர்களாகவும், முதிர்ச்சியும், ஞானமும் உள்ளவர்களாகவும் இருந் தனர். அது மட்டுமல்லாமல் ஆத்மீகத்தில் சிறந்த வேத ஞானமுள்ளவர் களாகவும், திறமைசாலிகளாகவும் இருந்த அந்தப் போதகர்கள் அந்தி யோகியா சபையை வேத அறிவிலும், ஆத்மீகத்திலும் நிச்சயம் வளர்த்திருப் பார்கள். அதற்கு அறிகுறியாக ஆவியானவர் சபையில் அதிக ஈடுபாட் டோடு அசைவாடியதையும், சபை மக்கள் திருச்சபைப் பணியில் வைராக்

கியத்துடன் போதகர்களோடு ஜெபத்திலிருந்து ஒத்துழைத்திருந்ததையும் அப்போஸ். 13ம் அதிகாரத்தில் தெளிவாகக் கவனிக்க முடிகிறது.

இவை மட்டுமல்லாமல் அந்தியோகியா சபையில் சுவிசேஷத்தை வல்லமையோடு பிரசங்கித்து, வேத சத்தியங்களைத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் போதிக்கக்கூடிய வரங்களைக் கொண்டவர்களைக் கர்த்தர் எழுப்பியிருந்தார். அங்கே பர்னபாவையும், பவுலையும் நாம் பார்க்கிறோம். இவர்கள் சபை அமைப்புப் பணிக்குத் தேவையான ஆத்மீக வளர்ச்சியையும், வரங்களையும் கர்த்தரிடம் இருந்து பெற்றிருந்தார்கள். பல வருடங்கள் திருச்சபையில் இருந்து சபைப் போதகர்களாலும், சபையாராலும் ஆராயப்பட்டு அவர்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள். தங்களுடைய ஆத்மீக வரங்களை திருச்சபையில் ஏற்கனவே போதகர்களுக்குக் கீழிருந்து பயன்படுத்தி சபை ஆத்துமாக்களின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்திருக்கிறார்கள். கிறிஸ்துவை விசுவாசித்து பதினான்கு வருடங்களுக்குப் பின்பே பவுல் அந்தியோகியா சபையால் சுவிசேஷ ஊழியத்துக்கு பிரித்தெடுக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டார். இயேசுவால் நேரடியாக அழைக்கப்பட்டிருந்தும் அதுவரை அவர் சபைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து அதிலிருந்து கற்று, அனுபவத்தைப் பெற்று வளர வேண்டியிருந்தது. திருச்சபையாகிய பட்டறையில் புடம் போடப்பட்டு திருச்சபை ஊழியத்துக்காகக் கர்த்தரால் தயார் செய்யப்பட்ட நல்ல ஆயுதங்களாக பர்னபாவும், பவுலும் இருந்திருக்கிறார்கள். ஆவியானவர் சபை மத்தியில் பிரசன்னமாகி இவர்களை திருச்சபைப் பணிக்கு அனுப்பி வையுங்கள் என்று சபைத் தலைவர்களுக்கு சொல்லியிருக்கிறார் என்றால் அப்பணிக்குரிய அத்தனைத் தகுதிகளையும் பெற்றிருந்து அந்த ஊழியத்துக்கு இவர்கள் இருவரும் தயாராக இருந்ததுதான் அதற்குக் காரணம். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை.

இதுவரை அந்தியோகியா சபையைப் பற்றி நாம் பார்த்திருப்பதெல்லாம் அந்தச் சபையின் வளர்ச்சியையும், வல்லமையையும் நமக்கு விளக்குகிறது. இதையெல்லாம் நாம் கவனத்தோடு ஆராய்வதற்குக் காரணம் சுவிசேஷத்தின் மூலம் திருச்சபை அமைக்கும் பணியில் எத்தகைய திருச்சபையைக் கர்த்தர் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ளத்தான். சுவிசேஷப்பணி மூலம் திருச்சபை அமைப்பதற்கு அதைச் செய்யக்கூடிய, வேதம் எதிர்பார்க்கின்ற வளர்ச்சியும், வரங்களும், வலிமையும் ஒரு சபைக்கு இருக்க வேண்டும். இருக்க வேண்டியதெல்லாம் இல்லாத நிலையில் ஒரு சபை இன்னொரு ஒழுங்கான சபை உருவாவதற்கு ஏதுவாக அமைய முடியாது. வேதபூர்வமான சபைகளை அமைக்கும் பணியில் வேதத்தைப் பின்பற்றி வியர்வை சிந்தி உழைக்காமல், வெறும் ஆர்வக்கோளாருடன் ஊரெல்லாம் சபை அமைக்கத் திரிவதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. இப்படிச் செய்கிறவர்கள் இயேசு கிறிஸ்துவின் சபையை உருவாக்க முயலவில்லை; தங்களுடைய சுயநல நோக்கங்களுக்காக எதையாவது செய்யும் முயற்சியிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். இன்றைக்கு தன்னையே தாங்க முடியாத சபையென்ற பெயரில் கூடிவரும் கூட்டங்களும், ஒரே போதகரை மட்டும் கொண்டிருந்து ஆத்மீக ஞானமும்,

வளர்ச்சியும், வலிமையும் இல்லாத குழுக்களும், இரட்சிப்பு அடைந்திருக் கிறார்களா? என்று கேள்வியெழுப்பக்கூடிய அளவுக்கு ஆத்மீகத்துக்கான அறிகுறிகளைக் காணமுடியாதவர்களைக் கொண்டிருக்கும் குழுக்களும் திருச்சபை அமைக்கும் பணியில் நம்மத்தியில் ஈடுபட்டிருப்பதற்கும், வேதத் தில் தெளிவாக நாம் பார்க்கின்ற, சபை அமைப்புப் பணியில் கர்த்தர் பயன்படுத்தியிருக்கிற அந்தியோகியா சபைக்கும் எத்தனை பெரிய இடை வெளி இருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

3. **அந்த சபை புதிதாக நிறுவப்படப் போகிற ஊழியத்தைத் தாங்கக் கூடிய வசதியைக் கொண்டிருந்தது.**

திருச்சபை அமைப்புப்பணியில் கர்த்தர் பயன்படுத்திய அந்தியோகியா திருச்சபை அந்தப்பணியைச் செய்வதற்கான வரங்களை மட்டும் கொண்டிராமல் புதிதாக ஆரம்பிக்கப்போகிற ஊழியத்தைத் தாங்குகின்ற வசதியையும் கொண்டிருந்தது. ஏற்கனவே அதில் ஒன்றுக்கு மேற்பட்ட போதகர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களில் சிலராவது முழுநேர ஊழியத்தில் இருந்திருக்கலாம். அப்படியானால் சபை அவர்களுடைய தேவைகளை சந்தித்திருக்கிறது. அந்த சபை எண்ணிக்கையில் வளர்ந்ததாக வும் அங்கத்தவர்கள் தொகை அந்த சபையை மட்டுமல்லாமல் வேறு ஊழியங்களையும் தாங்கக்கூடிய அளவுக்கு காணிக்கை கொடுக்கக் கூடிய தாகவும் இருந்திருக்கிறது. பர்னபாவையும், பவுலையும் சுவிசேஷத்தைச் சொல்லி திருச்சபை அமைக்க கரம் வைத்து ஜெபித்து அனுப்பி வைத்த சபை கையில் பத்து ரூபாவை மட்டும் கொடுத்துவிட்டு கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று அறிவுரைகூறி அவர்களை அனுப்பிவைக்கவில்லை. இதைத்தான் இன்றைக்கு ஊழியம் என்ற பெயரில் பலர் செய்து வருகிறார் கள். அந்தியோகியா சபை புதிதாக ஆரம்பிக்கப்போகிற ஊழியத்தின் பொறுப்புக்களை ஏற்கனவே ஆராய்ந்து அலசிப் பார்த்து, கர்த்தரில் ஜெபத்தில் தங்கியிருந்து சபையாக போதகர்கள், உதவிக்காரர்கள், அங்கத்த வர்கள் அனைவரும் கலந்தாலோசித்து அந்த ஊழியத்திற்கான அத்தனை தேவைகளையும் நிறைவேற்றப்போவதாகத் தீர்மானம் எடுத்து அதன்பிறகே பர்னபாவையும், பவுலையும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆரம்பிக்கப் போகிற ஊழியத்தைக் கொண்டு நடத்துமளவுக்கு அவர்களுடைய சபைக்கு எல்லா வசதியும் இருந்திருக்கிறது. வீணாக அவர்கள் கர்த்தர் பார்த்துக் கொள்ளுவார் என்று சொல்லி கண்மூடித்தனமாக இந்த ஊழியத்தில் ஈடுபடவில்லை.

இந்த ஊழியத்தில் அந்தியோகியா சபைக்கு உதவ நிச்சயம் எருசலேம் சபை முன்வந்திருக்கலாம். உதவியும் செய்திருக்கலாம். அதை எவரும் மறுக்க முடியாது. இருந்தபோதும் அப்போ. 18ம் அதிகாரம் இந்தப் புதிய ஊழியத்துக்கான அத்தனை உடனடி நடவடிக்கைகளையும், பொறுப்புக் களையும் அந்தியோகியா சபையே மேற்கொண்டதாக நமக்குத் தெரிவிக் கிறது. இதிலிருந்து திருச்சபை ஊழியப்பணி பற்றி கர்த்தர் நமக்கு விளக்கு கின்ற பாடங்களை நாம் கற்றுக்கொள்ளத்தான் வேண்டும்: (1) ஒரு புதிய ஊழியத்தை ஆரம்பிக்க எந்த சபையும் அதற்குரிய தகுதிகளையும், வசதியையும் கொண்டிருக்க வேண்டும். வெறும் ஊழிய ஆசையையும்,

மற்றவர்களிடம் பெயர் வாங்க வேண்டும் என்ற ஆசையிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக பொட்டிக்கடை ஆரம்பிப்பதுபோல் சபை நிறுவ முயலக்கூடாது. தன்னையே தாங்க முடியாத ஒரு சபை இன்னொரு ஊழியத்தை ஆரம்பிக்க முயல்வது சமுத்திரத்தில் மூழ்கிக்கொண்டிருக்கிறவன் இன்னொருவனைக் காப்பாற்ற முனைவதுபோலத்தான் இருக்கும். ஒரு சபை வேத அடிப்படையில் முதலில் தன்னை வளர்த்துக்கொண்டு, அதன்பிறகே ஊழியத்தைப் பெருக்குவதில் ஈடுபட வேண்டும். இது உலகத்தானுக்குக்கூட தெரிந்திருக்கிற உண்மை. (2) புதிய ஊழியத்துக்கு அனுப்பப்படுகிறவர்களின் தகுதிகளை ஆராய்ந்து பார்த்து சரியானவர்கள் என்று தீர்மானித்து அவர்களை அனுப்புகிறபோது அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற சபை பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பலர் செய்வதுபோல் தங்களுடைய தேவைகளுக்காக அவர்களை ஜெபிக்கச் சொல்லி ஆலோசனை மட்டும் தந்து அனுப்பக்கூடாது. உண்மையில் கர்த்தர் ஒரு புதிய ஊழியத்தை நாம் ஆரம்பிக்க அனுமதித்தால் அதற்கான தேவைகளையும் நம் சபை மூலமாக நிறைவேற்ற வழியேற்படுத்தித் தருவார்.

**4. திருச்சபை ஊழியப்பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டவர்கள் அதற்கான சகல தகுதிகளையும் கொண்டிருந்தார்கள்.**

பர்னபாவும், பவுலும் மிகவும் திறமைசாலிகள். நல்ல விசுவாசிகள், பிரசங்கிகள். அந்தியோகியா சபை சுவிசேஷ ஊழியத்துக்கு அனுப்பப்பட வேண்டியவர்களைத் தேடி அலைய வேண்டிய நிலை இருக்கவில்லை. ஏற்கனவே பர்னபாவும், பவுலும் சபையில் வளர்ந்துகொண்டிருந்தார்கள். சபைத் தலைவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஊழியத்துக்கு புதியவர்கள் அல்ல; கத்துக்குட்டிகள் அல்ல. அனுபவமும், முதிர்ச்சியும் அடைந்திருந்த, சகல தகுதிகளையும் கொண்டிருந்த ஊழியக்காரர்கள். சுவிசேஷ ஊழியத்தில் ஏற்கனவே ஈடுபட்டு அதில் கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தவர்கள். பிரசங்க வரத்தைப் பெற்றிருந்து அதை சபையில் பயன்படுத்தி சபை வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள். சபை மக்களுக்கு அவர்கள் எத்தனை பெரிய பிரசங்கிகள் என்பது தெரிந்திருந்தது. ஆத்துமாக்களுக்கு ஆத்தும ஆலோசனைகளை வழங்கி அவர்கள் ஆத்தும விருத்தி அடையக்கூடிய ஊழியத்தில் ஏற்கனவே சபையில் ஈடுபட்டு சபைப் போதகர்களாக இருந்திருக்கிறார்கள்.

இத்தனைக்கும் மேலாக புதிதாக ஆரம்பிக்கப்படப்போகின்ற ஊழியத்துக்கான விசேஷ தகுதிகளையும் கொண்டிருந்தார்கள். புதிய பிரதேசங்களுக்குப் போய் சபைகளை நிறுவுவது என்றால் அதற்கு விசேஷ தகுதிகள் தேவை. போகின்ற இடங்களில் வாழ்கின்ற மக்களின் மொழி தெரிந்திருக்க வேண்டும். அந்த மக்களின் பண்பாடு தெரிந்திருக்க வேண்டும். அத்தகைய ஊழியத்துக்கான உடல் வளம் இருக்கவேண்டும். அந்த ஊழியத்துக்கு அவசியமான முதிர்ச்சியும், நுணுக்கங்களும் இருக்க வேண்டும். இந்த இருவரிடமும் இவை இருந்தன. பவுலுக்கு ஆறு மொழிகளுக்குக் குறையாமல் தெரிந்திருந்தது. பர்னபா சிப்புரு பிரதேசத்தைச் சேர்ந்தவரானதால் அந்த மக்களை நன்கு அறிந்திருந்தார். அந்த மக்களின் பண்பாடு இவர்கள் இருவருக்கும் புதிதல்ல. பவுலுக்கு யூத மக்களின்

கலாச்சாரத்தைத் தவிர கிரேக்க கலாச்சாரத்திலும் நல்ல பரிச்சயம் இருந்தது. பவுல் ரோம நாட்டுரிமையையும் கொண்டிருந்தார். இதனால் பவுலுக்கு ரோம ராஜ்ஜியத்தில் எங்கும் போய் வாழ்ந்திருக்க முடியும். பவுலுக்கு பல மொழி இலக்கணங்களும், பேச்சு வழக்கும் தெரிந்திருந்தது. அந்தந்த மொழி இலக்கியத்திலும் தேர்ச்சி அடைந்திருந்தார். பர்னபாவை யும் பவுலையும் நாம் விசேஷ பிறவிகளாகப் பார்க்கக் கூடாது இத்தனைத் தகுதிகளும் இருந்தவர்களை சுவிசேஷ ஊழியத்திற்காக அந்தியோகியா சபையைக் கொண்டு கர்த்தர் ஏன் பிரித்தெடுத்து அந்த சபை மூலமாக அனுப்பி வைத்தார் என்பதை நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவற்றின் மூலம் கர்த்தர் சுவிசேஷப்பணி பற்றி என்ன சொல்லுகிறார் என்பதை ஆவியானவர் மூலம் அறிந்துகொள்ள முயல வேண்டும். இவற்றில் இருந்து நாம் பின்வரும் விதிகளை அறிந்துகொள்ளுகிறோம்: (1) எந்த ஊழியத்தையும் ஆரம்பிக்கப் போகிறவர்கள் அதற்குரிய தகுதி களையும், வரங்களையும் கொண்டிருக்க வேண்டும். வெறும் குருட்டார்வம் மட்டும் இருந்துவிட்டால் போதாது. இந்தக் குருட்டார்வத்தைப் பலர் கர்த்தர் கொடுத்த அழைப்பாக எண்ணி வாழ்க்கையை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். விசுவாசிகளாக இருப்பதைத் தவிர இருக்க வேண்டிய வேறு எந்தத் தகுதியும் இல்லாமல் பீகாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் போகிறேன், மலைவாழ் மக்களுக்கு இயேசுவைப் போதிக்கப் போகிறேன் என்று அலைவதால் எந்தப் பயனும் இல்லை. (2) இருக்க வேண்டிய தகுதிகள் இருந்துவிட்டால் மட்டும் போதாது. அவற்றையும் நம்மையும் சபை அறிந்திருக்க வேண்டும். சபை நம்மை ஆராய்ந்து அங்கீ கரிக்க வேண்டும். கர்த்தர் ஊழியத்துக்கு அனுப்புகிற எவரும் சபையால் அங்கீகரிக்கப்பட்டே அனுப்பப்படுகிறார்கள். அதைத்தான் நாம் வேதத்தி லிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியானவர் சபையோடு உறவாடி அந்தியோகியா சபையை வழிநடத்தி அதன்படி அந்தச்சபையே பர்னபாவையும், பவுலையும் ஊழியத்துக்கு அனுப்பி வைத்தது.

**5. ஊழியத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டவர்கள் ஆரம்பத்தில் தங்களுக்குப் பரிச்சயமான இடங்களுக்கும், அருகாமையில் இருந்த இடங்களுக்கும் போனார் கள்.**

பர்னபாவும், பவுலும் முதலில் செலூக்கியாவுக்குப் போனார்கள். அதன்பிறகு அங்கிருந்து சிப்புரு தீவுக்குப் போனார்கள். பின்பு சாலமி பட்டணத்துக்கு வந்தார்கள். பின்பு பாப்போவுக்கு போனார்கள். இந்த இருவருடைய ஆரம்ப ஊழியங்களை ஆராய்ந்து பார்க்கிறபோது இந்தப்பிர தேசங்களெல்லாம் இவர்களுக்குப் பரிச்சயமில்லாத பிரதேசங்களல்ல என்பதை அறிந்துகொள்ளலாம். இந்தப் பிரதேசங்களுக்கு இவர்கள் ஏற்கனவே போயிருந்ததோடு இந்தப் பிரதேசங்களை நன்கு அறிந்திருந் தார்கள் என்பதையும் அறிந்துகொள்கிறோம். இவர்களுக்கு இந்தப் பிரதேச மக்கள் பாஷை, பண்பாடெல்லாம் நன்கு தெரிந்திருந்தது என்பதை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இதையெல்லாம் நான் நினைவூட்டுவதற்குக் காரணமுண்டு. ஏனெனில், ஆரம்பத்தில் ஊழியத்தைச் செய்து சபை அமைக்கப்போகும்போது பரிச்சயமான இடங்களுக்குப் போவதே புத்தி

சாலித்தனம். முற்றிலும் புதிய இடங்களுக்குப் போவதால் நமக்கு பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. தெரிந்த, அறிமுகமான பிரதேசங்களில் மக்களோடு நல்ல ஈடுபாட்டை உடனடியாக ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு. கேரியையும், ஜிம் எல்லியட்டையும் உதாரணங்காட்டி அவர்கள் புதிய இடங்களுக்குப்போகவில்லையா என்று விதண்டாவாதம் செய்வதில் பிரயோஜனம் இல்லை. அவர்கள் ஒருவிதத்தில் சாதாரண மனிதர்கள் இல்லை. உலகத்தில் ஒரு கேரியும், ஒரு ஜிம் எல்லியட்டையுமே பார்த்திருக்கிறோம். நாமெல்லோரும் அவர்களைப்போல வந்துவிட முடியாது. அத்தோடு அவர்கள் போன இடங்களில் படாதபாட்டைப் படவேண்டியிருந்ததை அவர்களுடைய வாழ்க்கை நமக்கு இன்றும் விளக்குகின்றது. ஜிம் எல்லியட் இளம் வயதிலேயே இறந்தார். அப்போஸ்தலர் நடபடிகள் 13ன் மூலம் கர்த்தருடைய வார்த்தை காட்டும் வழி அறிமுகமான பிரதேசங்களுப்போய் ஆரம்ப ஊழியத்தைச் செய்வதே சிறந்தது என்பதுதான்.

அத்தோடு, அருகாமையில் இருந்த இடங்களுக்கே பர்னபாவும், பவுலும் போயிருப்பதைப் பார்க்கிறோம். இதில் பல வசதிகள் உண்டு. முக்கியமாக அந்தக் காலத்தில் இன்றைக்கு நாம் கொண்டிருக்கும் வசதிகள் இல்லை. வெஸ்டர்ன் யூனியன் பேங்க் மூலம் அன்று பணம் அனுப்பக்கூடிய வசதிகள் இல்லை. ஈமெயில் மூலம் ஊழிய விபரங்களைக் கொடுக்கும் வசதிகள் இருக்கவில்லை. பர்னபாவும், பவுலும் சபை எட்டமுடியாத இடங்களுக்குப் போயிருந்தால் அந்தியோகியா சபையோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்திருக்க முடியாது. தேவையான உதவிகளைப் பெற்றுக் கொண்டிருக்க முடியாது. ஊழியத்துக்கு அனுப்பி வைத்திருக்கும் சபையின் உதவிகள் புதிதாக ஆரம்பமாகும் ஊழியங்களுக்கு ஆரம்பத்தில் அதிகம் தேவை. அருகாமையில் இருக்கும் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படும் ஊழியங்களுக்கு அந்த உதவிகளை அனுப்பி வைத்த சபையால் செய்ய முடியும்.

**6. ஊழியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டவர்கள் முதலில் பட்டணங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் போய் ஊழியத்தைச் செய்தார்கள்.**

ஆரம்பத்தில் சுவிசேஷத்தை சொல்லி சபை நிறுவ அனுப்பிவைக்கப்பட்ட பர்னபாவும், பவுலும் முதலில் நகர்ப்புறங்களுக்கும், பட்டணங்களுக்கும் போய் ஊழியம் செய்திருப்பதைக் கவனிக்க முடிகின்றது. அவர்கள் செலூக்கியா பட்டணத்துக்கும், சிப்புரு தீவுக்கும், சாலமி பட்டணத்துக்கும், பாப்போ பட்டணத்துக்கும் போய் பணிபுரிந்திருக்கிறார்கள் (13:4-6). அதற்குப் பிறகு பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்துக்குப் போனார்கள் (13:13). அதற்குப் பிறகு பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்குப் போனார்கள் (13:14). அங்கு பல எதிர்ப்புக்கு மத்தியிலும் ஊழியம் செய்த பிறகு இக்கோனியா பட்டணத்துக்குப் போனார்கள் (13:51).

இப்படியாக இவர்கள் பட்டணம் பட்டணமாக போகக் காரணமென்ன? ஆவியானவர் இதன் மூலம் நமக்கு வெளிப்படுத்துவதென்ன? பர்னபாவும், பவுலும் பட்டணங்களுக்குப் போனதற்கு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. இவ்வாறாக பட்டணங்களில் சுவிசேஷத்தைச் சொல்லுவதால் ஏனைய இடங்களைவிட அங்கு திருச்சபை அமைத்து அவை

வளர்வதற்கு பெரும் வாய்ப்புகள் இருந்தன. பட்டணகளில் பல தரப்பட்ட மக்களும் வாழ்வார்கள். அத்தோடு அவர்கள் நல்ல தொழில்களைச் செய்து வாழ்க்கையில் வளத்தோடும் இருப்பார்கள். அவர்கள் பெரும்பாலும் படிப்பறிவுள்ளவர்களாகவும் இருப்பார்கள். பெரும்பாலும் எல்லோருமே தங்களைத் தாங்களே தாங்கிக்கொள்ளக்கூடிய வசதியுள்ளவர்களாக இருப்பார்கள். சுவிசேஷத்தை பட்டணங்களில் முதலில் அறிவித்து திருச்சபை அமைத்தால் அமைக்கப்பட்ட சபை வெகுவிரைவிலேயே தன்னைத் தாங்கி நிற்கக் கூடியதாக இருக்கும். சபைப் போதகர்களைக் கவனித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அத்தோடு பக்கத்து நகரங்கள், கிராமங்களில் நிறுவப்படுகின்ற சபைகளைத் தாங்கக்கூடிய பொருளாதார வசதியையும் கொண்டிருக்கும். மேலும், பட்டணத்து மக்கள் படித்தவர்களாக இருப்பதால் அவர்களை போதக ஊழியத்துக்கு இறையியல் போதனைகளை அளித்து தயார் செய்யவும் வசதியாக இருக்கும். இப்படித் தயார் செய்யப்பட்டவர்களை நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் ஊழியம் செய்ய அனுப்பிவைக்க முடியும். பர்னபாவும், பவுலும் காரணமில்லாமல் பட்டணங்களுக்கு ஊழியம் செய்யப்போகவில்லை. அத்தகைய ஆலோசனைகளைத் தந்து அவர்களை அனுப்பி வைத்ததும் பரிசுத்த ஆவியானவரே. இதனால்தான் ஆதிசபை வேகமாக வளர்ச்சியடைந்தது. அவை தன்னிறைவுள்ளவைகளாகவும், வளர்ச்சியடைந்தவையாகவும் இருந்தன.

அப்போஸ்தலர் நடபடிகள் 13ல் நாம் காண்கின்ற இந்த வேத விதிமுறையை நாம் சாதாரணமானதாகக் கருதக்கூடாது. இன்றைக்கு தமிழினத்தைப் பொறுத்தவரையில் ஊழிய ஆசை பிடித்து ஊழியத்துக்கு வருகிறவர்களில் பெரும்பாலானோர் போவது கிராம ஊழியங்களையும், மலைவாழ் மக்களையும், ஆதிவாசிகளையும் தேடித்தான். ஆதிவாசிகள் மத்தியிலும், கிராமப்புறங்களிலும் தன்னைத் தாங்கி நிற்கக்கூடிய சபைகளை நிறுவுவது மிகவும் கஷ்டம். பொருளாதாரத்தில் வளர்ச்சியுறாத அந்தப் பகுதி மக்களில் அநேகர் வயிற்றுப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இப்பகுதிகளில் ஊழியம் செய்கிறவர்கள் காலத்துக்கும் எங்காவது ஊழியத்துக்காக கைநீட்டிக்கொண்டுதான் இருக்க வேண்டும். இதனால்தான் இன்றைக்கு வேத அறிவுள்ள, வல்லமையுள்ள, தன்னைத்தானே தாங்கி நிற்கக்கூடிய, போதக சமர்த்தராகிய போதகர்களைக் கொண்ட சபைகளை நாம் தமிழினத்தில் காணமுடியாதிருக்கின்றது. ஆரம்பத்தில் பட்டணங்களில் சபை முறையாக அமைக்கப்பட்டால் பின்னால் கிராம, நகர சபைகளை அவைகளால் தாங்கக் கூடியதாக இருக்கும். கிராம மக்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் சுவிசேஷம் சொல்லக்கூடாதென்றில்லை. திருச்சபையை வேதபூர்வமாக நல்ல முறையில் எங்கும் அமைக்க சரியான வழிகளைப் பின்பற்றவேண்டும். பட்டணங்களில் ஆரம்பித்து அங்கு நின்றுவிடாமல் நகர, கிராமப்புறங்களுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் போவது வேதம் காட்டித் தரும் வழி. (இன்னும் வரும்)

# ஜோன் நியூட்டன்

இந்த வருடம் ஜோன் நியூட்டன் (John Newton) கர்த்தரை அடைந்த இருநூறாவது வருடமாகும். இங்கிலாந்தில் அடிமை வியாபாரத்திற்கெதிராகப் போராடி வெற்றிகண்ட வில்லியம் வில்பர்போர்ஸ் (William Wiberforce) ஜோன் நியூட்டனின் நெருங்கிய நண்பர். இருவரும் இந்தப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவர்கள். இங்கிலாந்தில் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்ட இருநூறாவது ஆண்டும் இந்த ஆண்டுதான். ஆராதனைப் பாடல்கள் எழுதிப் புகழ் பெற்ற வில்லியம் கவுப்பர் (William Cowper) ஜோன் நியூட்டனின் இன்னுமொரு நெருங்கிய நண்பர். இருவரும் இணைந்து பல பாடல் களை எழுதியுள்ளனர். கப்பல்களில் பணிபுரிந்து பின்பு அடிமை வியாபாரக் கப்பல்களில் வேலை செய்து தானும் அடிமையாகி பாவத்தையும், துன்பத்தையும் அவற்றின் அடிமட்டம்வரைப் போய் ருசிபார்த்து கர்த்தரை அறியாமல் வாழ்ந்த நியூட்டனை இறையாண்மையுள்ள கர்த்தர் தன்னுடைய கிருபையால் இரட்சித்துப் பயன்படுத்தினார். அவருடைய மனந்திரும்புதல் பற்றிய சாட்சி கர்த்தரின் அளப்பரிய கிருபையை உலகத்திற்கு இன்றும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. நியூட்டன் எழுதிய நூல்களும், பாடல்களும் அவரை இன்றும் கிறிஸ்தவ உலகம் நினைவுகூரும்படிச் செய்துகொண் டிருக்கின்றன. இன்றைக்கும் கிறிஸ்தவர்களெல்லாம் பாரெல்லாம் கர்த்தரைப் பாடிப் புகழும் அவரெழுதிய “Amazing Grace How Sweet The Sound” என்ற பாடலை எவரால் மறக்க முடியும்.



ஜோன் நியூட்டன் (John Newton) 21ம் நாள் டிசம்பர் 1907ல் கர்த்தரிடம் சேர்ந்தார். இந்த வருடம் அவர் கர்த்தரை அடைந்த இருநூறா வது வருடமாகும். ஜோன் நியூட்டன் யார், அவரைப் பற்றி நாம் ஏன் சிந்திக்க வேண்டும் என்று சிலர் எண்ணலாம். Amazing Grace என்ற பிரசித்திபெற்ற பாடலை எழுதியவர் ஜோன் நியூட்டன். இந்த வருடம் Amazing Grace என்ற அந்தப் பாடலின் தலைப்பில் நியூட்டனின் அருமை நண்பரான வில்லியம் வில்பர்போர்ஸைப் (William Wilberforce) பற்றிய ஒரு படத்தை ஹொலிவுட் தயாரித்து வெளியிட்டிருக்கிறது. இங்கிலாந்தில் அடிமை வியாபாரத்தை ஒழிப்பதற்கு எதிராகப் போராடி வெற்றிகண்டவர் வில்லியம் வில்பர்போர்ஸ். இந்த இருவருமே சீர்திருத்த சுவிசேஷ இயக்கக் கிறிஸ்தவர்கள் (Reformed Evangelical Christians). இந்த வருடம் வில்பர்போர்ஸ் அடிமை வியாபாரத்தை ஒழித்த இருநூறாவது வருடமும்கூட. ஜோன் நியூட்டன் சுவிசேஷ இயக்கப் படைப்பாளிகளில் முதன்மையானவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த இருவரும் இன்னொரு பிரசித்திபெற்ற பிரசங்கியான ஜோர்ஜ் விட்பீல்டும் சுவிசேஷ இயக்கத்தை ஒன்றிணைத்து உலகமுழுவதும் சுவிசேஷம் பரவுவதற்கு சுவிசேஷ ஊழியத்தைப் பெலப்படுத்தினார்கள்.

இலண்டனில் வெப்பிங் என்ற இடத்தில் 1725ல் பிறந்தார் ஜோன் நியூட்டன். பெற்றோர்களுக்கு இவர் ஒரே பிள்ளை. அவர் ஏழு வயதாகு முன்பே தாயை இழக்க நேரிட்டது. பத்து வயதுவரை அவர் பாடசாலைக் குப் போனார். பதினொராவது வயதில் கப்பல் தலைவனாக இருந்த தன்னுடைய தந்தையுடன் அவர் மத்தியதரைக் கடலில் வியாபாரம் நிமித்தமாக ஐந்து பிரயாணங்களை மேற்கொண்டிருந்தார். பதினேழாவது வயதாக இருக்கும்போது அவருடைய தந்தை ஜமைக்காவில் அவருக்கு ஒரு தொழிலைத் தேடித் தந்தார். அங்கே சில வருடங்கள் அவர் வாழும்படி யாக திட்டம் இருந்தது. ஆனால், அந்தப் பிரயாணத்திற்கு சில நாட்களுக்கு முன்பாக தந்தை அனுப்பிய வேலை நிமித்தமாக அவர் கென்டுக்குப் (Kent) போக நேர்ந்தது. அந்த வேலையை நிறைவேற்ற அவருக்கு மூன்று நாட்களுக்கு மேல் தேவையிருக்கவில்லை. தன்னுடைய வாலிப வயதுத் துடிப்புக்கேற்ப தந்தையின் வேலையை முடித்த பிறகு அவர் செட்டம் (Chettam) என்ற இடத்தில் இருந்த இன்னொரு முகவரிக்குப் போனார். அங்கேயே அவருடைய தாய் இறந்த வீடிருந்தது. அந்த வீட்டில் இருந்த வர்கள் ஜோர்ஜ், எலிசபெத் என்ற கணவன் மனைவியும் அவர்களுடைய இரண்டு மகன்களும், பதினான்கு வயது நிரம்பிய "பொலி" (Polly) என்ற பெயரில் அழைக்கப்பட்ட அவர்களுடைய மகளான மேரியும். தந்தையோடு வளர்ந்து தனிமையை அதிகம் சந்தித்திருந்த நியூட்டனுக்கு இந்தக் குடும்பத்தின் நட்பு ஆனந்தம் தருவதாக இருந்தது. மிகவும் முக்கியமாக அவருக்கு பொலியின் மேல் அன்பு உருவாயிற்று.

நியூட்டனுக்கு பொலியின் மேலே ஏற்பட்ட காதலால் ஜமைக்காவுக்கு போகும் கப்பலைத் தவறவிட நேரிட்டது. அதற்கடுத்தவருடம் மீண்டும் அவர் மத்தியதரைக்கடல் பயணத்தை வியாபாரத்தின் காரணமாக மேற் கொள்ள நேரிட்டது. அதற்கடுத்த வருடம் அவர் எதிர்பாராதவிதமாக இங்கிலாந்தின் கடற்படையில் சேர நேரிட்டது. இது அவருடைய விருப்பத் துக்கு மாறாகவே நிகழ்ந்தது. இக்காலத்தில் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக் கும் இடையில் போர் உருவாகும் வாய்ப்பு இருந்தது. இதனால் இங்கிலாந் துக் கடற்படைக்கு படைவீரர்கள் தேவைப்பட்டனர். கடற்படையில் சேரு வதற்கு பலர் முன்வந்தபோதும் அதற்கும் மேலாக வீரர்கள் தேவைப்பட்ட தால் பலர் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டனர். நியூட்டனும் அதில் ஒருவர். 1744ம் ஆண்டு (H M S Harwich) ஹார்விக் என்ற கப்பலில் இருந்த 350 பேர்களில் ஒருவராக நியூட்டனும் இருந்தார். கடற்பிரயாணமும், கப்பல்களும் பரிச்சயமானவைகளாக இருந்தபோதும் நியூட்டன் இத்தனை மோசமான கப்பலை இதுவரை சந்தித்திருக்கவில்லை. அத்தோடு கப்பலில் கடுமையான ஒழுங்குக் கட்டுப்பாடும் பின்பற்றப்பட்டது. சில வாரங்களுக் குள் நியூட்டனின் தந்தையின் தலையீட்டால் கப்பல் தலைவன் நியூட் டனை கப்பலில் வேறிடத்துக்கு மாற்றினார். இதே ஆண்டு கப்பல் கென்டு க்கு அருகில் நிறுத்தப்பட்டது. இரண்டு தடவை கரைக்குப் போன நியூட் டன் நேரத்துக்கு கப்பலுக்குத் திரும்பத் தவறினார். அவர் பொலியைப் பார்க்கப் போயிருந்ததே இதற்குக் காரணம். இதனால் அவர் கப்பல் தலைவனின் கண்டிப்புக்கு ஆளானதோடு அவருக்குக் கொடுக்கப்

பட்டிருந்த சலுகைகளும் உடனடியாக நிறுத்தப்பட்டன. ஆனால், இதையும் விட மேலான துன்பம் அவருக்குக் காத்திருந்தது. அதே ஆண்டின் நவம்பர் மாதத்தில் கப்பல் ஆங்கிலக் கால்வாயை அடைந்தது. அங்கிருந்த 116 கப்பல்களில் ஒன்றாக நியூட்டன் இருந்த கப்பலுமிருந்தது. நியூட்டனின் கப்பல் இந்தியக் கடற்பிரதேசத்தில் பிரான்ஸுடன் போராடப் போவதற் கான ஆயத்தத்தில் ஈடுபட்டிருந்தது. அங்கிருந்த ஏனைய கப்பல்கள் வேறு பிரதேசங்களுக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தன. இந்தியக் கடற் பிரதேசத்துக் போனால் இன்னும் ஐந்து வருடங்களுக்கு இங்கிலாந்தைப் பார்க்க முடியாது என்று கேள்விப்பட்ட நியூட்டனுக்கு பொலியைப் பார்க்க முடியாமல் போகுமே என்ற துன்பத்தைத் தாங்க முடியவில்லை. அவ்வேளை ஏற்பட்ட பெருங்காற்றினால் கப்பல் பிரயாணத்திற்கு தடை யேற்பட்டு கப்பல் பிலிமத் என்ற இடத்துக்கு திருத்தப்பணிக்காக நிறுத்தப் பட்டிருந்தபோது நியூட்டன் கப்பலில் இருந்து இரகசியமாக ஒருவருக்கும் தெரியாமல் வெளியேறினார். கடற்படையைப் பொறுத்தவரையில் இது பெருந்தண்டனைக்குரிய குற்றம்.

ஜோன் நியூட்டன் முப்பது மைல்களுக்கப்பால் கப்பல் பிரயாண வேலை யில் ஈடுபட்டிருந்த தன்னுடைய தந்தையை சந்திக்க நடந்தே போகத் தீர்மானித்தார். தந்தை கப்பல் தலைவனாகவும், செல்வாக்குள்ளவராகவும் இருந்ததால் அவரோடு இருந்தால் தனக்குப் பிரச்சனைகள் வராது என்று எண்ணிய நியூட்டன் அவரைப் பார்க்க முதலில் போனார். அவ்வாறு அவர் போய்க்கொண்டிருந்தபோது வீதியோரங்களில் பணி புரிந்து கொண்டிருந்த போர்வீரர்கள் சந்தேகப்பட்டு அவரைக் கைது செய்தனர். அவர்கள் அவரை மறுபடியும் கப்பலுக்குக் கொண்டு போனார்கள். படையில் இருந்து தப்பியோடியவர் என்று கருதப்பட்டு கப்பல் தலைவன் அவருடைய பணியில் இருந்து அவரை நீக்கி எல்லோருக்கும் முன்னால் சவுக்கடி கொடுத்தார். இதனால் பெருங்கோபம் கொண்ட நியூட்டன் இந்த இக்கட்டில் இருந்து மீண்டபின் எப்படியாவது கப்பல் தலைவனைக் கொன்றுவிட்டு தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தார். இதை எப்படி நிறைவேற்றுவது என்று அவர் சிந்தித்துப் பார்த்தபோது, தான் மனதார நேசிக்கும் பொலி தன்னைப்பற்றி மிகவும் தரக்குறைவாக நினை த்து வாழ வேண்டுமே என்ற எண்ணம் மனதை வாட்டியதால் கப்பல் தலைவனைக் கொல்லும் எண்ணத்தைக் கைவிட்டார்.

ஒரு நாள் கப்பல் அட்லாண்டிக் கடலில் போய்க்கொண்டிருந்தபோது மெடீரா (Madeira) என்ற தீவை அடைந்தது. அப்போது நியூட்டன் தன்னு டைய கயிற்றுக் கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்தார். அந்த வழியில் வந்த ஒரு கப்பல் மாலுமி தன்னுடைய கத்தியால் அந்தக் கட்டில் கயிறை அறுத்துவிட நியூட்டன் தரையில் விழுந்தார். அவருடைய உறக்கம் நீங்கிய தோடு கடுங்கோபமும் கொண்டார். இருந்தபோதும் அவர் இருந்த நிலை யில் அவரால் அப்போது ஒன்றும் செய்யமுடியவில்லை. கப்பலின் ஓரத்தில் வந்து நின்று என்ன நடக்கின்றது என்று பார்த்த நியூட்டன் கப்பல் மாலுமி ஒருவன் இன்னொரு வியாபாரக் கப்பலுக்கு மாற்றப்படுவதைக் கவனித் தார். தானிருந்த கப்பலின் பாதுகாப்புக்காக வந்த கப்பல்களுக்கு இரண்டு

# சீர்திருத்த கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் நூல்கள்

- சீர்திருத்த விசுவாசம்
- திருச்சபை சீர்திருத்தம்
- பரிசுத்த வேதாகமம்
- தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜேம்ஸ் அடம்ஸ்)
- கிறிஸ்தவன் யார் (அல்பர்ட். என். மார்டின்)
- குடும்ப ஆராதனை
- கிறிஸ்தவ இறையியல் (அறிமுகம்)
- வேதாகமத்தை விளங்கிக் கொள்ளுவது எப்படி
- வியாக்கியானப் பிரசங்கம்
- ஏன் பிரசங்கம்!
- சுவிசேஷக் கோட்பாடும்,
  புதிய சுவிசேஷக் கோட்பாடும்,
- ஆதிசபையின் அற்புத வரங்கள் (ஜனவரி 2006)
- வில்லியம் கேரி (ஜனவரி 2006)
- பத்துக் கட்டளைகள் (ஜூன் 2006)
- சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (ஜூன் 2006)

இந்நூல்களைப் பெற்றுக்கொள்ள கீழ்வரும் முகவரிகளுக்கு எழுதுங்கள்.

**இவாஞ்சேலிக்கள் பாப்திஸ்து சபை**
**57/2 டி. பி. கே மெயின் வீதி பைகாரா, மதுரை 625004**
**தமிழ்நாடு, இந்தியா**

**கிருபை இலக்கிய சேவை**
**19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6**
**ஸ்ரீ லங்கா**

பயிற்சிபெற்ற மாலுமிகள் தேவைப்பட்டதால் வியாபாரக் கப்பலில் இருந்து அப்படிப்பட்ட இரண்டு மாலுமிகளைப் பெற்றுக்கொண்டு தானிருந்த கப்பலில் இருந்து இரண்டுபேரை வியாபாரக் கப்பலுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் நிகழ்ந்துகொண்டிருப்பதை அவர் உணர்ந்தார். ஆனால், ஹார்விக் கப்பல் அதுவரை ஒரு மாலுமியை மட்டுமே தெரிவு செய்திருந் தது. உடனடியாக நியூட்டன் தன்னை அனுப்பும்படிக் கப்பல் தலைவ னைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். இவன் போய்த் தொலைந்தால் நல்லது என்று கப்பல் தலைவன் எண்ணினானோ என்னவோ உடனடி யாக அதற்குத் தலையாட்டி சம்மதித்தான். அவசர அவசரமாகக் கைவச மிருந்த கொஞ்ச உடைகளையும், ஒரு புத்தகத்தையும் தூக்கிக்கொண்டு ஜோன் நியூட்டன் வியாபாரக் கப்பலுக்கு ஓடினார். இந்த சம்பவத்தைப் பற்றிப் பின்னால் நினைவுகூர்ந்த நியூட்டன், கர்த்தரின் பராமரிப்பே இத் தகைய சூழ்நிலையை உருவாக்கியதாகக் கூறுகிறார்.



வியாபாரக் கப்பலுக்குப் போய்ச் சேர்ந்த ஜோன் நியூட்டனுக்கு பின்னால் வாழ்க்கையில் என்ன நடக்கப் போகிறது என்று எதுவுமே தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் அவர்தான் வியாபாரக் கப்பலுக்குப் போக ஒத்துக்கொண்டிருந் திருப்பாரா? கொடிய துன்பங்களை அவருடைய வாழ்க்கையில் கொண்டுவரக் கடலில் காத்திருந்த அந்த வியாபாரக் கப்பலே பின்னால் அவருடைய பாவ வாழ்க்கையை மாற்றி அமைக்கவும் ஒரு விதத்தில் காரணமாக அமைந்தது. இதைப் பற்றியெல்லாம் எதுவும் அறிந்திராத ஜோன் நியூட்டன் இப்போதைக்கு கடற்படையில் இருந்து தப்பினால் போதும் என்று வியாபாரக் கப்பலைப் போய்ச் சேர்ந்தார்.

ஜோன் நியூட்டன் கால் வைத்துப் படியேறிய அந்த வியாபாரக் கப்பல் சாதாரண வியாபாரக் கப்பலல்ல. அடிமை வியாபாரத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் திளைத்திருந்த அந்தக் காலத்தில் இத்தகைய கப்பல்களே ஆப்பிரிக்கர்களை அடிமைகளாக மேற்கிந்திய தீவுகளுக்கும் அமெரிக்கா வுக்கும் கொண்டுபோய்க்கொண்டிருந்தன. வருடத்திற்கு ஆறாயிரம்பேர் அடிமைகளாக இந்நாடுகளுக்கு போய்ச்சேர்ந்தனர். அடிமைகளை இறக்கி விட்டு திரும்பிவரும்போது பருத்தி, ரம், சீனி போன்றவைகளை இந்தக் கப்பல்கள் ஏற்றி வந்தன. நியூட்டன் கால்வைத்த அந்தக் கப்பலில் ஆப்பிரிக் காவில் வியாபாரம் செய்து பெரிய மனிதனாகியிருந்த ஒரு வியாபாரி பயணம் செய்தான். அவனைப் போலப் பணக்காரனாக வரும் ஆசையில் அவனிடம் நியூட்டன் வேலைகேட்டு சேர்ந்தார். இப்படியாக பத்தொன்ப தாவது வயதில் நியூட்டனின் ஆப்பிரிக்க வாழ்க்கை ஆரம்பமானது.

பணக்காரனாகவும், பெரிய மனிதனாகவும் மாற வேண்டும் என்ற


நியூட்டனின் கனவெல்லாம் வெகு விரைவிலேயே தவிடுபொடியாகியது. அடிக்கடி வாழ்க்கையில் அவர் தனிமையை அனுபவிக்க நேர்ந்தது. வேலைக்கிருந்த எஜமானின் ஆப்பிரிக்க சின்ன வீட்டுக்காரி அவரை மிக வும் கொடுமைப்படுத்தினாள். சில வேளைகளில் அவர் பசியால் வாடி மரணத்தைத் தழுவும் நிலைமையையும் அடைந்தார். சில வேளைகளில் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த அடிமைகளைபோல இருக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. வாழ்க்கையை வளமாக்கும் என்று அவர் எண்ணியிருந்த ஆப்பிரிக்கா அவரைத் தனிமையின் ஆழத்திற்கும், பிறரால் தள்ளி வைக்கப்பட்டு வாழும் அனுபவத்தையுமே தந்தது. இக் காலப்பகுதியில் ஜோன் நியூட்டன் ஒழுக்கக் கேட்டின் எல்லைகளைத் தொட்டிருந்தார். இந்த அனுபவங்களைப் பின்னால் திரும்பிப் பார்த்த நியூட்டன் கர்த்தரின் பராமரிப்பே தன்னை இந்த அநுபவங்களுக்குள் கொண்டுபோயிருப்பதாக உணர்ந்தார். ஒழுக்கக் கேட்டின் எல்லைகளைப் பரிசோதித்து வாழ்ந்துகொண்டிருந்த தனக்குத் தனிமையில் பிறரால் வெறுக்கப்பட்டு வாழும் நிலையை ஏற்படுத்தி மற்றவர்களைப் பாவத் திற்குட்படுத்திவிடாமல் செய்வதற்காகவே கர்த்தர் இத்தகைய அனுப வங்களைப் பெறும்படிச் செய்தார் என்று நியூட்டன் எழுதியிருக்கிறார்.

> "மற்றவர்களைப் பாவம் செய்யத் தூண்டும் வசதியில்லாதபடி வாழ்க்கையின் கோரத்தின் ஆழத்தில் நான் இருந்தேன். என்னை மற்றவர்கள் உதாரணமாகக்கொள்ள முடியாத அளவுக்கு பிறரால் வெறுக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் வாழ்ந்தேன். ஆப்பிரிக்க நீக்ரோக்கள்கூட என்னைவிடத் மேலானவர்களாகத் தங்களைக் கருதி என்னோடு பேசுவதைத் தவிர்த்தார்கள்."

இதையெல்லாம் நியூட்டன் தன்னுடைய Authentic Narrative என்ற நூலில் விளக்கியுள்ளார். சிறுவயதில் ஜோன் நியூட்டன் தேவ பயத்தோடு வளர்ந்து வந்திருந்தார். அதற்குப் பிறகு அவர் உலகப்பிரகாரமான நூல் களை வாசிக்க ஆரம்பித்தார். அவை விஷத்தைப் போல அவருடைய வாழ்க்கையைப் பாதிக்க ஆரம்பித்தன. தேவ பயம் அவர் இருதயத்தை விட்டு அகன்றது. கடற்படையில் சேர்ந்து ஹார்விக் கப்பலில் பணிபுரிய ஆரம்பித்தபோது துப்புரவாக அவர் கிறிஸ்தவத்தை நிராகரித்திருந்தார். தூஷணமும், கெட்டவார்த்தைகளும் அவர் வாயிலிருந்து அக்காலத்தில் சரளமாக வந்துகொண்டிருந்தன. அது அவருடைய அன்றாட வாழ்க்கை மொழியாக இருந்தது

இந்தளவுக்கு இருதயம் பாழ்பட்டு கர்த்தரை நிராகரித்து ஜோன் நியூட்டன் வாழ்ந்துகொண்டிருந்தபோதும் கர்த்தர் அவரைக் கைவிட்டு விடவில்லை. நியூட்டனின் தந்தையும் அவரைக் கைவிட்டுவிடவில்லை. கப்பல் வியாபாரத்தில் ஈடுபட்டு பல கப்பல் தலைவர்களை நண்பர்க ளாகப் பெற்றிருந்த நியூட்டனின் தந்தை ஆப்பிரிக்கக் கரையோரம் வியா பாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் தன்னுடைய மகனைக் கண்டுபிடிக்க உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டிருந்தார். இறுதியில் 1747ம் ஆண்டு கிரேஹவுன்ட் (Greyhound) என்ற கப்பலின் தலைவன் ஜோன் நியூட்ட

னைக் கண்டு பிடித்து தன்னுடைய கப்பலில் ஏற்றிக்கொண்டார். அது இங்கிலாந்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. அந்தக் கப்பல் மிகவும் மோசமான நிலையிலிருந்தது. ஒரு வருடத்துக்குப் பிறகு அயர்லாந்து நாட்டுக் கடற்கரையை நெருங்கிக்கொண்டிருந்தபோது மலையுயரம் எழுந்த கடல் அலைகள் கப்பலைத் தாக்கி அதை மூழ்கிவிடும் நிலைக்குத் தள்ளின. 1748ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் நாள் தன்னுடைய பாய்மரங்கள் அனைத்தையும் இழந்த நிலையில் கப்பல் கடலில் மோசமான நிலையில் மிதந்து கொண்டிருந்தது. தன்னோடிருந்தவனைக் கடலுக்குப் பலிகொடுத் திருந்த நியூட்டன் கப்பலைக் காப்பாற்ற அதற்குள் வந்துகொண்டிருந்த தண்ணீரை பம்ப் செய்து வெளியேற்ற ஒன்பது மணிநேரங்கள் போராடிப் பெருமுயற்சி எடுத்தார். களைத்து சோர்ந்து போன நியூட்டன் ஒரு மணி நேர ஓய்வுக்குப் பின் கப்பல் சுக்கானைப் பிடித்து அதை சரி யான வழியில் செலுத்த அடுத்த பதினொரு மணித்தியாளங்கள் போராடினார். கரை தெரிவது போல் தெரிந்ததும் அவரோடு சேர் ந்து கப்பலில் மீதமிருந்த பன்னி ரெண்டு பேரும் குதூகலித்தனர். திடீரென்று காற்று திசைமாறி கப்பல் கரையை எட்டமுடியாமல் போனது. கப்பல் தலைவன் இதற்கு நியூட்டனே காரணம் என்று குற்றஞ் சாட்டி யோனாவைப் போலக் கட லில் தூக்கியெறியப் போவதாக மிரட்டினான். நியூட்டனின் வாழ்க்கையில் இது மறக்க முடியாத சம்ப வம். மரணத்திற்கும், வாழ்க்கைக்கும் இடையிலான போராட்டம் தன் வாழ்க்கையில் நடந்து கொண்டிருப்பதை நியூட்டன் உணர்ந்தார். பல துன்பங்களை நியூட்டன் வாழ்க்கையில் ஏற்கனவே சந்தித்திருந்தார். துன்பங்கள் அவருக்கு புதிதல்ல. துன்பங்கள் மட்டுமே ஒருவரை மனந்திரும்பச் செய்துவிடுவதுமில்லை. இருந்தபோதும் இந்தக் கடல் அநுபவம் அவரைக் கர்த்தரை நினைத்துப் பார்க்க வைத்தது. தனக்கு கிருபை பாராட்டும்படி அவர் கர்த்தரிடம் ஜெபித்தார். கர்த்தரை விட்டு வெகுதூரம் விலகிப் போயிருந்த நியூட்டன் தன் அநுபவத்தை எழுதும்போது, “நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆனால், விசுவாசத்தோடு என்னால் ஜெபிக்க முடியவில்லை. கர்த்தரிடம் உறவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி அவரை நாடி வரமுடியவில்லை. அவரை என்னால் தகப்பனே என்று கூப்பிட முடியவில்லை. காகங்களைப்போல என்னால் கரையத்தான் முடிந்தது. இருந்தபோதும் கர்த்தர் என்னைக் கைவிட்டு விடவில்லை. நீண்டகாலமாக என் வாழ்க்கையில் இருந்து நான் விலக்கி வைத்திருந்த அந்த இயேசுவைப் பற்றி நான் மறுபடியும் சிந்திக்க ஆரம்பித் தேன்” என்கிறார். கடலில் மறுபடியும் கப்பல் சரியான வழியில் போகும்



வகையில் காற்று வீசியது. இதனால் எல்லோரும் களிப்படைந்தபோதும் கப்பலில் எல்லோருக்கும் ஒருவாரத்திற்குரிய உணவே இருப்பதை உணர்ந் தனர். பசி எல்லோரையும் பயங்கரமாக வாட்டியது. இத்தனைத் துன்பங் களையும் கடந்து நான்கு வாரங்களுக்குப் பிறகு 1748ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் நாள் கப்பல் அயர்லாந்துக் கரையை அடைந்தது. இதைப்பற்றி எழுதும் நியூட்டன், "நம்முடைய ஜெபங்களைக் கேட்கின்ற ஒரு கர்த்தர் இருக்கின்றார் என்பதை இப்போதுதான் உணர ஆரம்பித்தேன்" என்று எழுதியிருக்கிறார். இந்தக் கடல் அநுபவமே நியூட்டன் மனந்திரும்பி இரட் சிப்பின் அநுபவத்தை அடையக் காரணமாக இருந்தது.

மூன்று வருடங்களுக்குப் பிறகு 1749ல் நியூட்டன் இங்கிலாந்துக்கு மறுபடியும் திரும்பி வந்தது அவருடைய தந்தைக்கும் நண்பர்களுக்கும் ஆச்சரியத்தைத் தந்தது மட்டுமல்லாமல் பேரானந்தையும் தந்தது. இத்தனைக் காலத்துக்குள் நியூட்டன் நேசித்த பொலிக்கு என்ன நடந்திருக்கும் என்று நம்மால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. அவள் திருமணம் செய்திருப்பாளா? நியூட்டனுக்காக காத்திருப்பாளா? இந்தக் கேள்விக ளெல்லாம் நியூட்டனின் உள்ளத்தில் எழாமலில்லை. நியூட்டன் ஆப்பிரிக் காவில் இருந்த காலப்பகுதியில் அவருடைய தந்தை பொலியின் குடும்பத் தைப் போய்ப் பார்த்திருந்தார். அத்தோடு தன்னுடைய மகனுக்கு, அவன் விரும்பினால் பொலியைத் திருமணம் செய்து தரும்படியும் அந்தக் குடும்பத் தைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர்களும் அதற்கு சம்மதம் தந்திருந்தனர். நியூட்டன் இங்கிலாந்துக்கு திரும்பி வந்ததும் அவருக்கும் பொலிக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்து 1750ல் திருமணமும் நடந்தது. நியூட்டனின் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் இத்தோடு ஆரம்பித்தது. கடலில் ஏற்பட்ட அநுபவம் அவரைக் கர்த்தரிடம் கொண்டுவந்திருந்தது. அவரு டைய பேச்சும், நடத்தையும் முற்றாக மாறியிருந்தது. நியூட்டனின் தந்தை தன்னுடைய நண்பரும் லிவர்பூல் நகர கப்பல் சொந்தக்காரருமான ஜோசப் மெனெஸ்ட்டியிடம் நியூட்டனுக்கு ஒரு வேலை தேடித் தந்தார். 1749ம் ஆண்டுக்கும் 1754ம் ஆண்டுக்கும் இடையில் நியூட்டன் நான்கு தடவைகள் கப்பல் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தார். நான்காவது தடவை அவர் கப்பல் தலைவனாக பணியாற்றினார். 1749ல் நியூட்டனுக்கு 24 வயதாகியிருந்தது. 1749ம் ஆண்டுக்குப் பிறகு அவருக்கேற்பட்ட சடுதியான நோய் அவருடைய கப்பல் பிரயாணங்களை 1754ல் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. இதனால் ஜோர்ஜ் மெனெஸ்டி லிவர்பூலிலேயே அவருக்கு ஒருவேலையை ஏற்படுத் தித் தந்தார். சுங்கவரி செலுத்துவதைத் தவிர்க்கப் பார்க்கும் கப்பல்களைப் பிடித்து வரி கட்டவைப்பதே அவரின் புதிய வேலையாக இருந்தது. ஆகஸ்டு மாதம் 1754ல் இந்த வேலையை அவர் ஆரம்பித்தபோது அவருக்கு முப்பது வயதாகியிருந்தது.

*(அடுத்த இதழில் நிறைவு பெறும்)*

---

**முன் அட்டைப் படம்:**

அட்டையில் இருநூறாவது ஆண்டு இறந்த தினம் காணும் ஜோன் நியூட்டனும் (மேல் படம்), அடிமை வியாபார ஒழிப்புக்கெதிராக உயிரைக்கொடுத்துப் போராடி வெற்றி கண்ட வில்லியம் வில்பர்போஸும் (கீழ் படம்).

# எனக்கு நானே ராஜா!

வேத போதனைகளை எந்தளவுக்கு பலர் தப்பாக விளங்கிக் கொள்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைத் தரவிரும்பு கிறேன். அநேக பாப்திஸ்து சபைகளிலும், சகோதரத்துவ சபைகளிலும் ஒரு போதகர் அல்லது மூப்பர் மட்டுமே சபைத் தலைவனாக இருந்து, எல்லோரையும் அதிகாரம் செலுத்தி வருவதை தமிழினத்துக் கிறிஸ்தவத்தில் எங்கும் காணலாம். அத்தோடு இந்த உள்ளூர் சபைகள் அத்தனையும் எங்கள் மீது எவரும் ஆட்சி செலுத்தக்கூடாது, நாங்கள் "சுயாதீன சபைகள்" என்ற கோரஸைப் பாடிக்கொண்டு தனக்குத் தானே இராஜாவாக இருந்து வருகின்றன. இத்தகைய எண்ணப் போக்கில் என்ன தவறு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்ப்பது அவசியம்.

கர்த்தரின் வேதம் ஒவ்வொரு திருச்சபையும் தன்னைத்தானே ஆளும் வசதிகளோடு இருக்கும்படி அறிவுறுத்துகிறது. அதாவது, வேதமுறைப்படி அமைந்த உள்ளூர் திருச்சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட போதகர்களும், உதவியாளர்களும் இருந்து திருச்சபை ஆளப்பட வேண்டும் என்பது இயேசு ஏற்படுத்தியிருக்கும் வழிமுறை. இதன்படி ஒரு சபையின் போதகர்களும், உதவியாளர்களும், அங்கத்தவர்களும் ஒருவருக்கொருவர் தங்களை ஒப்புக் கொடுத்து தங்களைக் கண்காணித்து வளர வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். பல போதகர்கள் அல்லது மூப்பர்கள் ஒரு சபையில் இருக்கும்படி கர்த்தர் எதிர்பார்ப்பதற்குக் காரணம் ஒரே போதகர் தானும் தவறு செய்து சபையையும் கெடுத்துவிடாமல் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளத்தான். பல போதகர்கள் இருக்கும்போது அவர்கள் ஒருவருக்கொரு வர் தங்களை ஒப்புக்கொடுத்து இருதயங்களைக் காத்துக்கொள்ள முடியும். அவர்கள் ஒருவருக்கொருவர் accountable ஆக இருக்க வேண்டும். அதாவது ஒருவருக்கொருவர் கணக்குக்கொடுக்க வேண்டும். அப்படி அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கும், ஊழியத்துக்கும் ஒருவருக்கொருவர் கணக்குக் கொடுத்து நடந்துகொள்கிறபோதுதான் சபையாருக்கு அவர்கள் வேதத்தைப் போதித்து வழிநடத்தமுடியும்; சபையார் வேதபோதனைகளுக்குக் கட்டுப்படும்படி எதிர்பார்க்க முடியும். போதகர்கள் பொறுப்புணர்வோடு மற்றவர்களுக்குக் கணக்குக் கொடுத்து வாழ்ந்து சபையாருக்கு உதாரண புருஷர்களாக இருக்கும்போது எந்த சபை மக்களாவது அவர்களுடைய போதனைகளைப் பின்பற்றி நடக்காமல் இருப்பார்களா?

ஓர் உள்ளூர் சபையில் ஒருவருக்கொருவர், போதகர்களில் இருந்து அங்கத்தவர்கள்வரை கணக்குக் கொடுத்து நடக்கும் கடமையை கர்த்தர் நியமித்திருக்கும்போது "சுயாதீனம்" என்ற பெயரில் எதேச்சாதிகாரமாக நடந்துகொள்ள போதகர்களுக்கோ அல்லது அங்கத்தவர்களுக்கோ உரிமை

இல்லை. எல்லோருமே, வேதத்திற்கும், கர்த்தருக்கும், ஒருவருக்கொருவரும் கட்டுப்பட்டு கணக்குக் கொடுத்து நடக்க வேண்டும். ஆகவே, மெய்யான உள்ளூர்சபை சுயாதீனத்தில் இது அடங்கியிருப்பதைப் பலர் உணராது போகிறார்கள். உண்மையில் கர்த்தருடைய சிருஷ்டியில் எவரும் தனக்குத் தானே இராஜாவாக இருப்பதைக் கர்த்தர் விரும்பவில்லை. அதற்குப் பெயர் “சுயாதீனமும்” இல்லை. சிருஷ்டிகள் எல்லாமே கர்த்தரின் ஆட்சிக்குக் கீழிருக்கின்றன. அவருடைய ஆட்சிக்குக் கீழ் வராதவைகளோ, வராதவர்களோ இல்லை. அவருடைய ஆட்சிக்குக் கீழ் நாமெல்லோருமே எல்லா இடங்களிலும் ஏதாவதொரு அதிகாரத்துக்குட்பட்டவர்களாகவே இருக்கிறோம். உலக நாடுகளும் தங்களுடைய சுயாதீனத்தைக் காப்பாற்றிக் கொள்ளவே “ஐக்கிய நாடுகள் சபையை” ஏற்படுத்தி அதற்குக் கட்டுப்பட்டு நடந்துவருகின்றன. நாட்டு மக்கள் அரசாங்கங்களுக்கு கட்டுப்படவேண்டியிருக்கிறது, போலிஸுக்குக் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. பிள்ளைகள் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. நாம் வேலைத்தளங்களில் நம்முடைய எஜமானர்களுக்கு கட்டுப்பட வேண்டியிருக்கிறது. கணவனுக்கு மனைவி கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, எந்த சமுதாயத்திலும் ஏதாவது ஒரு அதிகாரத்தின் கீழ் வராத எந்த மனிதனையும் நாம் பார்க்க முடியாது. நான் ஓட்டும் கார் எனக்கு சொந்தமாக இருந்தாலும் தெருவில் இறங்கிவிட்டால் தெருச் சட்டங்களுக்கு கட்டுப்பட்டே அதை நான் ஓட்டவேண்டியிருக்கிறது. என்னுடைய கார்தானே என்று தெருவில் எனக்கு நானே ராஜாவாக இருக்க முடியாது. அப்படி நான் நடக்கும்போதே தெருவில் போகும் மக்களுக்கும், ஏனைய வாகனங்களுக்கும் நான் ஆபத்தாக இருந்துவிடுவேன். எனக்கு நானே ராஜா என்ற மனப்பான்மைக்கு உண்மையில் பெயர் “எதேச்சாதிகாரம்”.

இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் எந்த ஒரு திருச்சபையும் “சுயாதீனம்” என்ற வார்த்தையைப் பயன்படுத்தி யாருக்கும் கட்டுப்படாமல் நடப்பது எதேச்சாதிகாரம் என்பதை உணர்த்தத்தான். அதைக் கர்த்தர் விரும்பவில்லை. உலகத்தில் எந்த உள்ளூர் சபையும் முழுத் தன்னிறைவோடு ஒருபோதும் இருந்துவிட முடியாது. ஏனெனில், ஒரே திருச்சபைக்கு கர்த்தர் எல்லா வரங்களையும் ஒட்டுமொத்தமாகக் கொடுப்பதில்லை. சில சபைகள் சிறப்பான வரங்களைப் பெற்றிருக்கும். வேறு சில சபைகள் இன்னொரு சபையில் இராத சில வரங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு சபையும் இந்த உலகத்தில் ஏனைய சபைகளில் ஏதாவதொரு விதத்தில் தங்கியிருக்கும்படியே கர்த்தர் நியமித்திருகிறார். முக்கியமாக தன்னைப் பணவிஷயத்தில் அங்கத்தவர்களின் காணிக்கை மூலம் தாங்கி நடத்த முடியாத சபைகள் ஒருநாளும் “சுயாதீனத்தைப்” பற்றிப் பேசவே கூடாது. ஒரு போதகரைக்கூட காணிக்கை மூலம் தாங்கிக் கொள்ள முடியாதபடி இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் சபைகளை நிறுவுவதில்லை. அப்படி சபைகள் அமைக்கப்பட்டு இருந்துவருமானால் அது மனிதன் விட்ட தவறாலேயே அவ்வாறு நடந்து வருவதாக இருக்கவேண்டும். மெய்ச்சீடர்களாக இருந்து விசுவாசத்தோடும், பக்தியோடும், காணிக்கைகளைக் கர்த்தருக்கு கொடுத்து வரும் அங்கத்தவர்களை ஆரம்பத்திலேயே கொண்டு

சபைகளை அமைத்தால் குற்றுயிரும், குலையுயிருமாக இன்றைக்கோ, நாளைக்கோ என்ற நிலையில் இருக்கும்படி சபைகள் எப்படி உருவாகும்? வேலை செய்து தங்களையும், குடும்பத்தையும் கவனிக்க வக்கில்லாதவர்களே ஊழியம் என்ற பெயரில் ஓரிரு குடும்பங்களை மட்டும் வைத்துக்கொண்டு பணத்திற்காக இங்கும் அங்கும் அலைந்து சபை நடத்துகிறோம் என்ற பெயரில் சுயநல வாழ்க்கை வாழ்ந்து வருவார்கள். இந்த மாதிரியான "ஊழி யங்கள்" கர்த்தரின் பெயருக்கு இழுக்குத் தேடித்தருவனவாயிருக்கின்றன. சுவிசேஷத்தின் வல்லமையையும், கிறிஸ்துவின் இறையாண்மையையும் இவற்றில் பார்க்க முடியாது. தன்னையே தாங்கி நிற்கமுடியாத இத்தகைய ஊழியங்கள் சுவிசேஷத்தை எப்படிச் சொல்லி பாவிகளைக் கரைசேர்க்கப் போகின்றன? இத்தகைய ஊழியங்கள் தங்களை "சுயாதீன சபைகள்" என்று அழைத்துக்கொண்டு தன்னிச்சையாக நடந்து வருவது மிகவும் பரிதாபம். இப்படிப்பட்ட ஊழியங்களை புதிய ஏற்பாட்டில் நாம் பார்ப்பதில்லை.

உண்மையில் கிறிஸ்துவின் எந்த நல்ல மெய்ச் சபையும், அது தன்னைத் தாங்கி நிற்கக்கூடிய நிலையில் இருந்தாலும்கூட அதே சத்தியத்தைப் பின் பற்றுகிற ஏனைய சபைகளை மதித்து அவற்றின் வரங்களையும், வல்லமை களையும் பயன்படுத்திக்கொள்ளும். அவற்றோடு ஐக்கியத்தைப் பெலப்படுத் திக் கொள்ளும். ஐக்கியத்தில் இருக்கும் சபைகளுக்கு கணக்குக் கொடுத்து பொறுப்போடு நடந்துகொள்ளும். தன்னால் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியும் என்ற மனப்பான்மையை அது கொண்டிராது. அதன் போதகர்கள் தாழ்மையோடு சக சபைகளை மதித்து நடந்துகொள்ளுவார்கள். ஊழியத் தின் நிமித்தம் சக சபைகளின் உதவியைப் பெற்றிருந்தால் அவர்களுக்கு நேர்மையாக கணக்குக் கொடுத்து அச்சபை நன்றியோடு நடந்து கொள்ளும். அப்போஸ்தலர்கள் நம்மத்தியில் இன்றைக்கு இல்லாதபோதிலும், அவர் களைப்போல அதிக வரங்களைக் கொண்டவர்களைக் கர்த்தர் சபைகளுக்கு இன்றைக்கும் அளிக்கிறார். அதாவது, நம்மைவிட பிரசங்க வரத்திலும், போதிக்கும் வரத்திலும் சிறந்தவர்களையும், ஊழியத்தில் முதிர்ச்சி அடை ந்தவர்களையும் கர்த்தர் தன் சபைக்கு அளிக்கிறார். அத்தகையவர்களைக் கொண்டிருக்கும் சபைகள் ஏனைய சபைகளைவிட வல்லமையுள்ளவை களாக இருக்கும். அத்தகைய சபைகளைக் கர்த்தர் ஏனைய சபைகளைவிட அதிகம் பாவிப்பதிலும் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. இதனால் ஏனைய சபைகள் தரத்தில் குறைந்தவையாகிவிடாது; வலிமையற்றவை யாகிவிடாது. வளர்ந்த, அதிக வரங்களைப் பெற்றிருக்கும் சபைகளை நமது சபையின் வாழ்க்கையில் கர்த்தர் பயன்படுத்துவாரானால் அதனால் நாம் தாழ்ந்து விடுவதுமில்லை; நம்முடைய உள்ளூர் சபை "சுயாதீனத்துக்குப்" பங்கம் வந்துவிடுவதும் இல்லை. பவுலின் ஊழியத்தைப் பயன்படுத்திக் கொண்டதாலும், அவரின் மேற்பார்வையைப் பெற்றுக்கொண்டதாலும் எபேசு சபை தாழ்ந்துவிடவில்லை; பவுலை அனுப்பிவைத்த அந்தியோ கியா சபை உயர்ந்துவிடவில்லை. சுயநல லாபத்திற்காக ஒருவரையும் சாராது, எவருக்கும் கணக்குக்கொடுக்காது தன்னிச்சையாக நடந்து உலகத் தின் கண்களில் உப்பைத் தூவுவதற்காக நாங்கள் "சுயாதீன சபை" என்ற பல்லவியைப் பாடிவருகிறவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்.

# சத்திய வேதம்

சத்தியவேதத்திற் கின்று சுத்தமாய் மதிப்பில்லை
சிந்தித்து பயத்தோடு படிப்பாரும் யாருமில்லை
அர்த்தம் தெரியாமலதன் போதனை புரியாமல்
அழுக்குப்படாமல் வெள்ளைத் துணியில் மறைத்து
கல்லை வணங்குவதுபோல் கும்பிட்டு வரும்
கூட்டம் மட்டுந்தான் அதிகம் நம்மினத்தில்

கதவு மூடியிருந்த அறைக்குள் நுழைந்து
கர்த்தர் என்னோடு பேசினார் இன்று
பரிசுத்த வெண்ணங்கி அணிந்து வந்து
பளீரென்றடித்த வெளிச்சத்தில் நின்று
பரமன் இட்டார் கட்டளை எனக்கென
பல்லவி பாடுவோர் கூட்டமே அதிகம்

வேதம் உலகில் இல்லாத காலத்தில்
கர்த்தர் முகமுகமாய்ப் பார்த்துப் பேசினார்
தம் சித்தம் நாம் அறிய தயவாய் முன்வந்து
தானே நல்வழியும் நலமாய்க் காட்டினார்
சகலதும் கிறிஸ்துவில் சிலுவையில் முடிந்தபின்
அவர் சித்தம் எழுத்தில் நிறைவான தினிதாய்

கர்த்தரின் சித்தம் நமக்கின்று
கனவில் வருவதில்லை; நட்டநடு இரவில்
இயேசு நமக்கு தரிசனமும் தருவதில்லை
கையில் இருக்கும் வேதத்தைத் தியானித்து
கருத்தாய் ஜெபத்தோடு படித்தால் மட்டுமே
அறியலாம் நலமாக தேவ சித்தத்தை

சத்திய வேதம் காட்டாத பரிசுத்த
வழியொன்றில்லை இந்த உலகத்தில்
நாம் போக வேண்டிய நலமான பாதையை
நேசர் அதன் மூலம் நமக்குக் காட்டுவார்
ஆவியின் வழிப்படி அறிய வேண்டியதெல்லாம்
அதிலிருக்கு படியுங்கள் அருமையாய் வேதத்தை

– சுபி






அருமையான ஆசிரியர் ஐயா, திருமறைத்தீபம் என்ற உங்களுடைய பத்திரிகையை நான் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. "எங்கே, எப்படி, யாருக்குக் கொடுப் பது காணிக்கை?" என்பது பற்றிய சரியான விளக்கத்தை உங்கள் பத்திரிகை வாயிலாக வாசித்துப் பார்த்தேன். நீங்கள் எழுதியுள்ள கருத்துக்கள் யாவும் நூற்றுக்கு நூறு உண்மையும், எல்லாவித அங்கீகரிப்புக்கும் மேலானது. உங்களுடைய கருத்துக்களும், விளக்கங்களும் இனியாவது தேவையற்ற விதத்தில் காணிக்கையை அள்ளிக்கொடுக்கும் வழக்கத்தில் இருந்து மக்கள் மனதை மாற்றட்டும். இதுவே வருங்காலத்தில் கர்த்தரின் ஆசீர்வாத மாக அமையட்டும். மேலும் திருமறைத்தீபம் மூலமாய் நானும், எனது வீட்டாரும் இறைவனுடைய உண்மையான வார்த்தைகளை வாசித்துப் பயனடைய உதவியாக தொடர்ந்து பத்திரிகையை அனுப்பித் தாருங்கள் (இதுவரை பெறவில்லை). வில்லியம் கேரி, சார்ள்ஸ் ஸ்பர்ஜன் இருவரைப் பற்றிய நூல்களையும் அனுப்பி வையுங்கள். அவற்றின் விலையையும் தெரிவியுங்கள். - ***வி. ஜெயராஜ், தமிழ்நாடு***




நான் சபை ஐக்கியத்தில் உள்ள சகோதரரிடம் உங்கள் பத்திரிகையை வாங்கிப் படித்தேன். பத்திரிகை ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கு பிரயோஜனமாயிருக்கிறது. வேதத்தில் அனேக, இன்று மறைக்கப்பட் டுள்ள காரியங்களை தேவன் உங்கள் மூலமாக வெளிப்படுத்தி வருவ தற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். நீங்கள் எழுதி வரும் உபதேசங்கள் சத்தி யத்தை அறிந்துகொள்ளுவதற்கு எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. வேதத்தை யும் அநேகர் எழுதிய நூல்களையும் நாம் ஏன் வாசிக்க வேண்டும் என்பதை விளக்கும், "சிந்தனை வளர வாசிப்பு அவசியம்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை எனக்கு மிகவும் பிரயோஜனமாயிருந்தது. இந்தக் கடைசி காலத்தில் உங்களைச் சந்திக்க தேவன் கொடுத்த சந்தர்ப்பத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். கடிதம் கிடைத்தவுடன் அடியேனுக்கு பத்திரிகையை அனுப்பி வைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். - ***சி. பாலு, தமிழ்நாடு***


## முன்னைய இதழ்கள் பற்றிய அறிவிப்பு:

*முதல் முதலாக பத்திரிகையைப் பெற்று வாசிக்கின்ற வாசகர்கள் ஆரம்பத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழ்களையும் அனுப்பிவைக்க முடியுமா, என்று அடிக்கடி எழுதிக் கேட்டு வருகிறார்கள். உண்மையில் அப்படி எனக்குத் தெரிந்த எந்தப் பத்திரிகையும் ஆரம்பத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழ்களை அனுப்பித் தருவ தில்லை. அப்படி மறுபதிப்புச் செய்து அனுப்பிவைப்பதென்பது அதிகமான செல வேற்படுத்தும் காரியம். அச்சிடும் செலவு மட்டுமல்லாமல், தபால் செலவும் மிக அதிகம். கர்த்தருடைய கிருபையினால் இந்த ஊழியத்தில் ஆர்வமுள்ள ஒருவரின் உதவியால் நாம் பழைய இதழ்களை மறுபடியும் அச்சிட்டு வைத்திருக்கிறோம். படிக்க வேண்டும் என்று கேட்டு எழுதுகிறவர்களுக்கு அவற்றை அனுப்பி வருகி றோம். இருக்கின்ற இதழ்கள் அனைத்தும் முடிவடைந்தவுடன் மறுபடியும் அவற்றை அச்சிடும் எண்ணம் எங்களுக்கு இல்லை. இருப்பவற்றை நாம் பல வருடங்களுக்குத் தொடர்ந்து வைத்திருப்பதையும் விரும்பவில்லை. ஆகவே, ஆரம்பத்திலிருந்து வெளி வந்த இதழ்கள் இல்லாத வாசகர்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் தயவுசெய்து உடனடியாக சரியான முகவரியை பின்கோட்டுடன் எழுதி எங்களுக்கு அனுப்பி வைக்கவும். 2008ம் ஆண்டுக்குப் பிறகு பழைய இதழ்களை அனுப்பிவைப்பதை நிறுத்திக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம். - ஆசிரியர்.*


# வாசித்துவிட்டீர்களா!





ஆதிசபையின் அற்புத வரங்கள்




சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்




வில்லியம் கேரி




பத்துக் கட்டளைகள்

**கிடைக்குமிடம்:**

இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை

57 / 2, டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004

தொலைபேசி எண்: 9994181010

கிருபை இலக்கிய சேவை

19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா

மலர் 13 அக்டோபர் - டிசெம்பர் 2007 இதழ் 4

1. அவதூறு சொல்லாதே!

2. நெதர்லாந்தில் சீர்திருத்தம்

3. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

4. கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம் - 6

5. ஜோன் நியூட்டன்

6. எனக்கு நானே ராஜா!

7. சத்திய வேதம் - கவிதை

8. எண்ணங்கள்!